அரியாலை சனசமூக நிலைய

# வெள்ளிவிழா மலர்

1974




University of Jaffna
790.68
ARI
250119(AR; Main)

YALAI COMMUNITY CENTRE

# Silver Jubilee Souvenir


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## டீசல் பம்ப் - இன்ஜெக்ரர்

வடமாகாணத்தில் திருத்துவதில்

கைதேர்ந்தவர்கள்






## மோட்டார் லொறி இயந்திரம்

ரப்பற் - ரைமிங் செய்வதில்

ஜேர்மனி பயிற்சிக் கல்லூரியில்

பயின்றவர்களால்

திருத்திக் கொடுக்குமிடம்

# கஜின்ஸ்சன் எவ். ஐ. பி. வேக்ஸ்

2, புறூடி லேன், அரியாலை, யாழ்ப்பாணம்.

உரிமையாளர்: K துரைராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Space Donated by

# N. Vaithilingam & Co. Ltd.,

138, K. K. S. Road,

JAFFNA.

2038
AR
790.68
ART
UNIVERSITY OF JAFFNA LIBRARY
UNIVERSITY OF JAFFNA LIBRARY
ARCHIVES
University of Jaffna
250119
Library
250119
250119
Donated by:-
Mr. K. C. KULARATNAM
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
N/A
ARCHIVES

**வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்!**

வட இலங்கை பூராவும் கவர்ச்சிகரமாக மக்களைக் கவரும் வகையில்

**உங்கள் வர்த்தகம் பெருக**

**ஒலி விளம்பரம் செய்பவர்கள்**

**' மணிக்குரல் '**

*வர்த்தக விளம்பர சேவையினர்,*

**உங்கள் மங்கள வைபவங்களைச் சிறப்பிக்க**

**அழைத்து மகிழுங்கள்**

**' மணிக்குரல் '**

*ஒலி அமைப்பாளர்களை*

விபரங்கட்கு:

# மணிக்குரல் வர்த்தக விளம்பர சேவை

( ஒலிபரப்பு அலுவலகம் )

**மக்கள் நவீன சந்தை, — யாழ்ப்பாணம்.**

*Remember,*

**" ANEES " Products**

The household name for

**VARIETY GARMENTS**

# ANEES TRADERS

**41, JUMMAH MOSQUE LANE, JAFFNA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவநாகரீக உலகம் வரவேற்கும்

சகல வீட்டுத் தளபாடங்களுக்கும்

# ஸ்ரான்லி பேணிஸிங் மார்ட்

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு

நாயன்மார்கட்டு வைத்திய நிலையம்

செம்மணி ரோட்,
யாழ்ப்பாணம்.

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AUTOS

**FOR**

**Glassware**

**Tumblers, Bottle lamps, Chimneys. Cooker Bottles**
**Ice Cream Cups, Water Carefe.**


*Distributors For:*

## HALEYS LTD

# AUTOS LTD

**JAFFNA.**

---



நாடக் அமைப்பாளர்களுக்கு!

சிறந்த முறையில்

உடை அலங்காரங்களுக்கும்

காட்சி அமைப்பு,

சீன், மேக்கப்

ஆகியவற்றுக்கும்

எம்மை நாடுங்கள்:

**ஸ்ரனிஸ்**

றக்கா வீதி,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message

I am indeed very happy to shower my blessing on the Ariyalai Community Centre at a time when this Centre is celebrating its Silver Jubilee. The Village of Ariyalai is not new to me and I am happy to say most of the eminent people from this area have been taking the leadership in most matters in this part of Sri Lanka. It is nothing but just for me to state here that I myself dedicated to the service of our people following the example set by most of the leaders of Ariyalai such as Kasipillai, Kathiravelu, Kanagaretnam and lately my most respected Dear Mr. C. Ponnampalam, Advocate.

I am alse happy to say that I carry the name which is common in the Ariyalai Village thereby I fel there must have been some affinity in the past between Ariyalai Village and my village which should have been influenzed my parents to name me as such. Further, I have closely watched your Village and I am very happy to say that the people of Ariyalai are very industrious and highly social and as a spirit of service embodied in them.

—May God bless you all and bless the Community Centre to continue to build up and maintain the heritage left behind by the elders of the area.

*C. Arulampalam*
M. P. FOR NALLUR
&
POLITICAL AUTHORITY
JAFFNA DISTRIOT.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

அரியாலை சனசமூக நிலையத்தினரின் வெள்ளிவிழாக் கொண்டாட்டங்களை முன்னிட்டு எனது நல்லாசிகளையும்; — நல்வாழ்த்துக்களையும் அந்நிலையத்தினருக்குத் தெரிவித்துக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

அரியாலை சனசமூக நிலையத்தினர் குறிப்பாக யாழ். நகர மக்களுக்கு அதிலும் விஷேடமாக அரியாலை மக்களுக்கு ஆற்றிய அளப்பரிய நற்பணிகளை யான் நேரடியாக நன்கு அறிவேன். இன்நிலையத்தினர் தம் நற்பணிகள் மூலம் நிலைநாட்டிய பல சாதனைகள் இலங்கையில் உள்ள பல சனசமூக நிலையங்களின் சாதனைகளிலும் பார்க்க உயர்ந்ததாக மதிக்கப்படுகின்றது.

''என் கடன்பணி செய்து கிடப்பதே'' உன்ற வாக்கிற்கு இணங்க இன்நிலையத்தினர் பணிபுரிகின்றனர். விளையாட்டு, சுகாதாரம், கலை நடனம், நாடகம், சமூகசேவை, சிரமதானம் ஆகிய எந்தத்துறையை எடுத்தாலும் அந்தந்தத்துறைகளில் எல்லாம் முன்னோடியாகவே இன்நிலையத்தினர் திகழ்கின்றனர். இதற்கு முக்கிய காரணம் இன் நிலையத்தினரின் கடமைஉணர்ச்சியும், ஒற்றுமையும், விடாமுயற்சியுமாகும்.

அரியாலை சனசமூக நிலையத்தினர் கடந்த 25 ஆண்டுகளாக வெற்றிகரமாக ஆற்றி வரும் சிறந்த பணிகளைமென்மேலும் தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு மக்களுக்கு ஆற்றவேண்டுமெனவும் அவர்களது முயற்சி, வெள்ளிவிழாக் கொண்டாட்டம் சிறப்பாக நடைபெறவும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்

18—3—74.

அல்பிரட் த. துரையப்பா
மாநகர முதல்வர்
யாழ். மாநகராட்சி மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



THE KACHCHERI,
JAFFNA.
26th, MARCH 1974

# Message

I am happy to send this message on the occasxion of the Silver Jubilee Celebrations of the Ariyalai Community Centre.

I am aware that this Association has contributed much to the welfare of the people of the area. An annual event of this Community Centre is the Agricultural and Industrial Exhibition. The women's section of this institution is conducting classes in Home Science. An association of this type needs all the encouragement it can get from the general public.

I wish to congratulate the members of the Association and also wish them good luck.

*Wimal Amarasekera*
Government Agent, Jaffna District.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message



**D. R. O's Office,**
**Jaffna. 18-4-74.**

*I have great pleasure in sending this brief message on the occassion of the Silver Jubilee Celebrations of the Ariyalai Community Centre.*

*Contribution made by this Community Centre in the field of Sports and community development is note worthy and commendable. One cannot think of Ariyalai without rememdering the great sportsmen who had adorned the Sports field of number of schools and carriea away the prizes in many a competitions.*

*No less spectacularis its contributions to cultural activities. I had the occassion to participate in the cultural activities organised by this Community Centre in 1973. The standard of the programme was of a high order.*

*I wish the Silver Jubilee celebrations all success and the Community Centre many more years of useful service to the Community.*

R. Yoganathan
**D. R. O. Jaffna.**

---

I am very happy to read about the Silver Jubilee celebrations of the Centre. It has been my privilege to be a member of the Centre since 1965. My association with the Centre has given me and my colleagues a strong sense of community and society awareness. I am convinced, that the most useful and dominant function served by Ariyalai Community Centre for the past Twenty Five glorious years will be shouldered by the eminent members and their successors in the coming years.

Please accept my sincere best wishes on this occasion and "Great Expectations" of a more eventful future for many years to come.

*56, Rushley Dr.*
*Scarborough, Ontariro,*
*Canada. 11-3-74.*

**K. JEYANDRAN**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. விசுவநாதன், (சட்டத்தரணி)
மாநகர சபை உறுப்பினர்,
உப்புக் கூட்டுத்தாபன இயக்குநர்,

# வாழ்த்துச் செய்தி

அரியாலை சனசமூக நிலையத்தின் 25-வது ஆண்டு நிறைவு விழாவின்போது இந்நிலையம் கலை, கலாச்சார, விளையாட்டுத் துறைகளில் மென்மேலும் ஓங்கி வளரவேண்டும் என்றும், இந் நிலையம் நீடித்து நிலைக்கவேண்டும் என்றும் வாழ்த்துகின்றேன்.

கடந்த 25 ஆண்டுகளுக்குள் இந்நிலையம் ஆற்றிய பல்வேறு சேவைகள் காரணமாக, அது யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, இலங்கை பூராகவும் தனக்கென ஓர் இடத்தைப் பெற்றுள்ளது என்பதை யாவரும் அறிவர். ஆகவே, இந்த சனசமூக நிலையம் தொடர்ந்து சேவையாற்றி மேலும் புகழைப்பெற முயல வேண்டும்.

ஒரு இயக்கம் சீராக இயங்குவதாக இருந்தால். வாலிபர்களது ஒத்துழைப்பும், ஐக்கியமும், சேவைபுரியவேண்டும் என்ற உணர்ச்சியும் இருத்தல்வேண்டும். இந்நிலையத்தில் தலைவராக நான் ஒரு சிலகாலம் கடமையாற்றியபோது இத்தகைய குணாதிசயங்களை நான் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தேன். ஆதலினால் இந்த 25 ஆண்டு பூர்த்திவிழாவின்போது நான் வருங்கால இளைஞரைக் கேட்டுக்கொள்ளுவதென்னவென்றால் சிற்சிறு பூசல்களால் ஒற்றுமையை இழக்காது ஐக்கியத்துடன் ஆற்றவேண்டிய சேவைகளின் குறிக்கோள்களை மத்தியாக வைத்துச் செயல்புரியுமாறு வேண்டுகின்றேன்.

உங்கள் அன்பன்,
**அ. விசுவநாதன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

இந்நிலையத்தை ஸ்தாபிப்பதில் முக்கிய பங்கு எடுத்தவன் என்ற முறையிலும், அதன் நிர்வாகத்தில் பலவருடகாலமாக ஈடுபட்டவன் என்றமுறையிலும் இதன் வெள்ளிவிழாக் கொண்டாட்டத்துக்கு ஒரு செய்தி அனுப்புவதில் மிக மகிழ்ச்சி அடைகிறேன். இந்நிலையம் ஸ்தாபக காலந்தொட்டு வளர்ந்து வருவதையும் அது யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே ஒரு உன்னத நிலையை அடைந்துள்ளது என்று அறியும்பொழுது எண்ணற்ற மகிழ்ச்சி அடைந்துள்ளோம்.

ஒரு நிலையம் கலாசாரத் துறையிலும், விளையாட்டுத் துறையிலும்மட்டும் தன் கவனத்தைச் செலுத்தினல் போதாது. அது தன் இளம் அங்கத்தவர்களை வருங்காலத்தில் பிரயோசனமான பிரஜைகளாக இருப்பதற்குத் தேவையான ஆக்கவேலைகளில் ஈடுபடுத்தல் அவசியம். முக்கியமாக விவசாயத்திலும், கைத்தொழில்களிலும் அவர்களை ஈடுபடுத்துவதற்கு நிலையம் முக்கிய பங்கு எடுக்கவேண்டும். அக்குறையை இந்நிலையம் வெகு விரைவில் நிவிர்த்திசெய்வதற்கு தக்க நடவடிக்கை எடுக்குமென நம்புகிறேன்.

இந்நிலையம் மென்மேலும் வளர்ந்து அது ஒரு முன்மாதிரியான நிலையமாக அமையவேண்டுமெனவும், அது எடுக்கும் எல்லா முயற்சியிலும் வெற்றியடையவேண்டுமென்று இறைவனை வேண்டிக்கொள்ளுகிறேன்.

இந்நிலைய நிர்வாகிகள் இச்செய்தியை அனுப்புவதற்கு எனக்கு ஒரு சந்தர்ப்பமளித்ததையிட்டு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. க. செ. மகாதேவா (சட்டத்தரணி)
நிலையத்தின் போஷகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



55, நெடுங்குளம் வீதி,
அரியாலை,
11-4-74

# வாழ்த்துச் செய்தி

அரியாலை சனசமூகநிலையத்தின் வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தை முன்னிட்டு ஒரு சிறப்புமலர் வெளியிடுவது பொருத்தமானதே. ஆகவே, சனசமூக நிலையம் வெளியிடும் வெள்ளி விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி விடுப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இந்த நல்வாய்ப்பை எனக்கு அளித்தமைக்கு நிலைய உத்தியோகத்தர்களுக்கு முதற்கண் எனது நன்றி யறிதலைத் தெரிவித்துக்கொள்ள ஆவலுறுகிறேன்.

அரியாலை சனசமூகநிலையம் கடந்த இருபத்தைந்து ஆண்டு காலமாக ஆற்றிவரும் பணிகள் நாடறிந்தவை. வெறுமனே அரியாலையின் முன்னேற்றத்துக்காக மட்டுமல்லாது, யாழ். குடாநாட்டின் முன்னேற்றத்துக்கும் அரியாலை சனசமூகநிலையத்தின் பணி பயன்பட்டுள்ளது என்பதோடு, நாடு அனைத்துமுள்ள ஏனைய சனசமூக நிலையங்களுக்கும் இந்நிலையம் முன்னோடியாகவும், எடுத்துக்காட்டாகவும் விளங்கி வருகின்றது.

பண்பாட்டுத் துறையிலாகட்டும், விளையாட்டுத் துறையிலாகட்டும், கல்வித்துறையிலாகட்டும் அரியாலை சனசமூகநிலையம் தனது முத்திரையைப் பதிக்காமல் இல்லை. துறைகள்தோறும் அரும்பெரும் பணிகளை ஆற்றிச் சிறப்பான பல வெற்றிகளை பெற்றிருக்கக்கூடிய அரியாலை சனசமூகநிலையம் சமூகப்பணிகளில் மென்மேலும் பல சாதனைகளை நிலைநாட்ட இறைவன் அருள்பாலிக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவன் என்ற வகையிலும், நீண்டகாலம் அரியாலையை யாழ். மாநகராட்சி மன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தியவன் என்ற வகையிலும் அரியாலை சனசமூக நிலையத்தின் பெருமையில் எனக்கும் பங்குண்டு என்று மகிழ்வடைகிறேன்.

அரியாலை சனசமூக நிலையம் தொடர்ந்தும் சிறப்பாக இயங்கி அதன் பொன்விழாவையும், வைரவிழாவையும் இதுபோல் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென மனதார வாழ்த்துகிறேன்.

**கா. ச. நடராசா** (ச. நீ.)
யாழ். மாநகராட்சிமன்ற உறுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

## அரியாலை சனசமூக நிலைய வெள்ளி விழா மலருக்கு—

யாம் அறிந்த மட்டில் 1949-ம் ஆண்டில் தாபிக்கப்பட்டு ஒரு சிறு கிளித்தட்டுக் கோட்டுடன் தோன்றிய இந்நிலையம் விரிந்து செறிந்து சிறப்புற்று வளர்ந்து இன்று யாழ்நகரில் மாத்திரமின்றி அகில இலங்கையிலும் ஓர் முன் மாதிரியான சனசமூக நிலையமாகத் திகழ்கின்றது. எனக் கூறுவது மிகையாகாது. 1952-ம் ஆண்டு தொடக்கம் இந்நிலைய ஆண்டு விழாக்களில் ஒரு சில சமயங்களில் பங்கு கொண்டும் அதன் வளர்ச்சியை அவதானித்துக் கொண்டும் வந்தமையால் இதனுடைய விறு விறுப்பான வளர்ச்சியை பாராட்டாதிருக்க முடியாது.

அரியாலை வாலிபரின் உற்சாகமும், கட்டுப்பாடும், விடா முயற்சியும் அரியாலை மக்களின் பரந்த மனப்பான்மையும் ''தோன்றிற் புகழுடன் தோன்றுக'' என்ற குறிக்கோளுமே இந்நிலையத்தின் சிறப்பிற்கு மூல காரணங்களாக அமைந்துள்ளன.

யாழ் நகரில் பிரபல்யம் மிக்க அரியாலை சனசமூக நிலையமானது தனது வெள்ளி விழாவை பொருத்தமாயும் சிறப்பாயும் கொண்டாட விரிவான திட்டங்களைத்திரட்டி வருகின்றதுவென பத்திரிகை வாயிலாகவும் செயலாளர் **திரு. இ. க. குமரையா** அவர்களிடமிருந்து அறிந்தும் யாம் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம். அத்திட்டங்களில் அடங்கிய களியாட்ட விளையாட்டு கலை நிகழ்ச்சிகள் யாவும் இவ் வெள்ளிவிழாவின்போது சிறப்பாக அமைந்து வெற்றிகரமாக முடிவடைந்து அரியாலை சனசமூக நிலைய உறுப்பினர்கட்கும் அரியாலை மக்களுக்கும் சிறப்பையும் பெருமிதத்தையும் அளிக்க வல்லவைகளாய் அமைய வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை இரு கரங் கூப்பி வேண்டுகிறேன்.

இன்றும் என்றும் அரியாலை சனசமூக நிலையம் ஓர் கலங்கரை விளக்கு போல் அமைந்து அதன் ஒளியில் மற்றைய நிலையங்கள் விளித்தெழுந்து உதாரணங்கள் பல பெற்றியங்க அது ஓர் எடுத்துக் காட்டாக ஈழவள நாட்டில் அமையவேண்டுமென நல்லாசி கூறுகிறேன்.

**யே. ஏ. டி. வர்ணகுலசிங்கி**
சிரேஷ்ட ஆய்வு உத்தியோகஸ்தர்
(உ. மு. யா. ச. ச. நி. ச. ஆ.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு



யாழ் உலோகத் தொழிற்சாலை

காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

*With best compliments*

*of*

AERO ELECTRICAL INDUSTRIES

K. K. S.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RICOH COFFEE




*(Coffee Bar)*

10, 67, 68, MODEL MARKET,

**JAFFNA.**

---

வெள்ளிவிழாவுக்கு
எமது நல்வாழ்த்துக்கள்

எஸ். சுப்பிரமணியம் அன் கோ.,
53, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

---

புதிய டிசைன்களில்
அழகிய பவுண் நகைகளுக்கு

நா. வ. கந்தையா & சன்ஸ்
76/1 & 2, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



THE HALLMARK
OF
QUALITY PHOTOGRAPHS

# SELLAMS

PHONE: 436 JAFFNA

டாக்டரின் மருந்துச் சீட்டா? ...

விஜயம் செய்யுங்கள்

# சிங்கம்ஸ் பார்மஸி

25, மின்சார நிலைய வீதி,

யாழ்ப்பாணம்.

250119

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# J.S.P. Funeral Services

## Solved

Yours Eagerness for the grand & cheapest
Funeral Service.

**We undertake Embalming,
Funeral Coach, Modern Caskets,
Monumental & Floural Works.**

69, MAIN STREET,
**JAFFNA.**

Space Donated

by

**COLOMBO OPTICAL**

53, MAIN STREET,
JAFFNA.

For Best Work

Consult

**P. I. Fernando**

**DENTAL & OPTICIANS**

51, Main Street, — JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாலை சனசமூக நிலைய

# வெள்ளி விழா மலர்

## சமர்ப்பணம்

ஆரம்ப நாள் முதல்
இன்று ஈறாக அரியாலை சனசமூக
நிலையத்தின் ஒவ்வொரு அங்குல
வளர்ச்சிக்கும் உழைத்த உத்தமர்கள்
ஒவ்வொருவருக்கும் நிலையத்தின் அன்புக்
காணிக்கையான இம்மலரைச்
சமர்ப்பணம்
செய்கின்றோம்.



இணை ஆசிரியர்கள்:

ந. கிருஷ்ணசிங்கம் + ச. பாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலரகம்


1. ஒரு சொற்கேளீர் :- இணை ஆசிரியர்கள்
2. நிலைய கீதம்
3. விரிவார்ந்த அரியாலை யூரின் வெற்பாய் விளங்குமுயர் விதிசார்ந்த விழியே! :- கவிஞர் வே. ஐயாத்துரை
4. அரியாலை சனசமூகநிலைய வெள்ளிவிழா மலர் நிர்வாகக்குழு
5. அரியாலை சனசமூக நிலைய வெள்ளிவிழா இல்ல உத்தியோகஸ்தர்கள்
6. அரியாலை சனசமூக நிலைய வெள்ளிவிழா நிர்வாகசபை
7. அரியாலை சனசமூக நிலைய வரலாற்றுப் பாதையிலே...
8. அரியாலை சனசமூக நிலைய இருபத்தைந்தாண்டு நிர்வாகசபையில்;
9. அரியாலை சனசமூக நிலைய அன்னலட்சுமி காசிப்பிள்ளை ஞாபகார்த்த வெள்ளிவிழா நினைவுமண்டபம்
10. அமரர் நவரத்தினம் குமாரகுலசிங்கம் நினைவு மண்டபம்
11. வெள்ளிவிழாவை முன்னிட்டு நடைபெற்ற சுற்றுப்போட்டிகளின் பரிசளிப்பு விழா
12. மாதர் பகுதி :- திருமதி லலிதா இராசரட்ணம் புறூடி
13. சமுதாயத்தில் பெண்கள் :- செல்வி கிரிஜா இராசையா
14. விளையாட்டுத்துறையில் நிலையத்தின் சேவை:- திரு. த. மயில்வாகனம்
15. அரியாலை சனசமூக நிலைய வெள்ளி விழாவுக்கு பரிசில்கள் அன்பளிப்புச் செய்தோர்
16. வெள்ளிக்கிண்ணங்கள் அன்பளிப்புச் செய்தோர்.
17. சமய வாழ்வும் சனசமூக நிலையமும் :- திரு. சு. பாலசுந்தரம்
18. சனசமூக நிலையமும் அரசியலும்:- திரு. சி. சதாசிவம்
19. கலைவளர்ச்சியில் நிலையத்தின் பங்கு :- திரு. ச. பாலசிங்கம்
20. அரியாலை சனசமூக நிலையத்தால் இற்றைவரை அரங்கேற்றப்பட்ட நாடகங்கள்
21. கலையும் மனிதனும் :- திருமதி சிவா. தியாகராசா
22. ஈழத்து இலக்கியங்கள் :- திரு. வி. ரி. ஏ. விஸ்வா
23. ''கசந்த அனுபவம்'' (சிறுகதை) திரு. ந. கிருஷ்ணசிங்கம்
24. அரியாலை சனசமூக நிலைய வெள்ளிவிழா உப-குழுக்கள்
25. வெள்ளிவிழா நிகழ்ச்சி நிரல்
26. நன்றிகள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சொற் கேளீர்!

*சிந்தனையில் கருவெடுத்துச் செயற்றிறனால் உருவெடுத்தே*
*சுந்தரமார் தோற்றமுற்றுத் தூயசுவை சொட்டுகின்ற*
*இயலும் இசையும் எழில்சிறந்த நாடகமும்*
*பயிலும் நிறைநெறியும் பாங்கார் விளையாட்டும்*
*உயர்ந்த உறுப்புகளாய் ஒன்றித் திடமாரச்*
*சமூக வளர்ச்சியெனும் தக்கவுயிர் ஊட்டமுற்றே*
*அகமார நின்றுமிளிர் அரியாலை சனசமூக*
*நிலையத்தின் வெள்ளிவிழா! நிறைந்தவிரு பத்தைந்தாம்*
*வாலிபனைக் காதலித்தே மாலையிட மலரெடுத்தோம்!*
*கட்டுரைத்தேன் கவிதைத்தேன் காட்சித்தேன் நற்கதைத்தேன்*
*சொட்டுமிதழ்க் கட்டிதழாய்ச் சூழ்ந்தே மணம்பரப்பும்*
*நறுமலரே! நாதமெழ நாற்றிசையும் செறிமலரே!*

என்றெல்லாம் வாழ்த்திசைத்து, ஆழ்கடலை நிகர் அழியாப் புகழ்க் கடலில் மூழ்கி நிற்கும் அரியாலை சனசமூக நிலையத்தின் மறக்கமுடியாத வரலாற்றுத் திருப்பமான "வெள்ளி விழாவின்" வெளியீடான இந்த வாடா வன்னமலரை அலங்கரித்து ... விழாவுக்கு வாழ்த்தருளி, மலருக்குச் செய்தி தந்த அறிஞர்கள் அனைவருக்கும் நன்றிகள்!

கட்டுரைத்தேன் - கவிதைத்தேன் - காட்சித்தேன் - நற்கதைத்தேன் தந்து மலரின் மாட்சியை ஆட்சிபெற வைத்த அனைவருக்கும் நன்றிகள்!

மலரகத்துள் மலர்ந்துள்ள அத்தனை அம்சங்களையும் அலசி ஆராய்ந்து — நிலைய வரலாற்றைத் தகுந்த முறையிற் தரப்படுத்தி, தவிர்ப்பவை தவிர்த்து, தகுந்தவை வெளிவரவுதவிய நிலையச் செயற்குழுவினர் அனைவர்க்கும் நன்றிகள்!

மலரை அச்சேற்றிய அச்சகத்தினருக்கும், விளம்பரங்கள் தந்து ஊக்குவித்த வியாபாரத் தாபனங்களுக்கும் நன்றிகள்!

நன்றிகள் கூறுவதில் — மறந்தவர்கள், விடுபட்டவர்கள் அனைவர்க்கும் நன்றிக் குவியலை இறுதியாக வைக்கின்றோம்!

இம்மலர் எமது நிலையத்தின் முதல் முயற்சி; எனவே ...... சொற்பிழை — பொருட்பிழை — எப்பிழை இதில் தோன்றினும், குறைதேடிக் குறை கூறாது, நிறைதேடி நெஞ்சம் மகிழ நெஞ்சார அழைத்து

"குணம் நாடி குற்றம் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்ககொள" வேண்டுகின்றோம்.

வணக்கம்.

1—6—74

இணை ஆசிரியர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாலை சனசமூக
# நிலைய கீதம்

இராகம் : அமிர்தவர்ஷணி தாளம் : ஆதி

**பல்லவி**

வாழிய வாழிய வாழியவே
வளமார் அரியாலை சனசமூக நிலையம் (வாழி)

1. ஈழநாட்டின் எழில் யாழ் நகரில்
ஈடிலாத அரியாலைதனில்
சீருடனே சிறப்புறவே
பாரினிலே நற்பணிகள் புரிந்து நிதம் (வாழி)

2. இயலிசை நாடகத் தமிழ் வளர்த்தே
இலங்கிப் புகழ்பெறு நிலையமுமே
நலங்கொள் நல்லுடற் பயிற்சியுமே
நாளும் நற்புகழ் நிலைத்திடவே (வாழி)

3. மதியிற் சிறந்த பெரியோரும்
மருத்துவத் துறை நிபுணர்களும்
மதிப்புறு சிற்ப வல்லுனரும்
மங்காக் கவிஞரும் வாழும் (வாழி)

4. சித்தி தரும் சிவ ஆலயமே
சத்தி மஹாமாரி ஆலயமே
விக்ன விநாயக ராலயமே
வித்தை நனிபெறும் வித்யாலயமே (வாழி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரிவார்ந்த அரியாலை யூரின் வெற்பாய்
# விளங்குமுயர் விதிசார்ந்த விழியே!

— அரியாலையூர் கவிஞர் வே. ஐயாத்துரை —

அரியாலை சனசமூக நிலையம் கண்டோம்!
ஆண்டிருபத் தைந்துநிறை வாகி நன்மைப்
பெரிதாய வெள்ளிவிழாப் பேறே பெற்றோம்!
பேரார்ந்த கலைகளினூற் பிறங்கு கின்றோம்!
விரிவார்ந்த நிர்வாகச் சிறப்புக் கண்டோம்!
மேலான தலைவர்களால் மேன்மை பெற்றோம்!
அரிதான பரிசுகளும் ஆசிச் சீரும்
அறிவாள ரிடம்பெற்றே அகம்பூ ரித்தோம்!

விரிவார்ந்த அரியாலை யூரின வெற்பாய்
விளங்குமுயர் விதிசார்ந்த விழியே! நல்ல
பெரிதான கட்டடமும் விளையாட் டிற்குப்
பேணுமெழில் அரங்குநிறை வீதிப் பேறும்
சரியான தானத்தில் வாய்ந்தே அன்புச்
சனசமூக சக்தியெனத் திகழ்வ தற்கே!
அரியாலை மக்கள்தம் ஆக்கம் பொங்க
அனுசரணை யாய்ப்பொன்னம் பலமும் நின்றார்!

கனகரத்தி னம்பெரியார் கவிஞ ரில்லம்
கந்தையா டாக்ரர்தம் கனமா ரில்லம்
தினமார்சீர் குகதாசன் சேவை யில்லம்
தேசுநிறை காசிப்பிள் ளைய ரங்கம்
மனமாரப் பணிபுரியும் மக்கட் செல்வம்
வாய்ந்துவள மானவுயர் சனச மூகக்
கனமாரக் கண்ணியமும் கட்டுப் பாடும்
கடமையெழிற் காப்போங்கி வாழி! வாழி!

குணமார்ந்த குமாரகுல சிங்கம் அன்பை
குவலயத்தே நினைவுகொளும் குறிக்கோ ளாகத்
துணைமேவு நூலுதவும் தொண்டு மிக்கத்
துலங்குமணி மண்டபமும், காசிப் பிள்ளை
மணமார்ந்த அன்னலட் சுமியார் தம்மை
மறவாமல் மண்ணகமே மனதிற் கொள்ள
இணைவான சிறார்கல்வி ஏற்றம் பொங்க
எழுந்தவுயர் மண்டபமும் இதமே வாழி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரியாலை சனசமூக நிலைய
## வெள்ளி விழா மலர் நிர்வாகக் குழு

தலைவர் ;

திரு. சு. பாலசுந்தரம்

காரியதரிசி ;

திரு. சி. சதாசிவம்

நிர்வாகக்குழு ;

திரு. த. மயில்வாகனம்
திரு. த. துரைசிங்கம்
திருமதி லலிதா புறாடி

இணை ஆசிரியர்கள் ;

திரு. ந. கிருஷ்ணசிங்கம்
திரு. ச. பாலசிங்கம்

## வெள்ளி விழாவில்
## அரியாலை சனசமூக நிலையத்தால் கௌரவிக்கப்பட்ட கலைஞர்கள்

கவிஞர் திரு. வி. ஐயாத்துரை
சங்கீதபூஷணம் திரு. ச. பாலசிங்கம்
நடிகப்பெருந்தகை திரு. இ. க. குமரையா
கவிமணி திரு. ம. இராமநாதன்
சிற்பாசிரியர் திரு. வ. கந்தையா
திரு. இ. தனபாலசிங்கம்
திரு. கை. ஜெயக்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாலை சனசமூக நிலையம்
# வெள்ளி விழா
## இல்ல உத்தியோகஸ்தர்கள்

### கந்தையா இல்லம்

| | |
|---|---|
| தலைவர்: | திரு. த. துரைசிங்கம் |
| உப தலைவர்: | திரு. த. புவனநாதன் |
| செயலாளர்: | திரு. க. பாலசுந்தரம் |
| பொருளாளர்: | திரு. கு. இரவீந்திரகுமார் |
| விளையாட்டுப்பகுதி செயலாளர்: | திரு. ந. வாமபாகன் |
| கலைப்பகுதி செயலாளர்: | திரு. வி. ரி. ஏ. விஸ்வா. |

### கனகரத்தினம் இல்லம்

| | |
|---|---|
| தலைவர்: | டாக்டர் சு. ஸ்ரீ விக்கினேஸ்வரா |
| உப தலைவர்: | திரு. செ. க. மகாலிங்கம் |
| செயலாளர்: | திரு. செ. விஜேகுலசிங்கம் |
| பொருளாளர்: | திரு. கோ. கனகசிங்கம் |
| விளையாட்டுப்பகுதி செயலாளர்: | திரு. ம. விசயகுமார் |
| கலைப்பகுதி செயலாளர்: | திரு க சோமசேகரம் |

### குகதாசன் இல்லம்

| | |
|---|---|
| தலைவர்: | திரு. பொ. சுந்தரலிங்கம் |
| உப தலைவர்: | திரு. எஸ். எஸ். சண்முகநாதன் |
| செயலாளர்: | திரு. செ. கனகலிங்கம் |
| பொருளாளர்: | திரு. செ. செல்வராசா |
| விளையாட்டுப்பகுதி செயலாளர்: | திரு. து. தேசியநாதன் |
| கலைப்பகுதிச் செயலாளர்: | திரு. செ. சோதிராசா. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாலை சனசமூக நிலையம்

# வெள்ளி விழா

## நிர்வாக சபை

**போஷகர்: திரு. சு. செ. மகாதேவா** (சட்டத்தரணி)

| | |
|---|---|
| உப போஷகர்கள்: | திரு. கா. ச. நடராசா, மா. ச. உ. சமாதான நீதவான் |
| | திரு. அ. விசுவநாதன், மா. ச. உ., சட்டத்தரணி |
| | திரு. வி. ஆ. கனகசிங்கம் |
| | திரு. வி. ஆறுமுகம் |
| தலைவர்: | திரு. சு. பாலசுந்தரம் |
| உப தலைவர்கள்: | திரு. ச. பாலசிங்கம் |
| | திரு. த. மயில்வாகனம் |
| | திருமதி ல. இ. புறாடி |
| செயலாளர்: | திரு. இ. க. குமரையா |
| உப செயலாளர்: | திரு. சி. சதாசிவம் |
| பொருளாளர்: | திரு. ஆ. திரிலோக ஈஸ்வரா |
| உப பொருளாளர்கள்: | திரு. செ. ஜெயபாலன் |
| | திரு க. பாலசுந்தரம் |
| விளையாட்டுப்பகுதி செயலாளர்: | திரு. பொ. குலசேகரம்பிள்ளை |
| கலைப்பகுதி செயலாளர்: | திரு. சி. சுந்தரலிங்கம் |
| நிலையப் பொறுப்பாளர்: | திரு. மு. குணம் |
| உறுப்பினர் குழு: | திரு. த. துரைசிங்கம் |
| | திரு. க. கணேஷ் |
| | திரு. வி. ரி. ஏ. விஸ்வா |
| | திரு. செ. செல்வராசா |
| | செல்வி இ. கிரிஜா |
| வெளியூர்ப் பிரதிநிதி: | திரு. ம. மோகனதாஸ் |
| எண் பரிசோதகர்: | திரு. த. புவனநாதன். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிற்பவர்கள்:

திரு சி. சுந்தரலிங்கம், திரு. செ. செல்வராசா, திரு. வி. ரி. ஏ. விஸ்வா, திரு. செ. ஜெயபாலன், திரு. க. கணேஷ், திரு. பொ. குலசேகரம்பிள்ளை, திரு. க. பாலசுந்தரம், திரு. மு. குணம், திரு. த. துரைசிங்கம், திரு. சி. சதாசிவம்.

அமர்ந்திருப்பவர்கள்:

செல்வி இ. கிரிஜா, திரு. ச. பாலசிங்கம், திரு. இ. க; குமரையா, திரு. சு; பாலசுந்தரம், திரு. ஆ. திரிலோக ஈஸ்வரா, திரு. த. மயில்வாகனம், திருமதி லலிதா இராசரெட்ணம் புறாடி;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரியாலை சனசமூக நிலைய இன்றையத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

790.68
ARI
AR

## அரியாலை சனசமூக நிலைய வரலாற்றுப் பாதையிலே...



# இருபத்தைந்து வருடங்கள்

இருபத்தைந்து வருடங்கள் தனிமனிதன் வாழ்வுப் பாதையில் எண்ணிறைந்த ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்தி ஏகுவது போல்; ஒரு பொதுத்தாபனத்தையும் எண்ணிடற்கரிய சோதனைகளுக்கு உட்படுத்துவது இயற்கையே. ஒரு பொதுஇயக்கம் இன்றைய பொருளாதார - இனவாத - பிரிவுவாத உலகியல் அமைப்பில் இருபத்தைந்து வருடம் வெற்றிப் பவனி வந்து வெள்ளி விழாக் காண்பதென்பது சாதாரண சாதனையன்று.

விமரிசையான விழாவுடன் தோன்றிய இயக்கங்கள் — தாபனங்கள் எத்தனையோ தொடக்கவிழாவுடன் தொடர்ந்து தொழிற்படமுடியாது அழிந்தொழிந்த வரலாறுகள் எண்ணற்றவை. இன்னும் சில ஆண்டுதோறும் ஆண்டு நிறைவின்போது மட்டும் விழித்தெழுந்து விழாக்கொண்டாடி மறுதினம் முதல் மீளாத்துயிலில் ஆழ்ந்து விடுகின்றன. இவற்றிற்கெல்லாம் விதிவிலக்காய் — இவற்றிற்கோர் உன்னதமான வழிகாட்டியாய், சரியான உதாரணமாய், நாளும் பொழுதும் வளர்ச்சிப் பாதையில் ஏறுநடை போட்டுவந்து வெள்ளிவிழாக் கோலம் பூண்டுநிற்கும் நிலையத்தைக் கண்டு அதன் உயர்ச்சியில் தங்கள் உயர்வைக் கண்ட பொதுமக்கள் — அதன் வளர்ச்சியில் தங்கள் வளர்ச்சியைக் கண்ட வாலிபர்கள்! ஆண்-பெண்; பெரியோர் - சிறியோர் என்ற பேதமறப் பெருமிதம் பொங்கிநிற்கும் இவ் வேளையில் நிலையம் கடந்துவந்த இருபத்தைந்து வருடங்களையும் ஒருமுறை எண்ணிப் பார்க்கின்றோம்...!

### ஆரம்பம்:

**1947-ம்** வருடத்தின் பிற்பகுதியது; துணிவான சிந்தனைகள் துள்ளிப்பாயும் பருவம் படைத்த வாலிபர் கூட்டமொன்று யாழ். முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற ஓர் விழாக்காண விரைந்தனர். அவர்களின் உரையாடல்களுக்கு மத்தியில் "எமது ஊரில் ஒரு வாசிகசாலை அமைக்கப்படல்வேண்டும்" என்ற சிறந்ததொரு கருத்து பிரச்சினைவடிவில் பிரகாசித்தது. திடீரெனத் தோன்றிய இந்த நற்சிந்தனைக்கு நல்வடிவம் கொடுக்க முனைந்த இவர்களைக் கிண்டல் செய்தோர்-கேலிசெய்தோர் ஒருசிலர். "மூச்சு விடுவது வாழ்வல்ல; செயல் செய்வதே வாழ்வு" என்ற துணிவுடன் தங்கள் சிந்தனையில் தோன்றிய "வாசிகசாலை"யைச் சாதனையில் சந்தித்து மகிழ முழுமூச்சுடன் செயற்பட முனைந்த திரு. த. கோபாலசிங்கம், திரு. த. மயில்வாகனம், திரு. சி. சதானந்தன், திரு. ச. பாலசிங்கம், திரு. சு. பாலசுந்தரம், திரு. நா. அருளானந்தம், திரு. வீ.ஐயாத்துரை, திரு. அ. தம்பியையா, திரு. சி. தம்பித்துரை ஆகியோராவர். சனசமூகநிலைய வரலாற்றை எழுதும் இந்நேரத்தில் இந்த நிலையத்தைக் கருத்திலே சுமந்து, செயலிலே பெற்றெடுத்த இந்த வாலிபர்களுக்குத் "தாய்க்கு" உரிய ஒரு கௌரவம் அளிக்க வேண்டியது தவிர்க்கமுடியாத கடமையாகும்!

மேற்படி இந்த வாசிகசாலை புங்கங்குளம் புகையிரதநிலையத்துக்கு முன்பாக 'சேவகர்' பொன்னம்பலம் அவர்களுடைய காணியில்

250119
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
ARCHIVES

அல்லது அதற்கு முன்பாகஇருந்த 'சேவகர்' தம்பர் அவர்களின் காணியில் மண்ணிஞல் அரைச்சுவரும், அதற்குமேல் பனம்சிலாகை களினுலும் உருவாக்குவது என்று வாலிபர் கள் திட்டமிட்டு திரு. இ. தம்பிப்பிள்ளை யவர்களுடன் முதன்முயற்சியாக திரு. ஏ. கே. பொன்னையா (மரக்காலை இராசையா) அவர்களிடம் சென்று மேற்படி கட்டிடம் உருவாக்குவதற்கான செலவினங்களை மதிப்பிட்டனர்.

இவ்வளவுதொகையைச் செலவுசெய்து தனியார் காணியில் இந்த நிலையத்தை அமைப்பதைவிட, யாழ். நகரசபையின் அனுமதியைப்பெற்று இதை நகரசபைக்குச் சொந்தமான சந்தையில் அமைப்பது நன்று என்ற ஆலோசனையைக் காலஞ்சென்ற நியாயதுரந்தரர் ஏ. தில்லையம்பலம் அவர் கள் தெரிவித்தார்கள். அந்தச் சந்தர்ப்பத் தில் யாழ். நகரசபைத் தலைவராக இருந்த எம்மூர் பெரியாரான காலஞ்சென்ற வழக் கறிஞர் திரு. க.பொன்னம்பலம் அவர்களைச் சிலர் உதவிகோரி அணுகினர், இவர்களுள் காலஞ்சென்ற திரு. ஆ. சிவக்கொழுந்து (யூ. டி. சி,), திரு. நா. நடராசா, திரு வி. ஆறுமுகம் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள், அணுகிய வாலிபர்கள் சந்தை மைதானத்தின் தென்கிழக்கே-தெரு வருகே மிகக்குறைந்த குத்தகைக்குச் சிறு துண்டு நிலம் பெற்றனர். (தற்போது நிலை யம் அமைந்துள்ள இடம்) நிலம் கிடைத்த உற்சாகம் நிலையம் அமைக்கத் துடித்தவர் களை மேலும் ஆக்கவழியில் ஊக்குவித்தது.

பொதுமக்களிடம் நிதிசேர்க்கும் பணி யில் முனைந்த வாலிபர்கள் 1947-ம் வருடம் ஐப்பசித் திங்கள் 27-ம் நாள் இந்த நிலையத் துக்கான அத்திபாரக் கல்லைப் பெரியோர் களைக்கொண்டு நாட்டி மகிழ்ந்தனர். நிதி நிலைமை மிக மோசமாக இருந்ததினுல் கட் டிடத்தின்வளர்ச்சியும் மிகமந்தகதியிலேயே நகர்ந்தது.

1949-ம் ஆண்டின் ஆரம்ப காலத்தில் கட்டிட நிதிக்காக யாழ். தபால் - தந்தி ஊழியர் சங்கத்தினரால் ''சந்திரகுமார்'' என்னும் நாடகம் ஸ்ரீ பார்வதி வித்தியா சாலையில் அரங்கேற்றப்பட்டது. இந்நாட கத்திஞல் ரூபா 900/- இலாபமாகக் கிடைத் தது. இந்நேரத்தில் வில்வந்தெரு ஐக்கிய பண்டகசாலையும் இலாபநிதியில் ரூபா 300/- அன்பளிப்புச் செய்தது. (இதேமுறையில் நிதிமுடக்கல் நிலையத்தில் தோன்றியவேளை களில் மேற்படி ஐக்கிய பண்டகசாலை பல முறை நிதியுதவி வழங்கியமை குறிப்பிடற் குரியவை. இதன்தலைவராக இருந்த திரு. சு. செ. மகாதேவாவும், மேற்படி சங்க உறுப்பினர் அனைவரும் பாராட்டுக்கு உரிய வர்கள்.) இவ்வண்ணம் சேர்ந்த தொகை யால் கட்டிடம் துரித நடையுடன் முன் னேறியது.

இக்கால கட்டத்தில் ''அரியாலைக் கிரா மத்திற்கு ஓர் சனசமூகநிலையம் வேண்டும்'' என்ற சிந்தனை சில பெரியோர்களின் எண் ணத்தில் கருவெடுத்தது. இது பற்றிய ஆலோசனைக் கூட்டமொன்றை அன்று சாவ கச்சேரியில் (ஆர்.டி.ஓ.) கிராமமுன்னேற்ற உத்தியோகத்தராகக் கடமையாற்றிய எம்மூர் வாசியான காலஞ்சென்ற திரு. த. சின்னத்தம்பி (கிளாக்கர்) அவர்கள் ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் ஒழுங்கு செய் தார். மதிப்புக்குரிய எப தூர்ப்பெரியாரான காலஞ்சென்ற திரு. க. பொன்னம்பலம் அவர்கள் தலைமைவகிக்க யாழ். மணிய காரன் அவர்களும்; யாழ். ஆர். டி. ஓ. அவர்களும்; திரு. த. சின்னத்தம்பி (ஆர்.டி.ஓ., சாவகச்சேரி) அவர்களும் சன சமூகநிலைய அமைப்புக்குரிய விதிமுறைகளை எடுத்து இயம்பினர். கூட்ட முடிவில் 'சன சமூக நிலையம் அமைப்பது எங்கே?' என்ற வினு எழுந்தது. அக்காலத்தில் கண்டிவீதி யில் 'மாம்பழம் சந்தி'க்கு அண்மையில் இயங்கிவந்த 'சரஸ்வதி வாசிகசாலை'யைச் சனசமூகநிலையமாக மாற்றவேண்டுமென்ற கருத்துடன் சிலர் வாதிட்டனர்; இன்னும் சிலர், பெரிய விளையாட்டு மைதானவசதி- புகையிரத வசதி போன்ற காரணங்களை முன்வைத்துச் சந்தை மைதானத்தில் எழுந்துகொண்டிருக்கும் இந்த வாசிகசாலை யைச் சனசமூக நிலையமாக மாற்றவேண்டு மென வாதிட்டனர். இந்த வேறுபட்ட கருத்து மோதலால் கூட்டத்தில் பெரும் சூழப்பநிலை உருவெடுத்தது. நிலைமையைச் சமாதானமுறையில் தீர்க்க கூட்டத்திற்குத் தலைமைதாங்கிய காலஞ்சென்ற திரு. க. பொன்னம்பலம் அவர்கள் எடுத்த முயற்சி யினுல் பெரும்பான்மையினரின் அனுசரணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடன் வாசிகசாலைக்காக அமைக்கப்பட்டு வந்த இக்கட்டிடமே சனசமூக நிலையமாக மாற்றப்படவேண்டும் என்ற தீர்மானம் உறுதியாகியது.

இக்கட்டடத்தில் இந்நிலையத்தின் கட்டு வேலைகள்முடிவடைந்தன. 'கோப்பிச'வேலைகளை எமதூர்ப் பெரியார் காலஞ்சென்ற திரு. P. காசிப்பிள்ளை அவர்கள் முடித்து உதவ, காலஞ்சென்ற திரு. க. பொன்னம்பலம் அவர்கள் கூரைக்கு வேண்டிய ஓடுகளைத் தந்தருளினுர். வாலிபர்களின் சிந்தையில் மண்சுவருடன் மலர்ந்த கொட்டிலான வாசிகசாலை, நிரந்தரமான சீமெந்துக் கட்டிடமாக மாறிப் படிப்பகத்துடன் கூடிய விருந்தையையும் பெற்று அரியாலை சன சமூக நிலையமாகப் பூர்த்தியெய்தியது. அக்காலத்தில் யாழ். வைத்தியசாலையின் அத்தியட்சகராகக் கடமையாற்றிய எம்மூர்ப் பெரியார் காலஞ்சென்ற வைத்தியகலாநிதி க. கந்தையா அவர்கள் படிப்பகத்துக்கு வேண்டிய இரண்டு நீள மேசைகளையும் வாங்குகளையும் அன்பளிப்புச் செய்தார்.

1949-ம் ஆண்டு ஆனித் திங்கள் 12-ம் நாள் யாழ். நகராட்சி மன்றத்தின் தலைவராயிருந்த காலஞ்சென்ற திரு. க. பொன்னம்பலம் அவர்கள் தமது திருக்கரத்தால் மங்கள வாத்தியங்கள் முழங்க - மக்கள் கர கோஷம் செய்ய - நாடாவை வெட்டிக் குத்துவிளக்கை ஏற்றி மங்காப் புகழ்பூத்த இந்த நிலையத்தின் கதவுகளைத் திறந்து வைத்து, புகழ்வாய்ந்த இந்நிலையத்தின் வரலாற்றுக் காவியத்தைத் தொடக்கிவைத்தார். அன்றைய இரவு முதல் முதல் விழாக் கோலம் பூண்ட அரியாலை சனசமூக நிலைய மைதானம் மக்களுக்கு நாதஸ்வர இசையையும்; நாட்டிய நிகழ்ச்சிகளையும் வழங்கி மகிழ்ந்தது. திரண்டுநின்ற மக்கள்வெள்ளம் இசையுண்டு - கலைகண்டு களிப்புற்றனர்.

## முதல் வருடம்

நிலைய வரலாற்றின் முதல் வருட நிர்வாகத்தைப் பொறுப்பேற்று நிர்வகித்து வந்த சபையினருக்கு வைத்தியக்கலாநிதி காலஞ்சென்ற க. கந்தையா அவர்கள் தலைவராகவிருந்து நல்வழி காட்டிவந்தார். காலஞ்சென்ற எம்மூர் பெரியார் திரு. ராஜா புறாடி அவர்களின் நிதியுதவியுடன் பொது மக்களிடமும் நிதி திரட்டி ரூபா 750/= பெறுமதியான சிறந்ததர வானொலியும், ரூபா 50/= பெறுமதியான மேலதிக ஒலி பெருக்கியும் இவ்வாண்டு நிலையத்திற் பொருத்தப்பட்டன. தமிழ்—ஆங்கில தினசரிப் பத்திரிகைகளும் — வாராந்தர... மாதாந்தர — சஞ்சிகைகளும் நிலையப்படிப் பகத்தை அலங்கரிக்கப் பொதுமக்கள் தினமும் வருகைதந்து உலகியல் புதினங்களைப் பத்திரிகைகள் மூலமும் வானொலி மூலமும் அறிந்து சென்றனர். இளம் பராயத்தினர் விளையாட்டுமைதானத்தை மாலை வேளைகளில் பயன்படுத்தி காற்பந்தாட்டம் எறி பந்தாட்டம், கிளித்தட்டு முதலிய விளையாட்டுக்களை விளையாடி உடலுறுதியெய்தினர். நிலையச்சுற்றுவட்ட மக்கள் மத்தியில் சனசமூக நிலைய ஓராண்டுசேவையில் புதிய மறுமலர்ச்சியொன்று நிழலாடியது.

நிலையத்தின் முதலாவது ஆண்டு நிறைவுவிழா நிலையமைதானத்தில் கோலாகலமாக 1950-ம் ஆண்டு ஆனித்திங்கள் 12 ம் நாள் கொண்டாடப்பட்டது. விழாவுக்கு நிலைத்தலைவர் காலம் சென்ற வைத்திய கலாநிதி க. கந்தையா அவர்கள் தலைமைதாங்கினுர்கள். பிற்பகல் முதல் விளையாட்டுப் போட்டிகளும், மாலை நிலைய மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த அலங்கார மேடையில் பொதுக்கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. காலஞ்சென்ற திரு க. பொன்னம்பலம், காலஞ்சென்ற திரு. கே. பி. முத்தையா, பண்டிதர் எஸ். இராசையா, செல்வி கே. சரவணமுத்து ஆகியோர் சிறப்புச்சொற்பொழிவாற்றினர் இறுதியில் பிரபல்யமான எம்மூர் அண்ணவியார் திரு. பெ. சபாபதிப்பிள்ளை அவர்களால் நெறிப்படுத்தப்பட்ட "தமயந்தி" என்ற காவிய நாடகம் தத்துரூபமான இயற்கைக் காட்சிகளுடன் சிறப்பான முறையில் அரங்கேற்றப்பட்டது. மக்கள் வெள்ளம்போல் திரண்டுவந்து சனசமூகநிலையம் வழங்கிய முதல் நாடகத்தைப் பார்த்துப் பரவசமுற்று மகிழ்ந்தனர்.

## இரண்டாம் வருடம்

இவ்வாண்டும் காலஞ்சென்ற வைத்திய கலாநிதி க. கந்தையா அவர்கள் தலைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் நிலைய நிர்வாகம் செவ்வனே சென்றது படிப்பகத்தைப் பயன்படுத்தும் பொது மக்கள் தொகை இன்னும் பெருகியது. இதே முறையில் விளையாட்டு வீரர்களின் தொகையும் பெருகிவளர்ந்தன. இவ்வாண்டு நிலையம் யாழ். மாவட்ட சனசமூக நிலைய சமாசத்துடன் இணைந்ததின் நிமித்தம் பல இலவச சஞ்சிகைகளைச் சமாசத்திடமிருந்து பெற்று வந்தது. வழமைபோல் இரண்டாவது ஆண்டு நிறைவுவிழா 1951-ம் ஆண்டு ஆனித் திங்கள் 10 நாள் விளையாட்டுப் போட்டிகளுடனும், கலை நிகழ்ச்சிகளுடனும் கொண்டாடப்பட்டது.

## மூன்றாம் வருடம்

இவ்வருடம் நிலையம் கலை விளையாட்டு முதலிய வற்றில் மேலும் விருத்தியடைந்தது. நிலைய விளையாட்டு மைதானத்தில் எறிபந்தாட்டம், உதைபந்தாட்டம், கரபந்தாட்டம் முதலியன கிரமமான முறையில் விளையாடப்பட்டன. நிலைய மைதானத்தில் கரபந்தாட்டப் பயிற்சி பெற்ற வீரர்கள் ''அரியாலை விளையாட்டுச் சங்கம்'' என்ற பெயருடன் அகில இலங்கை அறுவர் கரபந்தாட்டப் போட்டியில் வடபகுதியில் முதலிடம் பெற்று கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கை வெற்றி விருதுக்கான போட்டிலும் திறமையுடன் போட்டியிட்டனர் இந்தவியக்கத்தகு பெருமையில் நிலையத்துக்கும் பங்குண்டு.

## நான்காம் வருடம்

இவ்வருடம் நிலைய நிர்வாகம் வாசிகசாலை, கலாபிவிருத்தி, விளையாட்டு ஆகிய மூன்று உப-பிரிவுகளை உள்ளடக்கி இயங்கத் தலைப்பட்டது நிலையப்படிப்பகம் மென் மேலும் விரிவுற இயங்கியது தமிழில் பதினொன்கு வெளியீடுகளும், ஆங்கிலத்தில் பன்னிரெண்டுவெளியீடுகளும் படிப்பகத்தை அலங்கரித்தன. உள்ளூர் மக்களுடன் வெளியூர் மக்கள் பலரும் படிப்பகத்திற்கு வருகை தந்து பலன்பெற்றனர். யாழ். மாநகரசபையினரால் நடத்தப்பட்ட ''யாழ் வினோத களியாட்டு விழா''வில் நிலையக் கலைப்பகுதியினர் அரங்கேற்றிய ''சமூகத் தொண்டன்'' என்ற நாடகம் பாராட்டுப்பத்திரம் பெற்றது. சனசமூக நிலையங்களின் சமாசத்தினர் நடாத்திய கைப்பந்தாட்டப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றது. இவ்வாண்டு சமாசப்பகுதியினர் நடத்திய பேச்சுப் போட்டிகளிலும் நிலையம் பங்கு பற்றியது.

நான்காவது ஆண்டு நிறைவு விழா நிலையத்தில் வழமைபோல் 27-6-53-ல் விளையாட்டுப் போட்டிகளுடன் கலை நிகழ்ச்சிகள் ஒருங்கமையக் கொண்டாடப்பட்டது. விழாவில் நிலைய முதல் தலைவரான காலஞ் சென்ற வைத்திய கலாநிதி க. கந்தையா அவர்களின் திருவுருவப்படம் உதவி ஸ்தல ஸ்தாபன ஆணையாளர் திரு. C. சூரிய குமாரன் அவர்களால் நிலையத்தில் திரை நீக்கம் செய்யப்பட்டது.

## ஐந்தாம் வருடம்

இவ்வாண்டு நிலையத்தில் சரியான முறையில் சந்தா செலுத்தும் அங்கத்துவ முறை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இதன் பிரகாரம் 125 உறுப்பினர் நிலையத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்ள்க. யாழ்ப்பாணப் பிரிவு சனசமூக நிலையங்களுக்கு மத்தியில் சமாசப்பகுதியினர் நடத்திய கர பந்தாட்டத்தில் நிலையம் பங்கு கொண்டு திறமைச் சான்றிதள் பெற்றது. இதேபோன்று ''மெய்வல்லுனர் போட்டியிலும்'' நிலையம் பல வெற்றிகளைப்பெற்றது உதைபந்தாட்டட்திலும் யாழ்ப்பாணத்தில் பிரபல்யம் பெற்ற வீரர்களை நிலையம் உறுப்பினர்களாகக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இக்காலத்திற்தான் நிலையக் கட்டிடத்தையும் வீளையாட்டு மைதானத்தையும் பெருப்பிக்கும் நோக்கமாக நிதிகோரி ஸ்ரீ சந்திரசேகரா பணப் பராமரிப்புக்காரர்கட்கும் ''சுதந்திர கிழக்காசியா'' என்னும் அமெரிக்க ஸ்தாபனத்திற்கும் விண்ணப்பம் விடுக்கப்பட்டது. இந்த விண்ணப்பத்தின் பலனாக ஸ்ரீ சந்திரசேகரா பணப் பராமரிப்புக்காரரிடமிருந்து ரூபா 1000/- நிலையத்திற்குக் கிடைத்தது. வில்வந்தெரு ஐக்கிய பண்டகசாலையும் ரூபா 900/- இலாபநிதியிலிருந்து நிலையத்திற்கு அன்பளிப்புச் செய்தது. இக்காலத்திற்தான் நிலையம் ''அ'' பிரிவுக்கு தரம் உயர்த்தப்பட்டது. என்பது இங்கு குறிப்பிடற்குரியது. இக்காலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் பிரதமராக இருந்த சேர். ஜோன் கொத்தலாவலை அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்ததை யொட்டி சமாசப் பகுதியினர் நடத்திய இயல், இசை, நாடகப் போட்டிகளில் நிலையம் பங்குபற்றி இயல்— இசை போட்டிகளில் இரண்டாவது இடத்தையும்; நாடகப் போட்டியில் "தியாகி" என்ற நாடகத்தை அரங்கேற்றி முதலாவது இடத்தையும் பெற்றது. யாழ் சனசமூக நிலையங்களுக்கு மத்தியில் நடத்தப்பட்ட "நிர்வாகத்திறமைகான்" போட்டியில் நிலையம் முதலாவது இடத்தைப்பெறத் தகுதியுடையதாக இருந்தும், நிலையப்படிப்பக மண்டபம் சிறிதாக இருந்தகாரணத்தால் இரண்டாமிடத்தைப் பெறவேண்டியேற்பட்டது.

இவ்வாண்டின் நிர்வாகசபை நிலைய உறுப்பினர் மத்தியில் கந்தையா கனகரெத்தினம் என்று இரண்டு இல்லங்களை அறிமுகப்படுத்தி இல்லரீதியில் ஆண்டுநிறைவு விழாவை நடத்தியது குறிப்பிடற்குரியது. நிலையம் எடுத்த பெருமுயற்சியின் காரணமாக இவ்வாண்டில் 25-1-54 தொடக்கம் தபால் புகையிரதம் புங்கங்குளம் புகையிர நிலையத்திற் தரித்துச் செல்லத் தலைப்பட்டது.

## ஆறும் வருடம்:

இவ்வருடம் நிலையத்தின் இரண்டாம் கட்டடத்துக்கான கட்டிட வேலைகளில் நிர்வாக சபை கவனம் செலுத்தியது. இதற்கான அத்திபாரம் காலஞ்சென்ற திரு. க. பொன்னம்பலம் அவர்களினுல் 8-3-56 இல் நாட்டப்பட்டது. நிலைய உறுப்பினர் மத்தியில் 'சாரணப்படை' ஒன்றும் ஆரம்பிக்கப் பட்டது. இதுபோன்று முதலுதவி வகுப் பொன்று ஆசிரியர் திரு. அல்விஸ் அவர்களினுல் நிலையத்தில் நடாத்தப்பட்டது.

அரியாலைக் கிராமத்துக்கு வெளியே நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் நிலைய உறுப்பினர் 'அரியாலை விளையாட்டுக் கழகத்துடன் ஒன்றுசேர்ந்து இயங்க வேண்டும்' என்ற முடிவு நிர்வாக சபையில் உருவாகியது. நிலைய உறுப்பினர்கள் திரு. பொ. பஞ்சலிங்கம், திரு. எஸ். கே. மகாலிங்கம், திரு. கே. எஸ். அருளானந்தம் முதலியோர் 'மெய்வல்லுனற் போட்டி'களில் சிறந்துவிளங்கியமை நிலையத்திற்கும் பெரும் புகழாக அமைந்தது. இவ்வாண்டு சனசமூக நிலைய மேற்பார்வையாளர் திரு. E. வர்ணகுலசிங்கி அவர்கள் மூலம் தொடக்கிவைக்கப்பட்ட 'வாசிப்புச் சுற்றுவட்ட''த்தில் நிலையமும் சேர்ந்து செயற்பட்டது. நிலைய நிர்வாகத்தைத் திறம்பட நடாத்திவந்த செயலாளர் திரு. த. சோமசேகரம் அவர்கள் உத்தியோக மாற்றமாக வெளியூர் செல்லவேண்டி ஏற்பட்டதின்நிமித்தம் தமது பதவியைத் துறந்தார். அன்னாரின் சேவைநலன் பாராட்டி ஒரு பிரிவுபசார வைபவம் நிலையத்தில் நிகழ்ந்தது. நிலையத்தின் ஆருவது ஆண்டு நிறைவுவிழா வழமைபோல் விளையாட்டுப் போட்டிகளுடனும், கலைநிகழ்ச்சிகளுடனும் நிகழ்ந்தது. விழாவுக்கு அன்று தலஸ்தாபன ஆணையாளராக இருந்த திரு. ஏ. ஏ. ஜோசேவ் அவர்கள் பிரதம விருந்தினராக வருகை தந்தார்கள்.

## ஏழாம் வருடம்:

இவ்வருடத்தில் இலங்கையில் தனிச் சிங்களச் சட்டத்தையடுத்துத் தலைதூக்கிய கலவரங்களினுலும் - குழப்ப நிலைகளினுலும் நிலையத்தின் சேவை யாத்திரை பெரிதும் தடைப்பட்டது. மக்களின் கவனம் முழுவதும் அரசியல் நடவடிக்கைகளிற் சென்றமையால் நிலையத்தில் குறிப்பிடக்கூடிய நிகழ்ச்சிகளை நிகழவைக்க முடியவில்லை. நாட்டில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்டத்தினுலும், சத்தியாக்கிரகிகள் தண்டிக்கப்பட்டமையாலும், நாட்டுமக்களின் துக்ககரமான மனச் சூழ்நிலைக்கு அனுதாபம் தெரிவிக்கும்வகையில் நிலையத்தின் ஏழாம்வருட நிறைவுவிழா கொண்டாடப்படவில்லை.

## எட்டாம் வருடம்:

இவ்வருடம் நிலையம் தனது சேவை யாத்திரையை மந்தகதியிலேயே தொடர்ந்தது. அரசியற் காரணங்களால் நாட்டில் நல்ல சுமுகமான நிலைவரம் தோன்றவில்லை. எனினும் நிலையம் சமாசப்போட்டிகளிலும்- விளையாட்டு நிகழ்ச்சிகளிலும் பங்குகொண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டது. எட்டாம் வருட நிறைவு விழா அன்று பிரதம நீதிபதியாக இருந்த திரு. ஸ்ரீஸ்கந்த ராசா அவர்களின் தலைமையில் இல்ல விளையாட்டுப் போட்டிகளுடன் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. செல்வி ஸ்ரீஸ்கந்த ராசா அவர்கள் விளையாட்டு வீரர்களுக்குப் பரிசில்கள் வழங்கினுர். இவ்வருடம் நிலைய உறுப்பினர் தொகை 195 ஆக உயர்ந்தமை குறிப்பிடற்குரியது.

## ஒன்பதாம் வருடம்:

இவ்வாண்டு நிலையத்தின் இரண்டாம் கட்ட கட்டிட வேலைகள் விரைவாக நிறைவேறி வரலாகியது. இதன்நிமிர்த்தம் நிலையத்தை திரு. இ. தம்பிப்பிள்ளை அவர்களின் கடைக்கட்டிடத்தின் ஓர் அறைக்கு மாற்றப்பட்டது. நிலையத்தின் தலைவர் திரு. சு. செ. மகாதேவா அவர்கள் அரசியற்காரணமாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டதனுல் நிலையத்தின் ஒன்பதாவது ஆண்டு நிறைவுவிழா கொண்டாடப்படவில்லை. எனினும் சரஸ்வதி பூசை, தீபாவளி, தைப்பொங்கல் விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

## பத்தாம் வருடம்:

இவ்வருடம் நிலையத்தின் பத்தாம் ஆண்டு நிறைவுவிழா 19-9-59 இல் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவையொட்டி நிலையத்தின் புதிய கட்டிடமும் காலஞ்சென்ற திரு. க. பொன்னம்பலம் அவர்களினுல் திறந்துவைக்கப்பட்டது. புதிய கட்டிடம் ரூபா 5,200/- செலவில் கட்டி முடிக்கப்பட்டது. இவ்வருடம் இசைவகுப்பு ஒன்றும் நிலையத்தில் தொழிற்படத் தொடங்கியது.

## பதினோராம் வருடம்:

இவ்வாண்டு நிலைய வரலாற்றின் ஒரு மறுமலர்ச்சிக்காலம் என்றுல் மிகையன்று. பலவிதமான முன்னேற்றங்கள்-புதிய திருப்பங்கள் நிலையத்தில் நிகழ்ந்தன. முதன்முதலாக நிலையத்தில் ஒரு 'மாதர் பகுதி' அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. இதற்கான அங்குரார்ப்பண விழா 24-3-60 இல் அன்று யாழ். காரியாதிகாரியாக இருந்த திரு. எஸ். பாலச்சந்திரன் அவர்களின் தலைமையில் நிகழ்ந்தது. ஐம்பது பெண் உறுப்பினர் புதிதாக நிலையத்தில் இணைந்தனர். ஆண் உறுப்பினர் தொகையும் இவ்வாண்டு பெருகியது. (211 உறுப்பினர் நிலையத்தில் நற்தொண்டாற்றியமை குறிப்பிடற்குரியது.) புதிதாக இணைந்த 'மாதர் பகுதி' நிலையப் புகழ்வளர்க்கும் பெரும்பணியில் தீவிரமாக ஈடுபட்டார்கள். பெண்களுக்கான வளையம் வீசுதல் விளையாட்டு — பெண்களுக்கான கைப்பந்தாட்டம் என்பன ஆரம்பிக்கப்பட்டன. சனசமூக நிலையங்களின் சமாசவிழாவில் 'இயல் - இசை - நடனம் போன்ற நளின கலைகளில் எமது பெண்கள் முதலிடங்கள் பல பெற்றனர். அத்துடன் விளையாட்டுப் போட்டிகளிலும் பல முதல் ஸ்தானங்களை வகித்து பெண்கள் மட்டும் 65 புள்ளிகளை நிலையத்திற்குத் தேடித் தந்தனர். செல்வி பத்மாவதி சிவகடாட்ச சர்மா வட இலங்கையிலேயே சிறந்த பேச்சாளராக முதல் ஸ்தானத்தைப் பெற்றது எமது நிலையத்திற்குப் பெருமை தரவல்ல செய்தி. இதேமுறையில் நிலைய நடனமணிகளான செல்விகள்: பொ. திருலோசனி, மு. யோகாதேவி, வை. கலாவதி, சி. நேசமலர் முதலியோர் காரியாதிகாரிப் பிரிவு சனசமூக நிலையங்களின் நடனப் போட்டிகளில் முதலிடத்தைப் பெற்று நிலையத்திற்குப் புகழ்தேடித் தந்தனர். இவ்விழாவில் இசைப்போட்டியில் செல்விச.இராதாதேவி முதலிடத்தைப்பெற்றதும் குறிப்பிடத்தக்க செய்தியாகும். நிலையம் கொண்டாடிய ஆண்டு நிறைவு விழாவின்போது நிலைய மாதர்கள் இயல், இசை, நாடகம், கைப்பணி, விளையாட்டு முதலிய சகல துறைகளிலும் ஈடுபட்டுத் திறமைகளை நிலைநாட்டினர். இத்தனைக்கும் தலையாய காரணமான மாதரணித் தலைவி திருமதி பத்மலோசனி மாசிலாமணி அவர்களும், செல்வி ச. இராதாதேவி அவர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

இவ்வாண்டு யாழ். சனசமூக நிலையங்கள் மத்தியில் நடைபெற்ற சமாசவிழாவில் எமது நிலையம் 128 அதிகப்படியான புள்ளிகளைப் பெற்று மாபெரும் வெற்றிபெற்றது. இதேவருடம் எமது நிலைய உறுப்பினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. S. K. மகாலிங்கம் அவர்கள் யாழ்ப்பாண உதைபந்தாட்டக் கோஷ்டிக்குத் தலைமைதாங்கி விளையாடியமையும், திரு. பொ. பஞ்சலிங்கம் அவர்கள் அகில இலங்கையில் ஓர் சிறந்த ஓட்ட வீரராகச் சாதனை நிலைநாட்டியமையும் நிலையத்திற்குப் புகழைத் தேடித்தந்த சம்பவங்களாகும்.

இவ்வாண்டு சாரண இயக்க அதிகாரி திரு. ஆர். சி. எஸ். குக் அவர்கள் நிலையச் சாரணர் இயக்கத்தைப் புனரமைப்புச் செய்தார். என்றுமில்லாத திருவிழாவாக நிலைய ஆண்டுவிழா நிலையத்தில் 24 - 5 - 60 இல் கொண்டாடப்பட்டது. விழாவையொட்டிக் 'கலைக்கண்காட்சி' யொன்றும் இடம்பெற்றது. அன்று யாழ். உதவி உள்ளூராட்சி ஆணையாளராக இருந்த திரு. ஏ. ஏ. ஜோசேவ் அவர்கள் விளையாட்டுப் போட்டிகளுக்குத் தலைமைவகித்தார். அன்னாரின் பாரியார் விளையாட்டு வீரர்களுக்கான பரிசில்களை வழங்கினார். அன்று யாழ். அரசாங்க அதிபராயிருந்த திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்கள் இரவுக் கலைநிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகித்தார். அன்னாரின் பாரியார் கலைஞர்களுக்குரிய பரிசில்களை வழங்கினார்.

இவ்வாண்டு பல உள்ளூர் அபிமானிகளும்-பல வெளியூர்ப் பிரமுகர்களும் நிலைய விளையாட்டுப் போட்டிகளின்போது வழங்குவதற்கான 'வெள்ளிக் கிண்ணங்கள்' பலவற்றை நிலையத்துக்கு அன்பளிப்புச் செய்தனர். நிலையத்தின் செயலாளர் திரு. இ.க. குமரையா அவர்கள் ஒரு 'சையிக்கிலை' அன்பளிப்புச் செய்தார். அந்தச் சையிக்கில் 'லொத்தர்' போட்டு அதனால் கிடைத்த பணம் நிலைய நிதியில் சேர்க்கப்பட்டது. யாழ். மாநகர சபையினரால் சிறுவர்களுக்கான 'சறுக்கு பலகை' ஒன்றும் பொருத்தப்பட்டது.

## பன்னிரண்டாம் வருடம்:

கைப்பணித்துறையில் இவ்வாண்டு பல அபிவிருத்திகள் ஏற்பட்டன. வெங்காயக் கூடை முடைதல், பிரம்புக் கைப்பணி, பொம்மைகள் செய்தல் முதலியவற்றில் நிலைய மாதர்பகுதி உற்சாகமுடன் ஈடுபாடு கொண்டனர். நிலையத்தின் இவ் அபிவிருத்தியை ஊக்குவிக்கும்பொருட்டு ரூபா 15,000/- பெறுமதியான பொம்மை செய்யும் கருவிகளையும் — ஒரு போதனா ஆசிரியரையும் தந்துதவ அரசாங்கம் முன்வந்தது. தொடர்ந்து இத்துறையில் அங்கத்தவர்களின் அக்கறை செல்லாததினால் இவ் ஏற்பாட்டை அரசாங்கம் வேறொரு நிலையத்துக்கு வழங்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. 30-10-61 இல் பிரித்தானிய அரசாங்க தகவல் அதிகாரி திரு. கீ. ஆர். டீன் அவர்களும், அவரின் துணைவியாரும், செல்வி எஸ். கிறீன்வே அவர்களும் நிலையத்துக்கு வருகை தந்தனர். இவர்களுக்குச் சுதேசிய உணவுப் பண்டங்களைக்கொண்ட விருந்துபசாரம் நிலையத்தில் நடாத்தப்பட்டது. நிலைய மாதர் பிரிவினரைச் சேர்ந்த 'முதற்தர இசையாளர்' சிலர் கொழும்பு நகரம் சென்று இலங்கை வானொலியில் நாட்டுப் பாடல்கள் பாடிப் பெரும் புகழையீட்டினர். இசைத்துறையில் பெண்களின் இம் முன்னேற்றத்துக்கு முழுமுதற் கர்த்தாவாக செல்வி ச. இராதாதேவி விளங்கினார்.

தமிழ்மொழிப் போராட்ட இயக்கத்தையொட்டி நாட்டில் நிலவிய ஊரடங்கு உத்தரவின் காரணமாக ஆனி மாதம் நடைபெறவேண்டிய நிலைய ஆண்டு நிறைவுவிழா புரட்டாதி மாதம் நிகழ்ந்தது. விழாவில் கடந்த வருடம்போல் கலைக் கண்காட்சி இடம்பெற்றது. காட்சியைக் காலஞ்சென்ற கொடைவள்ளல் வைத்திய கலாநிதி திரு. பி. எஸ். சுப்பிரமணியம் அவர்கள் திறந்துவைத்தார்கள். இல்ல விளையாட்டுப் போட்டிகளும், இரவு கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. யாழ். மாநகர பிதாவாக இருந்த திரு. ரி. துரைராசா அவர்கள் விழாவுக்குத் தலைமைதாங்க, திருமதி துரைராசா அவர்கள் பரிசில்களை வழங்கினார்.

இவ்வாண்டு காலஞ்சென்ற மாநகரசபை உறுப்பினர் திரு. க. குகதாசன் அவர்களால் நிலையத்திற்கு பத்துக் கதிரைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. அங்கத்தவர்கள் சிலர் அதிர்ஷ்ட லாபச் சீட்டுமூலம் பணம் சேர்த்து ஒரு சுவர்க்கடிகாரத்தை வாங்கி நிலையத்துக்கு அன்பளிப்புச் செய்தார்கள். இவ்வாண்டு நிலைய உறுப்பினர் தொகை 274 ஆக உயர்ந்தது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதின்மூன்றும் வருடம்:

இவ்வாண்டு இந்தியாவில் இருந்து பிரபல யோகாசனமேதை திருமதி குமாரசாமி அவர்கள் 4-8-62 இல் எமது நிலையத்திற்கு வருகைதந்து தனது 70 வயது நிரம்பிய சிஸ்யரான ஓர் முதியவரைக்கொண்டு யோகாசனம்செய்து காண்பித்து யோகாசனத்தின் மகிமை குறித்து விரிவுரையும் செய்தார். சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் கேற்முதலியார் திரு. சி. தியாகராசா அவர்களும். முகாந்திரம் திரு. இ. பி. இராசையா அவர்களும், வட மாகாண முன்னைநாள் கல்வி அதிகாரி திரு. எஸ். யு. சோமசேகரம் அவர்களும் வருகை தந்திருந்தனர்.

இவ்வருடம் நிலையத்தில் சிறுவர்களுக்கான இலவச பால்விநியோகமும் தொடக்கி வைக்கப்பட்டது. நிலையத்தின் அத்தியாவசிய தேவையான திறந்தவெளியரங்கிற்கான அத்திபாரம் இடப்பட்டு பொதுமக்களின் நிதியுதவி - சிரமதான உதவி முதலியவற்றால் அத்திபாரம் நீர்மட்டம்வரை உயர்த்தப்பட்டு மேடையாக மாற்றப்பட்டது. இந்தப் பெரும் முயற்சியை திரு. சு. பாலசுந்தரமும் - திரு. எஸ். எஸ். சண்முகநாதனும் முன்னணியில் நின்று நிறைவேற்றியமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டு நிலையத்தில் மூன்றுவது இல்லமாகிய 'குகதாசன்' இல்லம் தொடக்கி வைக்கப்பட்டது. திரு. சி. க. சுப்பிரமணியம்அவர்களால் நிலையத்திற்குக் கதவுகளும் — திரு. த. சண்முகசுந்தரம் அவர்களால் ஒரு மேசையும், அன்பளிப்புச் செய்யப்பெற்றன.

இவ்வாண்டும் நிலையத்தின் ஆண்டு நிறைவுவிழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கலைக் கண்காட்சியைக் காரியாதிகாரியாக இருந்த திரு. செல்வரெத்தினம் அவர்கள் திறந்துவைத்தார்கள். வழமைபோல் இல்ல விளையாட்டுப் போட்டிகளும் - கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. விழாவுக்கு வைத்திய கலாநிதி திரு. மயில்வாகனம் அவர்கள் தலைமைவகிக்க திருமதி மயில்வாகனம் அவர்கள் பரிசில்கள் வழங்கினார்கள். இவ்வாண்டு நிலைய உறுப்பினர் தொகை 395 ஆக அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ். மாநகரசபையினால் கொண்டாடப்பட்ட 'சுகாதார விழா'வையொட்டி நடைபெற்ற சுகாதாரவிழாக் கொண்டாட்டப் போட்டியில் நிலையம் முதலிடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்க செய்தியாகும். இவ்வாண்டு காலஞ்சென்ற திரு. க. குகதாசன் அவர்களின் திருவுருவப்படம் அன்னார் மாநகரசபை உறுப்பினராக இருந்து நிலையத்துக்கு ஆற்றிய தொண்டு குறித்துத் திறந்துவைக்கப்பட்டது.

## பதினான்காம் வருடம்:

இவ்வருடம் நிலைய மைதானத்தில் பல அபிவிருத்திகள் ஏற்பட்டன. மைதானத்துக்கு மண் பரப்பி நிலமட்டம் உயர்த்தப்பட்டது. சிறுவர் விளையாட்டுத் திடலுக்கு குருமணல் பரப்பி அழகுபடுத்தப்பட்டது. மைதானத்தின்மத்தியில் பலகையால் மூடப்பட்டிருந்த கிணறு மண்ணால் மூடப்பட்டது. பாவனையற்றுக்கிடந்த மீன்சந்தைக் கட்டிடம் நிலைய மாதர் பகுதிக்காகச் சுவர்கள் எழுப்பி அறைவடிவில் அமைத்து வழங்கப்பட்டது. சிறுவர் விளையாட்டுத் திடலை அழகுபடுத்த 'மேக்கூரி லையிட்' வெளிச்சம் பொருத்தப்பட்டது. இத்தனையும் எமது வேண்டுகோளுக்குச் செவிமடுத்துச் செய்தளித்த மாநகரசபை உறுப்பினர் திரு. கா.ச. நடராஜா அவர்களின் முயற்சிக்கு நிலையத்தின் நன்றிகள் உரித்தாகுக.

நிலையத்தின் வேண்டுதலின் பெயரால் புங்கங்குளம் புகையிரதநிலையத்தின் மேடை மூன்றுவது கட்டமாக நீட்டப்பட்டது. இவ்வாண்டு சிறுவர் நாடகமன்றத்தினர் ஒரு ஒலிபெருக்கிப் பெட்டியை நிலையத்திற்கு அன்பளிப்புச் செய்தனர்.

கலைக் கண்காட்சியுடன் நிலைய ஆண்டு நிறைவுவிழா இவ்வாண்டு கோலாகலமாக ஆரம்பமாகியது. கண்காட்சியை மாதர்பகுதித் தலைவி திருமதி மா. பத்மலோசனி அவர்கள் திறந்துவைத்தார். உடற்பயிற்சிப் போட்டிகளுக்கு உடற்பயிற்சிப் போதனாசிரியர் திரு. பி. இராஜேந்திரா அவர்கள் தலைமைவகிக்க திருமதி இராஜேந்திரா பரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அரியாலை சனசமூக நிலைய அலுவலக உள் தோற்றம்



அரியாலை சனசமூக நிலையப் படிப்பக உள் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரியாலை சனசமூக நிலைய இல்லத் தலைவர்கள்



வைத்திய கலாநிதி
க. கந்தையா



திரு. ஆ. கனகரெத்தினம்



திரு. க. குகதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில்கள் வழங்கினுர்; இரவுக் கலைநிகழ்ச்சி களுக்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. மாணிக்கவாசகர் அவர்கள் தலைமை தாங்கிப் பரிசில்கள் வழங்கினுர்.

## பதினைந்தாம் வருடம்:

இவ்வாண்டு நிலையத்தின் நெடுங்காலத் தலைவராக இருந்த நியாயதுரந்தரர் திரு. சு. செ. மகாதேவா அவர்கள் யாழ். மாநகர சபையின் முதல்வராகத் தெரிவுசெய்யப் பட்டதையொட்டி அன்னுருக்கு நிலையத் தினரால் தேநீர் விருந்துபசாரமொன்று நிலையத்தில் நடைபெற்றது.

நிலைய உறுப்பினர் காலஞ்சென்ற வாலி பர் திரு. சிங்கராசா புறூடி அவர்களின் ஞாபகார்த்தமாகச் 'சிங்கராசா புறூடி ஞாபகார்த்த வெள்ளிக் கிண்ண'மும், அலு மாரியொன்றும் அன்னுரின் குடும்பத்தின ரால் வழங்கப்பட்டது.

இவ்வாண்டு ஆண்டு நிறைவுவிழாவை யொட்டி நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டிகளுக்கு 'கனகரெத்தினம் மகாவித் தியாலய' அதிபராகவிருந்த காலஞ்சென்ற திரு. க. பத்மநாதன் அவர்கள் தலைமை வகித்தார்கள். கலை நிகழ்ச்சிகள் யாழ். உதவி அரசாங்க அதிபராகவிருந்த காலஞ் சென்ற ஏ. பெருமையினுர் அவர்களின் தலை மையில் நிகழ்ந்தன.

## பதினுரும் வருடம்:

யாழ். மாநகர முதல்வராகவிருந்த எம் மூர்ப் பெரியார் திரு. சு. செ. மகாதேவா அவர்கள் இவ்வாண்டு நிலையம் ஆண்டு நிறைவுவிழாவை முன்னிட்டு நடாத்திய 'கலை கைத்தொழில் காட்சி'யைத் திறந்து வைத்தார்.

உடற்பயிற்சிப் போட்டிகளுக்கு யாழ். பொலிஸ் அதிபராகவிருந்த திரு. ஜே. வான் சன்டன் அவர்கள் தலைமைவகிக்கத் திருமதி வான்சன்டன் அவர்கள் பரிசில்கள் வழங் கினுர்.

இரவு நடைபெற்ற கலைநிகழ்ச்சிகளுக்கு யாழ். மாநகரசபை ஆணையாளராகவிருந்த திரு. ஏ. எம். ஏ, சாமி அவர்கள் தலைமை தாங்க, 'ஈழநாடு' பத்திரிகை ஆசிரியர் திரு. கே, பி. ஹரன் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினுர்கள்.

இவ்வாண்டு முதன்முதலாக ஆண்டு நிறைவுவிழாவில் 50 மைல் சையிக்கிள் ஓட் டப் போட்டி நடைபெற்றது. போட்டியில் இலங்கையின் பிரபல சையிக்கில் ஓட்டவீரர் திரு. மொரிஸ் குமாரவேல் பங்குகொண்டு முதலிடத்தைப் பெற்ருர். முதலாவது வந்த வீரனுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட சையிக்கிலை திரு. வே. க. மாசிலாமணி அவர்கள் அன்பளிப்புச் செய்தார்.

## பதினேழாம் வருடம்:

இவ்வாண்டு நிலையத்தின் அனுசரணை யுடன் அரசாங்கம் ஒரு நெசவு நிலையத்தை 'மாம்பழம் சந்தி'க்கருகாமையில் அமைத் தது. இந்நிலையத்தின் கட்டிடம் நிறைவு பெற அன்று நிலையத்தின் தலைவராகவிருந்த திரு. வே. க. மாசிலாமணி அவர்கள் ரூபா 3,000/- நிதியுதவி செய்தார்.

யாழ். மாவட்ட சனசமூக நிலையப் போட்டிகளில், விளையாட்டுப்போட்டிகளில் இவ்வாண்டும் நிலையம் மிக இலகுவாக முத லிடத்தைப் பெற்றது; இதேபோன்று கலை சம்பந்தமான போட்டிகளில் முதலிடத் தைப் பல நிகழ்ச்சிகளில் நிலையம் பெற்றது குறிப்பிடற்குரியது.

இவ்வாண்டு நிலைய ஆண்டு நிறைவு விழாவில் இல்லப் போட்டிகள் நடைபெற் றுலும், சில அசந்தர்ப்பங்கள் காரணமாக கலை நிகழ்ச்சிகள்; நாடகங்கள் எதுவும் நடைபெறவில்லை.

## பதினெட்டாம் வருடம்:

20-7-67 இல் ஐக்கிய அமெரிக்க நாடு களின் 'சமாச்சாரப் பகுதி'யின் அத்தியட் சகர் திரு. ஜோன். டபிள்யூ. எல். றஷல் அவர்கள் நிலையத்துக்கு வருகைதந்தார்கள்; புதிதாக நிலையத்தில் தொடக்கப்பெற்ற 'நடமாடும் நூல்நிலைய'த்துக்கு அன்னுரால் சில நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட் டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாண்டு நிலைய ஆண்டு நிறைவு விழாவின் மெய்வல்லுனற் போட்டி யாழ் அரசினர் வைத்தியசாலையின் இருதய வைத்திய நிபுணரான எம்மூர்வாசி வைத்தியக் கலாநிதி திரு. ம. விசுவரத்தினம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதே போன்று எம்மூர் வாசியான வைத்திய கலாநிதி கே. ஜே. கனகசுந்தரம் அவர்கள் கலை நிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகிக்க, ஆசிரியர் திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினுர்கள்.

## பத்தொன்பதாம் வருடம்:

இவ்வாண்டு யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களுக்கு மத்தியில் நடைபெற்ற மெய்வல்லுனற் போட்டியில் நிலையம் 150 அதிகப்படியான புள்ளிகளைப் பெற்று மாபெரும் வெற்றிபெற்று என்றும்போல் முதலிடத்தைத் தனதாக்கிக்கொண்டது.

நெடுங்காலமாக நீர்மட்டத்துடன் நின்றுவிட்ட 'திறந்தவெளியரங்கம்' இவ்வாண்டு கட்டிமுடிக்கப்பெற்றது. பொதுமக்களின் நிதியுதவியுடன் காலஞ்சென்ற திருமதி காசிப்பிள்ளையவர்கள் வழங்கிய ரூபா 5.000/- த்தினுல் இவ்வரங்க நிர்மாணம் பூர்த்தியானது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையத் தொடக்கநாளிலிருந்து இற்றைவரை நிலைய அபிவிருத்திகருதி மனங்கொண்டு பொருளுதவி செய்துவரும் காசிப்பிள்ளை குடும்பத்தாரின் தொண்டு மனப்பான்மையைக் கௌரவிக்கவும்; திரு. பி. காசிப்பிள்ளை அவர்கள் நிலையத்துக்கு ஆற்றிய சேவையை நினைவுகூரும் முறையிலும் நிலையத்தின் திறந்தவெளி அரங்கத்திற்கு 'காசிப்பிள்ளையரங்கம்' என்று பெயர் சூட்டப் பட்டது.

ஆண்டு நிறைவுவிழா இவ்வாண்டும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மெய்வல்லுனற் போட்டிகளுக்கு யாழ். மாநகர சபை ஆணையாளராகவிருந்த திரு. கே. தங்கவேலு அவர்கள் தலைமைதாங்கினுர்கள், கலைநிகழ்ச்சிகளுக்கு மனநோய் வைத்திய நிபுணரும், எம்மூர்வாசியுமாகிய காலஞ்சென்ற வைத்திய கலாநிதி திரு தா. அருளம்பலம் அவர்கள் தலைமைதாங்க, வைத்திய கலாநிதி திருமதி அருளம்பலம் அவர்கள் பரிசில்கள் வழங்கினுர்கள்.

## இருபதாம் வருடம்:

இவ்வாண்டு யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களுக்கு மத்தியில் நடைபெற்ற மெய்வல்லுனற் போட்டியில் எமது நிலையமே முதலிடத்தைப் பெற்றது. நாடகப் போட்டியிலும் முதலிடம் நிலையமே பெற்றது.

நிலையத் திறந்தவெளியரங்கையும் நிலையத்தையும் இணைக்கும் கட்டிடம் பல நாடகங்கள் வைத்துத் திரட்டப்பெற்ற நிதியினுலும் - அன்று நிலையத் தலைவராக இருந்த மாநகரசபை உறுப்பினர், நியாயதுரந்தரர் திரு. அ. விசுவநாதன் அவர்களின் நிதியுதவியைக்கொண்டும் நிறைவேற்றப்பெற்றது. நிலைய மண்டபத்தையும், திறந்தவெளியரங்கையும் பிரிக்கும் இரும்புக் கதவுக்கான கம்பிகள் பொறியியலாளர் திரு. ஈ. முத்தையா அவர்களினுலும், சில வாலிபர்களின் பெருமுயற்சியினுலும் அன்பளிப்புச் செய்ய, திரு. காசிப்பிள்ளை கணேசன் அவர்கள் கதவைச்செய்து அன்பளித்தார்.

'யாழ். கிறிற்றிக்கல்' இரும்புத் தொழிற்சாலையினரால் ஒரு சிறிய 'கேற்' அன்பளிப்புச் செய்யப்பட்டது.

கடைக்கும் - நிலையத்திற்கும் இடையில் இருந்த இடம் அறையாக அமைக்கப்பட்டு நிலையத்தின் உபகரணங்கள் வைக்க உதவப் பட்டது

யாழ். மாநகர சபையினர் நிலையத்தின் எல்லையை மதிலாகக் கட்டி உதவினர். நிலையப் படிப்பகத்தின்முன் சையிக்கில் நிறுத்துவதற்கான அமைப்பு சீமெந்தினுல் கட்டப்பட்டதும் இவ்வாண்டே.

நிலைய ஆண்டு நிறைவுவிழா இவ்வருடம் தொடர்ந்து மூன்று தினங்கள் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. மெய்வல்லுனற் போட்டிகளுக்கும் - கலைநிகழ்ச்சிகளுக்கும் பிரதம விருந்தினர்களாக யாழ். மாநகரசபை ஆணையாளராகவிருந்த திரு. ஏ. ரி. சுந்தரம் அவர்களும், யாழ். வேம்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் கல்லூரி அதிபர் செல்வி மேபல் தம்பையா அவர்களும், யாழ். மாநகரசபை முதல்வராகவிருந்த திரு. எஸ். நாசராசா அவர்களும் வருகைதந்து விழாவைக் கௌரவித்தனர். பெண்களின் முதல்நாடகமான ''கற்புக்கனல்'' விழாவில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டு யாழ். மாநகசபையின் பிரதிநிதிகளான 8-ம் வட்டார உறுப்பினர் திரு: தம்பு கந்தையா அவர்களுக்கும், 9-ம் வட்டார உறுப்பினர் திரு. கா. ச. நடராசா அவர்களுக்கும், 10-ம் வட்டார உறுப்பினர் திரு. அ. விசுவநாதன் அவர்களுக்கும், 11-ம் வட்டார உறுப்பினர் திரு. நா. மார்க்கண்டு அவர்களுக்கும், 13-ம் வட்டார உறுப்பினர் திரு. அந்தோனிப்பிள்ளை அவர்களுக்கும் நிலையம் வரவேற்பளித்துக் கௌரவித்தது.

## இருபத்தோராம் வருடம்:

இவ்வருடம் நிலையத்தில் பல அபிவிருத்தி வேலைகள் நிகழ்ந்தன. யன்னல்களுக்குக் கதவுகள் போடப்பட்டன. பெரிய மேசையொன்றும், சின்ன மேசை இரண்டும் வாங்கப்பட்டன. எம்மூர்வாசியும், 'மனநோய் வைத்திய நிபுண'ருமான வைத்தியக் கலாநிதி திரு. ஆ. சிற்றம்பலம் அவர்களால் ஆறு கதிரைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இவ்வாண்டு ஆண்டு நிறைவுவிழாவையொட்டி நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டிகளுக்கு யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரி அதிபர் வண. பிதா ரி. ஏ. ஜே. மதுரநாயகம் அவர்கள் தலைமை தாங்கினார்கள். கலைநிகழ்ச்சிகளுக்கு வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளராகவிருந்த திரு. ஏ. ஏ. ஜோசவ் அவர்கள் தலைமைவகித்தார்கள்.

## இருபத்திரெண்டாம் வருடம்:

இவ்வருடம் 'இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினர்' நிலையத்துக்கு வருகைதந்து நிலையத்தின் சில கலைநிகழ்ச்சிகளை ஒலிப்பதிவுசெய்து சென்று வானொலியில் ஒலிபரப்பி நிலையத்தைப் பெருமைப்படுத்தினர்.

நிலையத் தலைவராக இருந்த திரு. வே. க. மாசிலாமணி அவர்களின் உதவியால் நிலையக் கதவுகளுக்கு 'பொலிஸ்' பூசி மெருகூட்டப்பெற்றது. என்றும்போல் இவ்வருடமும் யாழ். காரியாதிகாரிப்பிரிவு விளையாட்டுப் போட்டிகளில் எமது நிலையமே முதலிடத்தைப் பெற்றது.

துரதிஷ்டவசமாக நிலையத்திலிருந்து களவுபோன சுவர்மணிக்கூடுக்கும், இரண்டு கதிரைகளுக்கும்ஈடாக புதிய கதிரை இரண்டும், சுவர் மணிக்கூடும் வாங்கப்பட்டன.

இவ்வருடம் அவசரகாலச்சட்டம் காரணமாக ஆண்டு நிறைவுவிழா ஆவணி மாதமே கொண்டாடப்பட்டது. நாட்டிலே நிலவிய அவசரகால நிலைமையாலும், அங்கத்தவர் மத்தியில் நிலவிய ஊக்கமின்மையாலும் விழா பெருமளவில் நடைபெறவில்லை. நிகழ்ச்சிகளுக்கு யாழ். பொலிஸ் அதிகாரியாக இருந்த திரு. கே. கார்த்திகேசு அவர்கள் தலைமை வகித்தார். இவ்விழா திருமதி பத்மா யோகராசா அவர்களின் பெருமுயற்சியால், பொதுவிளையாட்டு நிகழ்ச்சிகளுடன் நிகழ்ந்தது குறிப்பிடத்தக்கது.

## இருபத்திமூன்றும் வருடம்:

இவ்வருடம் நிலையத் திறந்தவெளியரங்கின் மேடைக்குப் பலகை பொருத்தப்படுவதற்கான அடித்தளம் அமைக்கப்பட்டுப் பக்கங்களுக்குச் சீமெந்து நிலமும் போடப்பட்டது (இதற்காகிய செலவு ரூபா 1313 சதம் 75) திறந்தவெளியரங்கிற்குத் திரு. காசிப்பிள்ளை கணேசன் அவர்களால் ரூபா 1,000/- செலவில் தகரத்தினலான கதவும் பொருத்தப்பட்டது. எமது ஊர்வாசியான வைத்தியக் கலாநிதி திரு. பொ. இரகுநாதன் அவர்கள் ரூபா 250/- நிலைபத்துக்கு அன்பளிப்புச் செய்தார். திரு. சி. பஞ்சலிங்கம் அவர்கள் 50 ஓடுகளை நிலையத்திற்கு அன்பளித்தார். யாழ் மாநகரசபை சிறுவர் விளையாட்டுத்திடலில் சிறிய சறுக்குப் பலகையும் — சீமெந்து ஆசனங்களும் அமைத்து உதவியது. இவ்வாண்டு நிலையப் படிப்பகத்திற்கு ரூபா 100/- செலவில் திரைச்சீலையும் போடப்பட்டன. இவ்வருடமும் யாழ். காரியாதிகாரிப் பிரிவு சனசமூக நிலைய விளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாட்டுப் போட்டிகளில் எமது நிலையமே முதலிடத்தைப் பெற்றது.

இவ்வருடம் நிலைய ஆண்டுநிறைவுவிழா வில் மெய்வல்லுனற் போட்டிகளுக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதியாகவிருந்த திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் அவர்கள் பிரதம விருந்தினராக வருகைதந்தார்கள். திருமதி ஆசீர்வாதம் அவர்கள் பரிசில்கள் வழங்கினார்கள். இரவுக் கலைநிகழ்ச்சிகளுடன் விழா இனிது முடிவுற்றது.

## இருபத்திநான்காம் வருடம்:

இவ்வருடம் நிலையத் திறந்தவெளியரங்கின் மேடைக்குப் பலகை பொருத்தப்பட்டன. இதற்கான நிதியுதவி எமதூர் வாசியும், வெளிநாட்டில் வசிப்பவருமான திரு. க. இராஜா ரகுநாதன் அவர்களால் ரூபா 1,025/- அன்பளிப்புச் செய்யப்பட்டது.

இவ்வாண்டு ஆண்டு நிறைவுவிழாவில் வடமாகாணப் பொலிஸ் அதிபர் திரு. ஜே. டி. எம். ஆரியசிங்கி அவர்களின் தலைமையில் மெய்வல்லுனற் போட்டிகள் நடைபெற்றன. திருமதி ஆரியசிங்கி அவர்கள் விளையாட்டு வீரர்களுக்கான பரிசில்களை வழங்கினார்கள். இரவு கலைநிகழ்ச்சிகள் யாழ். காரியாதிகாரி திரு. இ. யோகநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற, திருமதி யோகநாதன் அவர்கள் கலைஞர்களுக்கான பரிசில்களை வழங்கினார்கள். மெய்வல்லுனற் போட்டியின்போது விசேட நிகழ்ச்சியாக அச்சுவேலி புனித திரேசா கல்லூரி மாணவிகளின் 'பான்ட்' இசை உடற்பயிற்சியும், அணிவகுப்பும் நடைபெற்று இரசிகர்களின் பாராட்டைப் பெற்றமை குறிப்பிடற்குரியது.

இவ்வாண்டு நிலைய அங்கத்தவர் பட்டியலில் கௌரவ அங்கத்தவர்கள் 105 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். சாதாரண அங்கத்தவர் தொகை 298ஆக உயர்ந்தன. இவற்றில் பெண்கள் 114 பேர் என்பது பெருமைப்படக்கூடிய செய்தியாகும்.

நிலையத்தின் தீவிரமான உறுப்பினர்களாகச் செயலாற்றிய இளைஞர்கள் செல்வன் யோகராசா ரவிச்சந்திரன், செல்வன் நவரத்தினம் குமாரகுலசிங்கம் ஆகியோரின் திடீர் மறைவினால் நிலையம் ஆறுத சோகத்தில் ஆழ்ந்தது. நிலையத்தின் உத்தியோகபூர்வமான கொடி அவர்களின் பிரிவு குறித்து அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது.

## இருபத்தைந்தாம் வருடம்:

இவ்வாண்டு நிர்வாகக்குழு நிலையத்தின் இருபத்தைந்தாவது ஆண்டுவிழாவை வெள்ளி விழாவாகக் கொண்டாவேண்டிய மாபெரும் பொறுப்பையும் ஏற்றுப் பதவியேற்றது. பதவியேற்று இரண்டு மாதங்களில் நிர்வாகக்குழுத் தலைவராக இருந்த திரு. வே.க.மாசிலாமணியவர்கள் தவிர்க்க முடியாத தனிப்பட்ட காரணங்களால் தமது பதவியைத் துறந்தார். புதியதலைவர் தெரிவை முன்வைத்துக் கூடிய அவசரப் பொதுக்கூட்டம், நிலைய ஆரம்பநாள்முதல் இன்றுவரை நிலையத்தில் பல்வேறு பதவிகளை வகித்து அரிய சேவை செய்துவந்தவரும், நிலைய உபதலைவராக இருந்தவருமான திரு. சு. பாலசுந்தரம் அவர்களைப் புதிய நிலையத் தலைவராக ஏகமனதாகத்தெரிந்தெடுத்தது.

இவ்வருடம் நிலையக் கலைப்பிரிவினர் சரஸ்வதி பூசை, தைப்பொங்கல் விழா, பௌர்ணமிதோறும் 'சமய விழாக்கள்' முதலிய நிகழ்ச்சிகளைச் சிறப்பாகக் கொண்டாடினர்.

'வெள்ளி விழா'வை முன்னிட்டு பல்வேறு கலைப்போட்டிகள் யாழ். மாவட்ட ரீதியாகவும், நிலைய இல்லங்களுக்கு மத்தியிலும் நிகழ்ந்தன. 'வெள்ளி விழா'வின் சிறப்பு அம்சமான கலை - கைப்பணி கண்காட்சியிலும் கலைப்பிரிவினர் உற்சாகமுடன் செயலாற்றினர்.

இவ்வாண்டு விளையாட்டுத்துறையில் நமது நிலையம் அடைந்த அபிவிருத்தி குறிப்பிடற்குரியது. வழமைபோல் யாழ். மாவட்ட ரீதியாக நடைபெறும் விளையாட்டுப் போட்டியில் எமது நிலையமே இவ்வாண்டும் முதலிடத்தைப் பெற்றது.

கரபந்தாட்டம், உதைபந்தாட்டம், எறிபந்தாட்டம் ஆகியவற்றில் நிலையவீரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் பல வெளியூர்க் கோஷ்டிகளுடன் போட்டியிட்டார்கள்.

நிலைய 'வெள்ளிவிழா'வை முன்னிட்டு யாழ். மாவட்டரீதியாக உதைபந்தாட்டம், எறிபந்தாட்டம், கரபந்தாட்டம், தாச்சி, வலைப்பந்தாட்டம், மரதன் ஓட்டம், சைபிக்கில் ஓட்டம் முதலிய விளையாட்டுப் போட்டிகளை நிலைய விளையாட்டுப் பகுதியினர் சிறப்புற நடாத்தினர்.

நிலைய மாதர்பகுதியினர் இவ்வாண்டு மாபெரும் சாதனைகள் நிலைநாட்டினர். இவர்களின் விடாமுயற்சியினால் அரசாங்க உதவியுடன் ஓர் தையல்வகுப்பு இவ்வாண்டு தொடக்கிவைக்கப்பட்டது. இவ்வகுப்பை யாழ். காரியாதிகாரி திரு. இ. யோகநாதன் அவர்கள் ஆரம்பித்துவைத்தார்கள். நிலைய உபதலைவி திருமதி லலிதா இராசரெட்னம் புறூடியவர்கள் நிலைய மாதர் பிரிவினருக்கு 'மனையியல்' போதனை வகுப்புக்களை நடாத்தினார்கள். கட்டிட நிதிகருதி நிலைய காசிப்பிள்ளை அரங்கில் முற்றும் பெண்களே தோன்றி நடித்த 'கர்ணன்' என்ற வெற்றி நாடகத்தை மாதர்பகுதி அரங்கேற்றியது. இந்நாடகத்தை நிலையப் பொதுச்செயலாளர் 'நடிகப் பெருந்தகை' திரு. இ. க. குமரையா அவர்கள் நெறிப்படுத்தியமை குறிப்பிடற்குரியது. இதேமுறையில் யாழ். நகரில் நடைபெற்ற 'அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில்' நிலையம் மேடையேற்றிய 'பரதன்' என்ற நாடகத்திலும் நிலைய மாதர்கள் ஆர்வமுடன் பங்குகொண்டனர். வெள்ளிவிழாவை முன்னிட்டு நடைபெற்ற ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும் மாதர் பிரிவினர் ஒருங்கிணைந்து செயலாற்றி வருகின்றனர்.

இவ்வாண்டு பல பொதுத்தொண்டுகளையும் நிலையம் செய்துள்ளது. கமத்தொழில் முன்னேற்றம் கருதித் தக்காளி, கத்தரி, மிளகாய்க் கன்று, மரவள்ளித்தடி என்பவற்றை மிக மலிந்த விலைக்கு நிலையம் வழங்கியது. பாண் விநியோகத்தையும் சிலகாலம் நிலையம் பொறுப்பேற்று நடாத்தியது. தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, பானை - சட்டி வியாபாரமும் நிலையத்தில் நிகழ்ந்தன.

இவ்வாண்டு இரு இலவசப் படக்காட்சிகளும் நிலையத்தில் நிகழ்ந்தன.

இவ்வாண்டு எமது நிலையத்தின் உறுப்பினரும், பிரபல மரதன் ஓட்ட வீரருமான செல்வன் நடராசா கதிர்காமநாதன் அவர்கள் அகால மரணமடைந்ததை முன்னிட்டு நிலையம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அவரின் பெற்றோர்களுக்குப் 'பண முடிப்பு' வழங்கியமை குறிப்பிட வேண்டிய செய்தியாகும்.

நிலையத்தின் நெடுநாளைய கனவான 'வெள்ளிவிழா'வைப் பொதுமக்கள்......... உறுப்பினர்கள்...... வாலிபத் தொண்டர்களின் உதவிகளைக்கொண்டு மாபெரும் வெற்றிவிழாவாக நடத்தி முடித்தோம்.

'வெள்ளிவிழா'வை முன்னிட்டு நாம் அமைத்துள்ள பிரமாண்டமான கட்டிடங்களைக் காணும் ஒவ்வொருவரும் அவை உருவாக இரவும் பகலுமுழைத்த வாலிபர்களை-பொருளை வாரிக்கொடுத்த வள்ளல்களை... மற்றும் தேவைப்பட்ட அத்தியாவசியப் பொருள்களைத் தானமாகத் தந்துதவிய பொதுமக்களை .. சேவைநலன்மிக்க செம்மல்களை நெஞ்சார எண்ணி மனதார நன்றி பகரும்வண்ணம் வேண்டுகிறோம்.

குறிப்பாக 'அன்னலட்சுமி காசிப்பிள்ளை ஞாபகார்த்த வெள்ளிவிழா நினைவுமண்டப'மாக அமைந்திருக்கும் கட்டிடத்துக்கு திரு. கா. கணேசன் அவர்கள் ரூபா 5,000/-வும், 'மில்க் வைபிற்' ஸ்தாபன உரிமையாளர் திரு. க. கனகராசா அவர்கள் ரூபா 1,650/- பெறுமதிவாய்ந்த 2,100 கூரை ஓடுகளும், 'அரஸ்கோ' ஸ்தாபன உரிமையாளர் திரு. ஆர். அரசரெத்தினம் அவர்கள் ரூ. 750/-ம் நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

'அமரர் ந. குமாரகுலசிங்கம் ஞாபகார்த்தமாக நிறுவப்பட்டுள்ள மண்டபத்துக்கு திரு. கு. பிரேமசுந்தரம் ரூ. 2,000/- நிதியுதவி செய்துள்ளார். 'சிவசக்தி' வைத்திய நிலைய உரிமையாளர் திரு. சு. ஸ்ரீ விக்னேஸ்வரா அவர்கள் ரூபா 1,200/- பெறுமதியான 50 கதிரைகள் நிலையத்திற்கு நன்கொடையளித்துள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைய உபதலைவி திருமதி லலிதா இராசரெட்ணம் புறாடியவர்கள் ரூ. 400/- பெறுமதியான 'ரேபிள் ரெனிஸ்' மேசையும் அதற்குரிய உபகரணங்களும் வழங்கியுள்ளார்கள்.

வெள்ளிவிழாவுக்காகத் தொடர்ந்து மூன்றுமாதம் இரவுபகலாக அலங்காரவேலைகளில் ஈடுபட்டு தங்கள் முழுத்திறமையையும் துலங்கவைத்து விழாவைச் சிறப்புறச் செய்த அலங்காரக் குழுவினருக்கும்;

கலைக் கைப்பணி, விஞ்ஞானக் கைத்தொழில் பொருட்காட்சியில் கலந்து சிறப்பளித்த சகல அரசாங்கத் திணைக்களங்களுக்கும், தனிநபர்களுக்கும், காட்சியை அழகுற அமைத்த அமைப்பாளர் குழுவினருக்கும்;

வெள்ளி விழாவை முன்னிட்டு நடைபெற்ற சகல நடவடிக்கைகளுக்கும் — சகல நிகழ்ச்சிகளுக்கும் ஊக்கமுடன் உதவுதல் நல்கிய நிலைய மாதர்பகுதியினருக்கும்;

பொருள் உதவி - சரீர உதவி - மரங்கள் முதல் சகல அத்தியாவசிய தேவைகளையும் உதவிய பொதுமக்கள் - வாலிபர்கள் யாவருக்கும்;

பரிசில்கள் வழங்கிய தனிப்பட்ட நபர்களுக்கும், தாபனங்களுக்கும், போட்டிகளை நடாத்திய தனிப்பட்ட நபர்களுக்கும் - தாபனங்களுக்கும்; விளம்பரங்கள் தந்துதவிய வர்த்தகர்கள் அனைவருக்கும்; விழாவையொட்டி நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில் பங்குகொண்ட நாடக மன்றங்கள் - இசையாளர்கள், வாத்திய விற்பன்னர்கள் - நடிகர்கள் அனைவருக்கும்; நடைபெற்ற விளையாட்டுப்போட்டிகளில் பங்குகொண்ட கழகங்கள் - தனிப்பட்ட நபர்கள் அனைவருக்கும்; சகல நிகழ்ச்சிகளுக்கும் வருகைதந்து சிறப்பித்த விருந்தினர்கள் அனைவருக்கும்; மத்தியஸ்தம் வழங்கிய அனைவருக்கும்; மலருக்குச் செய்திகளும், ஆசிகளும் வழங்கிய அனைவருக்கும் சிறந்த முறையில் அச்சிட்டு அளித்த அச்சகத்தினருக்கும்;

இதில் குறிப்பிடப்படாது தவறவிடப்பட்ட சகல சேவையாளர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள்!

வணக்கம்!

நிர்வாகசபை
அ. ச. ச. நிலையம்



தாயெழில் தமிழை, — என்றன்
    தமிழரின் கவிதை தன்னை, —
ஆயிரம் மொழியிற் காண
    இப்புவி அவாவிற்று என்ற
தோயுறும் மதுவின் ஆறு
    தொடர்ந்தென்றன் செவியில் வந்து
பாயும்நாள் எந்த நாளோ? —
    ஆரிதைப் பகர்வார் இங்கே?

— பாரதிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாலை சனசமூக நிலைய
# இருபத்தைந்தாண்டு நிர்வாகசபையில்...

| ஆண்டு | தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
| --- | --- | --- | --- |
| 1949 — 1950<br>ஆனி — பங்குனி | Dr. க. கந்தையா | திரு. எஸ். நடராஜா | திரு. த, மயில்வாகனம் |
| 1950 — 1951<br>சித்திரை — பங்குனி | ,, | ,, | திரு.ச. பாலசிங்கம் |
| 1951 — 1952<br>சித்திரை — பங்குனி | ,, | ,, | திரு. த. மயில்வாகனம் |
| 1952 — 1953<br>சித்திரை — சித்திரை | திரு.<br>சு. செ. மகாதேவா | திரு.<br>எஸ். அருளம்பலம் | திரு. ச. பாலசிங்கம் |
| 1953 — 1954<br>வைகாசி — வைகாசி | ,, | திரு. த. சோமசேகரம் | ,, ப. தாமோதரம்பிள்ளை<br>திரு. த. மயில்வாகனம் |
| 1954 — 1954<br>ஆனி — மார்கழி | ,, | ,, | திரு. த. மயில்வாகனம் |
| 1955 — 1955<br>தை மார்கழி | ,, | திரு. த. சோமசேகரம்<br>,, வ. ஐயாத்துரை | திரு நா. அருளானந்தம் |
| 1956 — 1956<br>தை மார்கழி | ,, | திரு. வ. ஐயாத்துரை | திரு.<br>எஸ். சி. அம்பலவாணர் |
| 1957 — 1957<br>தை மார்கழி | ,, | ,, | திரு.<br>எஸ். சி அம்பலவாணர் |
| 1958 — 1958<br>தை மார்கழி | ,, | திரு. என். நடராஜா | திரு.<br>எஸ். சி. அம்பலவாணர் |
| 1959 — 1959<br>தை மார்கழி | ,, | ,, | திரு. வி. வேலுப்பிள்ளை |
| 1960 — 1960<br>தை மார்கழி | திரு.<br>சி. க. சுப்பிரமணியம் | திரு. இ. க. குமரையா | திரு. பொ. தியாகராஜா |
| 1961 — 1961<br>தை மார்கழி | திரு.<br>ஐ. எஸ். சண்முகநாதன் | ,, | திரு. சு. பாலசுந்தரம் |
| 1962 — 1962<br>தை மார்கழி | திரு.<br>இ. க. குமரையா | திரு.<br>க. சண்முகலிங்கம் | திரு. ம. நவரட்னம் |
| 1963 — 1963<br>தை மார்கழி | திரு. சு. தர்மலிங்கம் | திரு.<br>ந. கிருஷ்ணசிங்கம் | திரு. த. மயில்வாகனம் |
| 1964 — 964<br>தை மார்கழி | ,, | திரு.<br>க. சண்முகலிங்கம் | திரு.<br>நா. அருளானந்தம் |
| 1964 — 1965<br>புரட்டாதி ஆடி | ,, | திரு. இ. க. குமரையா | திரு. வே. சபாரட்னம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆண்டு | தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
| --- | --- | --- | --- |
| 1965 — 1966 ஆவணி ஐப்பசி | திரு. வே. க. மாசிலாமணி | ,, | திரு. த மயில்வாகனம் |
| 1966 — 1667 கார்த்திகை சித்திரை | ,, | ,, | திரு. த. குணரட்னம் ,, ச. தம்பித்துரை |
| 967 — 1967 வைகாசி ஆவணி | திரு. அ. விஸ்வநாதன் | திரு. த. துரைசிங்கம் | திரு. கா. கணேசன் |
| 1967 — 1968 புரட்டாதி ஆடி | ,, | திரு. பொ. சுந்தரலிங்கம் | திரு. த. துரைசிங்கம் |
| 1968 — 1969 ஆவணி ஆடி | ,, | ,, | திரு. சி. க. சுப்பிரமணியம் ,, பொ. குலசேகரம்பிள்ளை |
| 1969 — 1970 ஆவணி ஆடி | ,, | திரு. சு. தியாகராஜா | திரு. ம. மோகனதாஸ் ,, த. சுந்தரலிங்கம் |
| 1970 — 1971 ஆவணி ஆடி | திரு. சு. இராசதேவா | ,, | திரு. த. பரஞ்சோதி ,, ந. குமாரகுலசிங்கம் |
| 1971 — 1972 ஆவணி ஆடி | திரு. வி. ஆ சுன சிங்கம் | திரு. சி. சதாசிவம் | திரு. பொ. குலசேகரம்பிள்ளை |
| 1972 — 1973 ஆவணி ஆடி | திரு. க. மாசிலாமணி | திரு. இ. க. குமரையா | திரு. சி. சுந்தரலிங்கம் |
| 1973 ஆவணி | திரு. க. மாசிலாமணி ,, சு. பாலசுந்தரம் | ,, | திரு. ஆ. திரிலோக ஈஸ்வரா |


# டாக்டர் ஸ்ரீ விக்னேஸ்வரா

## சிவசக்தி வைத்திய நிலையம்

புங்கங்குளம் சந்தி

அவர்களினால் அரியாலை சனசமூக நிலையத்துக்கு

அன்பளிப்புச் செய்யப் பெற்ற

**50 கதிரைகள்**

மங்கள — அவமங்கள மற்றும் சகல வைபவங்களுக்கும்

சனசமூக நிலையத்தால்

**வாடகைக்கு விடப்படும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத்துறையில் தொடர்ந்து இருபத்தைந்து வருடங்கள்
நிலையத்திற் பணியாற்றி நிலையப் புகழ்வளர்த்த கலைஞர்கள் வரிசையில் ...



திரு. ச. பாலசிங்கம் (சங்கீத பூஷணம்)



விளையாட்டு வீரர்
திரு. டி. எஸ். குலநாதன்



கலைஞர்
திரு. இ. தனபாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி அன்னலட்சுமி காசிப்பிள்ளை நினைவு வெள்ளி விழா மண்டபம்



அமரர் ந. குமாரகுலசிங்கம் நினைவு மண்டபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாலை சனசமூக நிலைய
# அன்னலட்சுமி காசிப்பிள்ளை ஞாபகார்த்த
# வெள்ளி விழா நினைவு மண்டபம்

நிலைய வரலாற்றின் தொடர்பாக, ''அரியாலை சனசமூக நிலைய அன்னலட்சுமி காசிப்பிள்ளை ஞாபகார்த்த வெள்ளிவிழா நினைவு மண்டபம்'' பற்றிய விளக்கக் கட்டுரையை உங்கள்முன் சமர்ப்பிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

நெடுநாட்களாக எமது நிலையத்திற்கு ஓர் ''உள்ளக விளையாட்டு'' மண்டபம் இல்லாதிருக்கும் குறையை வெள்ளிவிழாவையொட்டி ஓர் நினைவுமண்டபம் கட்டுவதின் மூலம் நிவர்த்தி செய்யலாமென்று செயற்குழு கருதியது. இதற்கான நிதியுதவியை எம்மூர் வாசியான திரு. குணம் தம்பிப்பிள்ளை அவர்களிடமிருந்து பெறலாமென்ற யோசனையை நிலைய உபதலைவி திருமதி லலிதா இராசரெட்னம் புறூடி அவர்கள் தெரிவித்தார்கள். அவரின் யோசனைப்படி அன்னாரைச் சந்திக்கும்பொருட்டு தலைவர், உப–செயலாளர், பொருளாளர் மூவரும் சென்றார்கள், துர்அதிர்ஷ்டவசமாக அவரைச் சந்திக்க முடியாது தோல்வியுடன் திரும்பிய இவர்களுக்கு திரு. ச. சின்னையா அவர்களின் மூலம் புதிய ஆலோசனை யொன்று கிடைத்தது. இதன்படி இந்நிலையம் தொடங்கிய காலம் முதல் இன்றுவரை பல்வேறு நன்முயற்சிகளுக்கு மனங்கோணாது நிதியுதவி செய்த — செய்துவருகின்ற ''காசிப்பிள்ளை'' குடும்பத்தவரை இதற்குரிய நிதியுதவியையும் உதவும்படி கேட்பது என்ற முடிவுடன் திரு. காசிப்பிள்ளை கணேசன் அவர்களை அணுகி மேற்படி நிதியுதவி குறித்த யோசனையைத் தெரிவித்தார்கள். திரு. கணேசன் அவர்கள் இது குறித்துத் தனது சகோதரி ஒருவருடனும், குடும்ப வழக்கறிஞர் ஒருவருடனும் ஆலோசனை செய்து அவர்களின் முடிவிற்கிணங்க காலஞ்சென்ற தனது தாயாராகிய திருமதி அன்னலட்சுமி காசிப்பிள்ளை அவர்களின் பெயரால் புதிதாகஅமைக்கப்படும் வெள்ளிவிழா நினைவு மண்டபத்தில் ஒரு 'சிறுவர் பாடசாலை' நடத்துவதாக இருந்தால் ரூபா 5,000/- நிதியுதவி செய்வதாகக் கூறினர். அவரின் வேண்டுதலுக்கு நிர்வாகக்குழு சம்மதம் தெரிவித்ததையடுத்து அந்த நிதியுதவி கிடைக்கப்பெற்றது. இதேரீதியில் எமது வேண்டுதலுக்குச் செவிமடுத்த 'மில்க் வைவிற்' ஸ்தாபனத்தின் உரிமையாளர் திரு. க. கனகராசா அவர்கள் 2100 கூரை ஓடுகள் அன்பளிப்புச் செய்ய முன்வந்தார். 'அரஸ்கோ' ஸ்தாபன உரிமையாளர் திரு. ஆர். அரசரெத்தினம் ரூபா 750/- தந்துதவுவதாக வாக்களித்தார். வெள்ளிவிழா மண்டப வேலைகள் குறித்துச் சென்ற இடமெல்லாம் உற்சாகமான உதவிகளும் ..... வாலிபர்களின் சிரமதானப் பணியும் பெருமளவில் கிடைக்கப்பெற்றோம்.

27 — 3 — 74 புதன்கிழமை காலை 10 மணிக்கு நிலையப் போஷகர் திரு. சு. செ. மகாதேவா, எமது வட்டார மாநகரசபை உறுப்பினர் திரு. அ.விசுவநாதன், அரியாலை கிழக்கு மாநகரசபை உறுப்பினர் திரு. கா. ச. நடராசா, நிலைய முன்னைநாள் தலைவர் திரு. க. மாசிலாமணி, ஆர். அரசரெத்தினம் முதலிய பல பெரியோர்கள் முன்னிலையில் திரு. காசிப்பிள்ளை கணேசன் அவர்கள் 'வெள்ளிவிழா நினைவு மண்டபத்துக்கான' அத்திவாரத்தையிட்டார்.

எவரும் சிந்திக்கமுடியாத வேகத்தில் இக்கட்டிடமானது நாளும்பொழுதும் வளர்ந்து இரண்டுமாத இடைக்காலத்தில் பூரணத்துவம் பெற்றது. ஒரு பொது ஸ்தாபனம் இவ்வளவு வேகமாக, வறுமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்துவரும் இன்றையச் சமுதாயச் சூழ் நிலையில் ஒரு கட்டிடத்தைக் குறுகிய இடைக்காலத்தில் கட்டிமுடிப்ப தென்பது சாதாரண சாதனையன்று. இந்த மகத்தான சாதனையை நடைமுறையில் வெற்றிகாண வைத்த திரு. கா. கணேசன் அவர்களும், திரு. க. கனகராசா அவர்களும், திரு. ஆர். அரசரெத்தினம்அவர்களும், இரவும்பகலும் இந்தக்கட்டிடத்தை முடித்துவைக்க ஓயாது உழைத்த நிலைய வாலிபர்கள் ஒவ்வொரு வரும் நிலையத்தின் நன்றியறிதலுக்கும் — கௌரவத்திற்கும் உரிமையுடையவர்க ளாவர்.

வெள்ளிவிழா நினைவுமண்டபம் முற்றுப் பெற சுமார் ரூபா 18,000/- செலவாகும் என ஆரம்பத்தில் மதிப்பீடு செய்யப்பட் டது. ஆயின் மண்டபம் ரூபா 14,000/- செல வுடன் முற்றுவிக்கப்பெற்றது. நிலைய ஆதர வாளர்கள்... தீவிரமான வாலிபர்கள்; பொதுமக்கள் அத்தனைபேரின் சிரமதான நடவடிக்கையே ரூபா 4,000/-ஐ நிலையத் துக்கு மீதப்படுத்திக் கொடுத்தது என்று கூறின் அது மிகையன்று.

திரு. காசிப்பிள்ளை கணேசன் அவர்க ளுடன் செய்துகொண்ட உடன்பாட்டுக் கமைய இந்த மண்டபத்திற்கு "அன்னலட் சுமி காசிப்பிள்ளை ஞாபகார்த்த வெள்ளி விழா நினைவு மண்டபம்" எனப் பெயர் சூட்டியுள்ளோம். இம்மண்டபம் 1—6—74 சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் திரு. கா. கணேசன் அவர்களின் விருப்பத்திற் கிணங்க அவர்களுடைய குடும்ப வழக்கறிஞ ரான திரு. எம். கே. சுப்பிரமணியம் அவர் களினால், மங்கள வாத்தியம் இசைக்க — மக் கள் கரகோஷம் செய்ய; பால்காச்சி பொங் கல் பொங்கிக் கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டதுடன் அமரத்துவமடைந்த திருமதி அன்னலட்சுமி காசிப்பிள்ளை அவர் களின் திருவுருவப் படமும் மண்டபத்தில் திரைநீக்கம் செய்துவைக்கப்பெற்றது. அன் னாரின் பெயரால் விரைவில் ஒரு சிறுவர் பாடசாலை மண்டபத்தில் நிறுவப்படும்.

வணக்கம்.

— நிர்வாகசபை

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து"

---

வீடு, நிலம், பட்டம், பதவி, படிப்பு, பொன், பொருள், ஆடை, அணி முதலிய எதுவும் ஒருவனுடைய உண்மையான தோற்றத்தைக் காட்டுவதில்லை அவையனைத்தும் போலித் தோற் றங்கள். அவனுடைய உண்மையான தோற்றத்தைக் காட்டுவன அவன் வாய்ச் சொற்களே!

— அறிஞர் இ. ஆ. பெ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாலை சனசமூக நிலைய,

# அமரர் நவரத்தினம் குமாரகுலசிங்கம்

# நினைவு மண்டபம்

பலவருடங்களாய் எமது நிலையத்தின் உறுப்பினராக இருந்து நிலைய ஈடேற்றத்துக்கு நற்சேவையாற்றியவரும்; நிலைய முன்னாள் பொருளாளருமான அமரர் ந. குமாரகுலசிங்கம் அவர்களின் ஞாபகமாக எமது நிலைய நிர்வாகத்தின் கீழ் ஒரு நினைவு மண்டபம் அமைக்கப்பெற்றுள்ளது மிகப் பொருத்தமான செயலும் அமரத்துவமடைந்த அன்னாருக்குப் பிரியமான சம்பவமுமாகும்.

யாழ்மாநகரசபை ''பழைய சந்தை மண்டபத்தை' நிலையத்தின் வேண்டுதலுக்கு இணங்கி தாங்களே செலவுசெய்து சுற்றிவரச் சுவர்கள் அமைத்து அன்பளிப்புச் செய்தது; இம்மண்டபத்தைத் தொடர்ந்து கட்டிமுடித்தே அமரர் ந. குமாரகுலசிங்கம் அவர்களின் நாமத்தால் அவரின் ஞாபகார்த்த மண்டபமாகத் திறந்துள்ளோம். இம்மண்டப நிர்மாணத்துக்கும், இதில் இயங்கவிருக்கும் 'உடன் உதவும் நூல்நிலையத்திற்'காகவும், அமரர் குமாரகுலசிங்கத்தின் ஒன்றுவிட்ட சகோதரரான திரு. குருசாமி பிரேமசுந்தரம் அவர்கள் ரூபா 5,000/- நன்கொடை தருவதாக முன்வந்துள்ளார். இதில் ரூபா 2,000/- இவ்வருடமும்: ரூபா 3,000/- அடுத்த வருடமும் எமக்குக் கிடைக்கும். இந்த நிதியுதவியைச் செய்ய முன்வந்துள்ள திரு. கு. பிரேமசுந்தரம் அவர்களுக்கு நிலையத்தின் சார்பில் நன்றியறிதல்களைக் கூறிக்கொள்கிறோம்.

இம்மண்டபம் இவ்வளவு விரைவாகப் பூரணத்துவம்பெற எமது வாலிபரின் ஒத்துழைப்பும்; அவர்கள் உதவிய சிரமதான சேவையும்தான் முழுமுதற் காரணமெனில் அது மிகையன்று. இவர்களுக்கும் எமது நன்றியறிதலைக் கூறிக்கொள்கிறோம்.

1—6—74 சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு அமரர் ந. குமாரகுலசிங்கத்தின் குடும்பத்தினரின் ஆலோசனைக்கிணங்க யாழ். பரியோவான் கல்லூரி உதவி அதிபரான திரு ஜே.ரி. செல்லையா அவர்களினால் திறந்துவைக்கப்பட்டது. அன்னாரின் பாரியார் திருமதி செல்லையா அவர்கள் அமரர் ந. குமாரகுலசிங்கத்தின் திருவுருவப்படத்தை மண்டபத்தில் திரைநீக்கம் செய்துவைத்தார். அமரத்துவம் அடைந்த 'அமரரின்' ஆத்மா சாந்தியடைதற்பொருட்டு அன்னாரது குடும்பத்தினரால் மண்டபத்தில் அன்னதானமும் வழங்கப்பெற்றது.

நிர்வாக சபை

---

**மனித சக்தி**

சந்திரனைத் தொட்டதின்று மனித சக்தி
சரித்திரத்தை மீறியது மனித சக்தி;
இந்திரன்தான் விண்ணுட்டின் அரசனென்ற
இலக்கணத்தைத் திருத்தியது மனித சக்தி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Donated by:- ...LARATNAM

வெள்ளி விழாவை முன்னிட்டு நடைபெற்ற
விளையாட்டுச் சுற்றுப் போட்டிகளுக்கான

# பரிசளிப்பு விழா

இடம்: காசிப்பிள்ளை அரங்கம்
காலம்: 9—6—74 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: இரவு 7-00 மணி

நிலையத் தலைவர் திரு. சு. பாலசுந்தரம்
அவர்கள் தலைமையில்

பரிசளிப்பு விழா ஆரம்பமாகும்.

பரிசில் வழங்குவோர்:

| | | |
|---|---|---|
| எறிபந்தாட்டம் | — | டாக்டர் செல்வி நிமலாவதி சுப்பிரமணியம் |
| உதைபந்தாட்டம் (B பிரிவு) | | ஜத்துறாஸ் சாதல் ஹமீட் |
| உதைபந்தாட்டம் (A பிரிவு) | — | திருமதி கமலாதேவி தியாகராசா |
| கரபந்தாட்டம் (ஓவர்) | — | செல்வி புனிதமணி பொன்னையா |
| வலைப்பந்தாட்டம் | — | திருமதி தனபாலரட்ணம் |
| தாச்சி | — | திருமதி கோ. பாலசுந்தரம் |
| கரபந்தாட்டம் (செற்றப்) | — | திருமதி கோ. சிவசுந்தரம் |

இரவு 8-00 மணிக்கு

அரியாலை திடீர் நாடக மன்றம் அளிக்கும்

## " சோக்கல்லோ சோமண்ணே "

(முழுநீள நகைச்சுவை நாடகம்)

---

அரியாலை சனசமூக நிலைய வெள்ளி விழாவில்
13—6—74 வியாழக்கிழமை
விசேட நிகழ்ச்சியாக

அரியாலை சனசமூக நிலையம் அளிக்கும்

## " சேயும் சேலையும் "

என்னும் "காவிய" நாடகம் இடம்பெறும்

நடிகர்கள்: திரு. பொ. விஜயரட்ணம், திரு. ம. நவரட்ணம், திரு. க. சோமசேகரம்
திரு. எஸ். செல்வராசா, திரு. சி. சதாசிவம், திரு. என். யோகநாதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாலை சனசமூக நிலைய
ஆரம்ப காலம் முதல்
அதன் வளர்ச்சியில் அக்கறை
செலுத்தியோர் வரிசையில் . ...



காலம்சென்ற வழக்கறிஞர்
திரு. க. பொன்னம்பலம்

அரியாலை சனசமூக நிலைய
நாடகத் துறைக்கு அண்ணாவி மரபு
முறையை அறியத்தந்த



காலம்சென்ற அண்ணாவியார்
திரு. பெ. சபாபதிப்பிள்ளை



யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற
அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில்
நிலையம் அரங்கேற்றிய
"பரதன்" நாடகத்தில் ஒரு காட்சி



நிலையத்தின் இருபத்தி நான்காவது
ஆண்டு நிறைவின்போது வருகைதந்து
விளையாட்டுப் போட்டிகளைச் சிறப்பித்த
யாழ். பொலிஸ் அதிபர்
திரு. J. D. M. ஆரியசிங்கா
உரையாற்றுகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாலை சனசமூக நிலைய
மாதர் பகுதிச் செயற்குழுவினர்



நிற்பவர்கள்;
செல்வி. சுரேந்தினி சபாரத்தினம், செல்வி. சிதானந்தி யோகராசா, செல்வி. தேவகி சுப்பிரமணியம், செல்வி. ரூபகுமாரி கைலாச பிள்ளை,

அமர்ந்திருப்பவர்கள்:
செல்வி. கிரிஜா இராசையா, திருமதி லலிதா இராஜரெட்ணம் புறாடி. திருமதி மனோரதி உருத்திரசிங்கம்.



அரியாலை சனசமூக நிலைய
மாதர் பகுதியினர் நடாத்தும்
தையல் - மனையியல் வகுப்புகள்
நடைபெறும் காட்சி.



அரியாலை சனசமூக நிலையம் அமைத்து
அரசாங்கத்துக்கு வழங்கிய
நெசவு நிலையத்தின் கட்டிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதர் பகுதி

**திருமதி லலிதா இராசரெட்ணம் புறாடி**

*( நிலைய மாதரணித் தலைவி )*

UNIVERSITY OF JAFFNA LIBRARY

சமுதாயத்தில் சரிபாதி நிலையில் இயங்கிவரும் பெண்கள் சமூகத்தை சமூக சேவையில் ஈடுபடுத்தி, சனசமூக சேவையில் பூரணத்துவமான உருவத்தைப்பெறும் பொருட்டு, 1960-ம் வருடம் பங்குனித் திங்கள் 24-ம் நாள் யாழ் காரியாதிகாரியாகக் கடமையாற்றிய திரு. எஸ். பாலச்சந்திரன் அவர்களினுல் நிலையத்தில் ஒரு "மாதர் பகுதி" அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

நிலையத்தின் மாதரணி மாண்புபெற ஆரம்பகாலத்தில் ஊக்கமுடன் உழைத்த திருமதி மா. பத்மலோசனி அவர்கள் மாதரணியின் முதற் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தொடக்க நாளில் செல்வி ச. ராதாதேவி அவர்களினுல் சங்கீத வகுப்பொன்று ஆரம்பிக்கப்பட்டுச் சிறந்த முறையில் இயங்கிவந்தது. இதே போன்று அரசாங்கக் குடிசைக் கைத்தொழில் இலாக்காவினுல் நடாத்தப்பெற்ற பொம்மை செய்யும் கைப்பணியிலும் மாதர் பகுதி ஆர்வமுடன் பங்குகொண்டு பயிற்சி பெற்றனர். நிலையம் நடாத்திய பிரம்புக் கைப்பணிப் பயிற்சியிலும் மாதர்கள் ஊக்கமுடன் பங்குகொண்டனர். வெங்காயக் கூடைகள் தயாரிக்கும் கைப்பணியில் பெண்கள் உற்சாகமுடன் ஈடுபட்டுப் பொருளீட்டினர்.

1960-ம் வருடம் யாழ். சனசமூக நிலைய சமாசம் யாழ். சனசமூக நிலையங்களுக்கு மத்தியில் நடாத்திய கலை; விளையாட்டுப் போட்டியில் முதலிடத்தை எமது சனசமூக நிலையம் பெறுவதற்கு முழு முதற்காரணமாக நிலைய மாதரணி திகழ்ந்தது.

1961-ம் வருடம் யாழ். சனசமூக நிலைய சமாசத்தின் "இசைப்பிரிவு வெற்றி விருதை" நிலைய மாதரணி சுவீகரித்துக் கொண்டது. இதே வருடம் நிலைய மாதர்களைச் சேர்ந்த "முதற்தர இசையாளர்" கோஷ்டியொன்று கொழும்பு மாநகரம் சென்று இலங்கை வானெலியில் "நாட்டுப் பாடல் நிகழ்ச்சி" யொன்றை நடாத்திப் பெரும் புகழையும் பாராட்டையும் பெற்றது.

இயல்—இசை—நாடகம்; விளையாட்டு-சமூகத்தொண்டு இவற்றில் வீறு பெற்ற வளர்ச்சியைப் பெற்றுவரும் எமது நிலைய மாதர் பகுதி அண்மைக் காலத்தில் நாடகத் துறையில் நாட்டிவரும் வெற்றியைப் பாராட்டாமல் இருக்க முடியாது. முற்றும் பெண்களே தோன்றி நடித்துப் புகழ்மேல் புகழ்பெற்ற "காவிய நாடகமான "கற்புக் கனல்" நிலைய அரங்கிலும்-யாழ். திறந்த வெளியரங்கிலும் அரங்கேறியதுடன் இலங்கை வானெலியிலும் ஒலிபரப்பாகிப் பலரின் பாராட்டுதல்களைப் பெற்றமை குறிப்பிடத் தக்கது.

நிலையம் ஆண்டுதோறும் கொண்டாடி வரும் நிலைய ஆண்டு நிறைவு விழாக்களில் கலை, விளையாட்டுப் போட்டிகளில் ஆர்வமுடன் பங்குகொண்டு இல்லங்களின் வெற்றிக்கு முக்கிய பணியாற்றிடும் மாதர் பகுதியின் திறமைகள் போற்றுதற்குரியவை.

இன்று எம் சமுதாயத்தில் தலைவிரித்தாடும் கொடிய வறுமையை முன்னிட்டு நிலைய மாதர் கைப்பணித்துறையில் பொருளீட்டும் பொருட்டு அரசாங்கத்தினுல் ஆரம்பிக்கப்பெற்ற "நெசவு நிலையத்துக்கு" நிலையத்தின் சார்பில் ஒரு நிரந்தரக் கட்டடம் அமைத்து உதவப்பட்டுள்ளது. மேற்படி திருப்பணிக்குப் பொருளும்-உற்சாகமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்கமும் அளித்த முன்னைநாள் நிலையத் தலைவர்களில் ஒருவரான திரு. க. மாசிலாமணி அவர்களுக்கு நிலைய மாதர் பகுதி நன்றியுடன் கூடிய பாராட்டைத் தெரிவிக்கின்றது.

அண்மைக் காலத்தில் நிலைய மாதர் பகுதியின் சார்பில் ஒரு "தையல் வகுப்பு" ஆரம்பிக்கப்பெற்று வெற்றியுடன் முன்னேறிவருகின்றது. இந்த நிலையத்தில் "மனையியல்" போதனை வகுப்பும்" நடைபெறுகின்றது.

கலைப்போட்டிகளில் நிலையான-நிரந்தரமான வெற்றிவாகை சூடிவரும் நிலைய மாதர்பகுதி விளையாட்டுத்துறையிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. திறமையான "கூடைப் பந்தாட்டக்" கோஷ்டியொன்றும் எமது மாதர் பகுதியில் அங்கம் வகிக்கின்றது.

முற்றும் பெண்களே தோன்றி நடிக்கும் "கர்ணன்" நாடகம் அண்மைக் காலத்தில் கலைத்துறையில் பெண்ணினத்தின் வெற்றிக் காவியமாகும்.

அரசியல்-சமுதாயம்-பொருளாதாரம் இவற்றில் ஒரு வீறுபெற்ற உணர்வுடன் முன்னேறிவரும் உலகப் பெண்ணினத்தை நினைவில் நிறுத்தி நவயுகத்தின் பெண்பிரதிநிதிகளான நாம் சனசமூக நிலையம் மூலம் பல்கிப் பெருகும் சமுதாயச் சீர்கேடுகளைக் களைந்தெறிய ஆண்களுடன் சமுதாய சேவையில் சேர்ந்து பணியாற்ற மென்மேலும் முன்வர வேண்டும். ஊக்கமுடன் ஆக்கவழிகளை அமைத்து எத்துறையிலும் வித்தகராய் நிலைய மாதரணி சிறந்து விளங்கிடப் பணியாற்றும் சேவை நலன்மிக்க நிலைய ஆண் நிர்வாகிகள் அத்தனை பேருக்கும் நிலைய மாதர்பகுதி நன்றியறிதலைக் கூறுகின்றது.

## பண்பாட்டின் பரப்பு

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே; வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன் றும் இலமே; முனிவின்
இன்னா தென்றலும் இலமே...
பெரியோரை வியத்தலும் இலமே —
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.

— புறநானூறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாயத்தில் பெண்கள்

செல்வி கிரிஜா இராசையா

( நிலைய மாதரணிச் செயலாளர் )

பல்வேறு பழக்கவழக்கங்கள், பல்வேறு மதக் கோட்பாடுகள், பல்வேறு நாகரிக நிலைகள் இவற்றால் வேறுபட்டு விளங்கும் மக்கள் அன்பால் ஒன்றுபட்டு ஒரு தொகுதியாக — ஒரு குழுவாக வாழும் வாழ்க்கை சமுதாயம் எனப்படும்.

''சமுதாயம்'' எனக் குறிப்பிடும் போது அதன் தோற்றத்திற்கும் - பெருக்கத்திற்கும் காரணமான பெண்களின் பங்கு முன்னணியிற் திகழ்கின்றது. ஒரு சமுதாயம் ஆவதும் பெண்ணால். அதுபோல் அது அழிவதும் அவளால். பெண்ணினம் தன்னலம் நோக்காத சமுதாயச் சிற்பிகளாக விளங்கவேண்டும். எமது பண்டைத் தமிழகத்தின் பண்புடைய பெண்களால் நாட்டில் நல்லறனும் — வீட்டில் ஒழுக்கமான குடும்பவாழ்வும் ஓங்கி வளர்ந்த செய்தியை இன்பத்தமிழ் இலக்கியங்கள் இயம்புகின்றன.

''தமக்கென முயலா நோன்முட்
பிறர்க்கென முயலுநர்...''

எனப் புறநானூறு பெண்களின் பொதுநலப் பண்பைப் புகழ்கின்றது.

தாய் தந்தையற்கும், தன்னை மணந்த மணவாளனுக்கும், தான் ஈன்றெடுத்த பிள்ளைகளுக்கும், தன்னைத் தழுவி வாழும் சமுதாயத்துக்கும் உழைத்து உருகும் பெண்ணின் தியாக வாழ்வு பாராட்டுக்குரியது. ''தன்னை அழித்து ஒளியை— ஒய்யாரத்தை உதவும் மெழுகுதிரிபோன்றதுதான் பெண்ணின் வாழ்வு'' என்று ஓர் அறிஞர் குறிப்பிட்டுள்ளார். ''பெண்ணின் வாழ்க்கை ஆணின் கணநேர இன்பத்துக்காக மட்டுமல்ல, அது சமூகசேவை என்ற குறிக்கோளுக்காகவே'' என்று 'கவிமணி' யாரும் தன் பாடலில் விளக்குகிறார்.

அறியாமையும், அடிமையுணர்வும், பசிக் கொடுமையும், போராட்டங்களும் பல்கிக் கிடக்கும் சமுதாயத்தின் சீர்கெட்ட நிலையை மாற்றியமைக்க எல்லாத் துறைகளிலும் பெண்களும் — ஆண்களுடன் சரிநிகர் சமானமாகப் பணியாற்றிட முன்வர வேண்டும், பொதுநலப்பணி பெண்ணினத்துக்குப் புதியதல்ல, வரலாறுகளையும் — இலக்கியங்களையும் அணுகி ஆராய்ந்தால் சமுதாய வளர்ச்சியில் பெண்களின் பங்கு புலனாகும்.

''ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே'' என மகனுக்கு வீர உணர்வு ஊட்டி போர்க்களம் அனுப்பி அவன் புறமுதுகிடாது மார்புகாட்டி மடிந்தான் எனக் கேட்டு ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் வீரத்தாயைப் புறநானூற்றிலே சந்திக்கின்றோம். அன்பும் — அறனும் அமைந்த இல்வாழ்வில் கணவனைக் கண்கண்ட தெய்வமாக மதித்து வாழ்ந்த கண்ணகியின் கற்பு வாழ்வும்—தனிவாழ்க்கை வாழத் துணிந்து மக்கள் நலன் பேணித் தொண்டாற்றி அமுதசுரபி ஏந்தி பசிப்பிணியகற்றி சிறைக் கோட்டத்தை அறக்கோட்டமாக்கிய மணிமேகலையின் அறவாழ்வும், தொண்டமானுக்கும் அதிகமானுக்கும் இடையில் தூது நடந்து போர் நிகழாவண்ணம் தடுத்தாட்கொண்ட ஔவையின் அரசியல் அறிவும் இன்றைய மாதருக்கு இலக்கியம் காட்டும் இலட்சிய வாழ்க்கை முறையாகும்.

உலக அரங்கில் இன்று பெண்ணினம் மேன்மையான பதவிகளை வகிக்கின்றது; பெண்கள் நாட்டை வழிநடத்தும் பிரதமர்களாகவும் — மாபெரும் அரசியல் தந்திரிகளாகவும் இன்று விளங்குகிறார்கள். கலை — விளையாட்டு, பொதுப்பணி, விஞ்ஞானம் — மருத்துவம் முதலான எத்துறைகளிலும் பெண்கள் வித்தகராக — பாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் கண்ட புதுமைப் பெண்களாக—பாரதி தாசன் கண்ட புரட்சிப் பெண்களாகப் பெண் சமுதாயம் நாளும் பொழுதும் வீறு நடைபோட்டு முன்னேறுகின்றது.

இந்த முன்னேற்றப் பாதையில் பெண்கள் கண்மூடித்தனமான நவநாகரீகத்தை ஏற்று — அதற்கு அடிமையாகி நம் கலாச்சாரத்தை உயிருடன் புதைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள நிலை வருந்துதற்குரியது. ஒழுக்கம் வழுவிய முன்னேற்றம் எத்தகைய பயனையும் எமக்குத்தராது.

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

என்ற வள்ளுவனாரின் பொய்யாமொழி ஒழுக்கத்தின் சிறப்பை உயிருக்கும் மேலாகக் காட்டுகிறது.

இயற்கை அன்னைக்கு இசைந்து பண்பாட்டைப்பேணிப் பயபக்தியுடன் வாழ்ந்து வந்த நம் பெண்ணினம் இன்று எம்சமுதாய அமைப்புக்குப் பொருத்தமற்ற போலி நாகரிகத்தில் தன்னை வழிநடத்துவது வருந்தற்குரியது. இன்று பெண்கள் விரக்தி மனப்போக்குக்கு உட்பட்டு அலங்கோல வாழ்வில் முற்பட்டு, ஆத்மீகத் துறைகளைக் கைநழுவவிட்டுப் பேய் பிசாசுகள் போன்ற தோற்றத்தில் தம் நடையுடைபாவனைகளை மாற்றிச் சமுதாய அமைப்பிற்கு மாறுபட்டு வாழ்க்கை வாழ்வதை நாம் கண்ணுரக் காண்கின்றோம்.

எனவே, பெண்ணினம் சமுதாயத்தில் தாங்கள் வகிக்கும் புனிதமான பங்கைப் பொறுப்புடன் உணர்ந்து தமுதாய சேவையில் தூய்மையுடன் முற்படவேண்டியது இன்றியமையாதது. அரியாலை சனசமூக நிலையம் பெண்ணினத்தின் ஈடேற்றத்துக்கென "மகளிர் பகுதி" யை அமைத்துச் சேவையாற்றி வருகின்றது. பெண்கள் கலை, விளையாட்டு — பொதுப்பணி — சுகாதாரம் — சமயம் இதுபோன்ற துறைகளில் சனசமூக நிலையம்மூலம் தொண்டு புரியலாம். சங்கீதம்—நடனம், நாடகம் ஆகிய தெய்வீகக் கலைகளில் ஈடுபட்டுத் தங்கள் திறமைகளை நிலையத்தின்மூலம் வெளியிடப் பெண்கள் தயக்கமின்றி முன்வரவேண்டும்.

இன்று எமது சமுதாயத்தில் வீட்டுக்கு வீடு தாண்டவமாடும் கொடிய வறுமையை மனதில் வைத்துப் படித்த பெண்கள் உத்தியோகத்தில் நாட்டங்கொண்டு வீட்டில் சோம்பிக்கிடவாது, தையல்வேலை, நெசவு வேலை போன்ற கைத்தொழிலாக்கங்களில் கருத்தைச் செலுத்துதல் சாலச்சிறந்தது. அரியாலை சனசமூகநிலையம் மாபெரும் பொருட் செலவில் ஒரு கட்டிடத்தை அமைத்து நெசவு நிலையத்துக்காக அரசாங்கத்துக்கு அளித்துள்ளது. இந்த நிலையத்தில் பெண்கள் மேலும் மேலும் சேர்ந்து பணியாற்ற முன்வரவேண்டும். நிலையம் ஒரு தையல் நிலையத்தையும்-மனையியல் போதனை நிலையத்தையும் நடாத்திவருகிறது. இதிலும் பெண்கள் நீக்கமற நிறைந்து தொண்டாற்ற முன்வரவேண்டும்.

பெண்களின் முன்மாதிரியான செயல்களிலும், அவர்களின் விடாமுயற்சியிலுந்தான் ஒரு வீட்டின் — ஒருநாட்டின் — ஒரு சமுதாயத்தின் முன்னேற்றம் தங்கியிருக்கிறது. சமுதாயத்தில் பெண்கள் தாங்கள் வகிக்கும் புனிதமான பங்கை நினைவிற்கொண்டு ஒவ்வொரு துறைகளிலும் சிந்தனைத் தெளிவுடன் நடந்தார்களானல் சமுதாயம் அவர்களை நிந்தனை செய்யாது வந்தனை செய்யும்.

*மங்கையராகப் பிறப்பதற்கே — நல்ல*
*மாதவஞ் செய்திட வேண்டுமம்மா;*
*பங்கயக் கைநலம் பார்த்தலவோ — இந்தப்*
*பாரில் அறங்கள் வளருமம்மா!*

— கவிமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டுத் துறையில் நிலையத்தின்சேவை

திரு. த. மயில்வாகனம்
(நிலைய விளையாட்டுத்துறைத் தலைவர்)

வெளியூர்களில் அரியாலையின் புகழ் மங்காத ஒளியுடன் பிரகாசிக்கக் காலத்துக்குக்காலம் எமது நிலைய வாலிபர்கள் விளையாட்டுத்துறையில் ஈட்டிவந்த மாபெரும் வெற்றிகள் காரணமாக அமைந்தன எனக் கூறின் மிகையன்று.

விளையாட்டுத்துறை விருத்தியடைய— விளையாட்டுத்துறை வளர்ச்சியடைய முழுமுதல் இயற்கைக் காரணமாக நிலைய மைதானம் அமைந்துள்ளது எனக் கூறின் பெரும் பொருத்தமுடையதாகும். யாழ். குடாநாட்டில் மற்றைய எந்த நிலையங்களுக்கும் அமைந்திராத இத்தகைய விரிந்த பரந்த மைதானத்தை எமக்களித்த யாழ். மாநகரசபையினருக்கு நிலைய விளையாட்டுத் துறையின் சார்பில் முதற்கண் நன்றியறிதலைக் கூறிக்கொள்கின்றோம்.

காலத்துக்குக் காலம் நிலைய மைதானத்தைத் திருத்தியமைத்து மெருகூட்டி அழகுபடுத்திவந்த நமது வட்டார மாநகர சபை உறுப்பினர் அத்தனைபேருக்கும் நிலைய விளையாட்டுப்பகுதி தனது நன்றியறிதலைக் கூறிக்கொள்வதில் பெருமையடைகின்றது. ஆரம்பகாலத்தில் இந்த மைதானத்தைச் சட்ட நிருபணசபை உறுப்பினராக இருந்த திரு. கனகரத்தினம் அவர்கள் சந்தையாக உருவாக்கும் நோக்குடன் மத்தியில் இரு சந்தைக் கட்டிடங்களையும், கிணறு ஒன்றையும் அமைத்திருந்தார். காலப்போக்கிலே சந்தை மறைய, விளையாட்டுத்துறையில் விந்தைகள்புரியும் திடலாக இது மாறியது. திடலின் மத்தியிலிருந்த கட்டிடங்களையும்: நின்ற புளி, வேம்பு, மா. பனை போன்ற மரங்களையும், தென்மேற்கு மூலையிலேயிருந்த மலசல கூடங்களையும், அகற்றி, மைதானத்தின் வடக்கேயிருந்த கிணற்றையும் மூடி, மண் பரப்பி-அழகு பரப்பி அளித்தது மாநகரசபை.

இத்தகைய இயற்கைவளம் மிளிரும் விளையாட்டுத் திடலில் நிலைய விளையாட்டுப் பகுதியின் பொன்றுப் புகழ்பூத்த வரலாற்றுப் பொன்னேடு புரண்டுவரலாகியது...!

நிலையம் தனது வீரர்களை — வீராங்கனைகளைக் காலத்துக்குக்காலம் எறிபந்தாட்டம், உதைபந்தாட்டம், கரபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், மெய்வல்லுனற் போட்டிகள் முதலானவற்றில் ஈடுபடுத்தி வெற்றிப் பாதையில் வீறுநடைபோட்டு வருகின்றது. 1960-ம் வருடம் தொடக்கம் இன்று ஈழுக மாவட்ட சனசமூக நிலையங்களுக்கு மத்தியில் நடைபெற்றுவரும் மெய்வல்லுனற் போட்டிகளில் தொடர்ந்து எமது நிலையமே அமோகமான புள்ளிகளைப் பெற்று முதலிடத்தை வகித்து வருகின்றது. எமது நிலைய உறுப்பினர் சிலர் அகில இலங்கை ரீதியாக நடைபெறும் மெய்வல்லுனற் போட்டிகளிலும் பங்குபற்றி வெற்றிவிருது பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

இதேரீதியில் உதைபந்தாட்டத்திலும் எமது நிலைய வீரர்கள் திறமையை நிலைநாட்டியுள்ளனர். கடந்த காலங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நிலைய உறுப்பினர் சிலர் யாழ் மாவட்ட உதைபந்தாட்டக் கோஷ்டிகளின் தலைவர்களாகவும், பிரபல கல்லூரிகளின் உதைபந்தாட்டக் கோஷ்டியின் தலைவர்களாகவும்விளங்கித் திறமையுடன் விளையாடியுள்ளனர்.

எறிபந்தாட்டத்திலும் எமது நிலைய உறுப்பினர் பலர் கல்லூரிகளின் கோஷ்டிகளில் முன்னணி வீரர்களாகத் திகழ்ந்துள்ளனர். இதுபோன்று கரபந்தாட்டத்திலும் எமது வீரர்களின் சிறப்பிற்குப் பல உதாரணங்கள் உள்ளன.

மெய்வல்லுனற் போட்டிகளில் நிலையத்தின் புகழ் வளர்த்த வீரர்கள் வரிசையில் திரு. பொ. பஞ்சலிங்கம், திரு. எஸ். கே. மகாலிங்கம், திரு. எஸ். கே. பரமலிங்கம், திரு. மு. தெய்வேந்திரா, திரு. மு. சுபேந்திரா, திரு. ந. வாமசிவன், திரு. எஸ். டி. குலநாதன் முதலிய வீரர்களும்; செல்வி சரோஜினி நடராசா, செல்வி கிருஷ்ணவேணி துரைசாமி போன்ற வீராங்கனைகளும் குறிப்பிடத்தக்கவர்கள்,

யாழ் மாவட்டத்தில் பரந்த அளவில் நடைபெறும் யாழ் அமெச்சூர் மெய்வல்லுனர் சங்கத்தின் மெய்வல்லுனர் போட்டிகளில் எமது நிலைய வீரர்கள் ''அரியாலை ஐக்கிய கழக''த்துடன் இணைந்து போட்டியிட்டு வருகின்றனர்கள். மேற்படி கழகத்தின் முன்னணி வீரர்களாகவும் — சாதனைகளை நிலைநாட்டிய வீரர்களாகவும் எமது நிலைய உறுப்பினர் இயங்கிவருவது இங்கு குறிப்பிடப்படக்கூடிய செய்தியாகும்.

எமது நிலைய விளையாட்டுப்பகுதி நிலையத்தின் ஆண்டுநிறைவுவிழாக்களையொட்டி நடைபெறும் மெய்வல்லுனர் இல்லப் போட்டிகளைச் சிறந்த முறையில் நடாத்தி இரசிகர்களை மெய்மறக்கச்செய்து வருகின்றது.

நிலைய வெள்ளிவிழாவை முன்னிட்டு உதைபந்தாட்டம், கரபந்தாட்டம், எறிபந்தாட்டம், தாச்சி, வலைப்பந்தாட்டம், மரதன் ஓட்டம். விநோத உடைப்போட்டி முதலியவற்றை நிலைய விளையாட்டுப்பகுதி யாழ் மாவட்டத்தில் விரிந்த அளவில் மற்றைய நிலையங்களுக்கு மத்தியில் நிகழ்த்தியது இங்கு குறிப்பிடத்தக்கவை.

நிலைய உறுப்பினர் மத்தியில் விளையாட்டின் மூலம் சகோதரத்துவத்தையும், உடல் உறுதியையும் — மாபெரும் புகழையும் வளர்த்துவரும் அரியாலை சனசமூக நிலைய விளையாட்டுப்பகுதியினரின் சேவை மென்மேலும் விருத்தியுற யாவரின் ஒத்துழைப்பையும்—உற்சாகத்தையும் நிலையம் எதிர்பார்க்கிறது.


---

நாட்டை, மொழியை, மக்களை, சமூகத்தைச் சீர்திருத்த எண்ணுகிற ஒவ்வொருவனும் முதலில் தன்னைச் சீர்திருத்திக் கொள்ள வேண்டும். காவியுடை உடுத்தியும் நெறிதவறி நடப்பவன் "பக்தி நெறி"பற்றிப் பேசினால்; புலால் உண்பவன் "குறள்நெறி" பற்றிப் பேசினால்; கோழிக்குஞ்சு சூப் குடிப்பவன் ''வள்ளலார் அருள்நெறி'' பற்றிப் பேசினால் எவ்வாறிருக்கும்?

— அறிஞர் கி. ஆ. பெ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுத் துறையில் வெற்றி விருதுகள் பெற்று அரியாலை சனசமூக நிலையத்தின் புகழ் வளர்த்தோர் வரிசையில்......




திரு. பொ. பஞ்சலிங்கம்



திரு. எஸ். கே. மகாலிங்கம்




திரு. மு. தெய்வேந்திரா




திரு. மு. சுரேந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுத் துறையில் வெற்றி விருதுகள் பெற்று
அரியாலை சனசமூக நிலையத்தின் புகழ் வளர்த்தோர் வரிசையில்...



திரு. ந. வாமசிவன்



திரு. எஸ். கே. பரமலிங்கம்



செல்வி சரோஜினி
நடராசா



செல்வி கிருஷ்ணவேணி
துரைசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாலை சனசமூக நிலைய வெள்ளி விழாவுக்கு

## பரிசில்கள் அன்பளிப்புச் செய்தோர்

**1. விளையாட்டுப் போட்டியைத் தம் செலவில் நடாத்தி உதவியோர் :**

1. எறிபந்தாட்டம் : புங்கங்குளம் சிவசக்தி வைத்திய நிலைய உரிமையாளர் டாக்டர் சு. ஸ்ரீ. விக்கினேஸ்வரா
2. கரபந்தாட்டம் : கனகரத்தினம் வீதி, மனோரஞ்சித சலவைத்தொழிற்சாலை உரிமையாளர் திரு. பொ. யோகானந்தம்
3. உதைபந்தாட்டம்: "A" பிரிவு - அரியாலையூர் பிரபல விளையாட்டு வீரர்கள் எஸ். எஸ் சண்முகநாதன் சகோதரர்கள்
4. உதைபந்தாட்டம்: "B" பிரிவு - ஐத்துறூசின் ஏக புதல்வன் திரு. சாகுல் ஹமீட் அவர்கள்
5. வலைப்பந்தாட்டம்: திருநெல்வேலி கண்ணா பிடா உரிமையாளர் திரு என். தனபாலரட்ணம் அவர்கள்
6. விநோத உடைப் போட்டி: இணுவில் அண்ணா கோப்பி ஸ்தாபன உரிமையாளர் திரு. எஸ் நடராசா அவர்கள்
7. மரதன் ஓட்டப் போட்டி: நல்லூர் வேல்முருகன் புத்தகசாலை உரிமையாளர் திரு. வே. லிங்கசாமி அவர்கள்

**2. தங்கப் பதக்கம் வழங்கியவர் :**

1. திரு. சதானந்தன் போஸ்

**3. பரிசில்கள் தந்துதவியோர் :**

1. திரு. ம. நடராசா
2. திரு. க. செல்வராசா
3. ஜஸிமா பிக்சர் பலஸ்
4. டிசைன் தையல் கடை
5. அமீன் தையல் கடை
6. பெனின்சுலா கிளாஸ் தொழிற்சாலை
7. இராசமலர் களஞ்சியம்
8. கா. லோகேந்திரன்
9. ஸ்ரீ லங்கா புத்தகசாலை
10. வசந்தா ஸ்ரோர்ஸ்
11. எஸ். தங்கராசா (ஐயர் கடை)
12. எஸ். நாகராசா
13. மு. மகாதேவா
14. ஆர். லிங்கராசா
    எம். கிருஷ்ணசாமி
15. சு. பாக்கியநாதன்
16. தேசிய சேமிப்பு வங்கி
    (ஆறு முதற் பரிசுகள்)
17. நிர்மலா சோதிலிங்கம்
18. ஏபிரகாம் ஆசிரியர்
19. நியூ ராஜு ஸ்ரோர்ஸ்
    ராஜு ஸ்ரோர்ஸ்
20. கை. தர்மகுலசிங்கம்
21. அஜன் இராஜரட்டினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. வெள்ளிக்கேடயம், வெள்ளிக்கிண்ணம் தந்துதவியோர் :

1. குமாரகுலசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக்கேடயம்
— திரு. திருமதி எஸ் விமலதாஸ்

2. அமரர் நாகநாதன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணம்
— நாகநாதன் ஞாபகார்த்த விழா குழுவினர் - அரியாலை

3. செல்லத்துரை ஞாபகார்த்த வெற்றிக்கேடயம்
— திருமதி வீரலட்சுமி செல்லத்துரை

4. சிவரத்தினம் ஞாபகார்த்த வெள்ளிக்கிண்ணம் — அருள் சகோதரர்கள்

5. விஜே செல்லையா

6. ஜெயம் செல்லையா

7. இராசன் செல்லையா

8. தேவி செல்லையா

9. கோ. கனகசிங்கம்

10. த. சோமு (சிவக்கொழுந்து)

11. அமரசிங்கம் ஞாபகார்த்த வெள்ளிக் கிண்ணம் - க. மாணிக்கவாசகர்

12. சோ. இராசா

13. செ. சோதிராசா

14. கோ. பாலசிங்கம்

15. ந. ஜெகசோதிராணி

16. கோ. விமலாதேவி

17. ப. அருளம்பலம்

## 60 மைல் ஆண்கள் சைக்கிள் ஓட்டப்போட்டிக்கான பரிசில்கள் அன்பளித்தோர்

1 ஆம் பரிசு : சைக்கிள் — யாழ் மெற்றல் இன்டஸ்றீஸ் ஸ்தாபனம்
2 ஆம் பரிசு : சிலோன் கொன்பெக்ஷனறி வேக்ஸ், சுன்னாகம்
3 ஆம் பரிசு : வின்ஸ் ஸ்தாபனம், நவீன சந்தை, யாழ்நகர்
4 ஆம் பரிசு : அரியாலை சனசமூக நிலையம்
5 ஆம் பரிசு : எ. சி. ஸ்ரேசனேஸ், எ. சி. எஸ். பிலரவிக் சேவிஸ்

## கைலாசபிள்ளை ஞாபகார்த்த 5 மைல் பெண்கள் சயிக்கிள் ஓட்டப் போட்டிக்கு பரிசில்கள் அன்பளித்தோர்

1 ஆம் பரிசு : எஸ். டேவிட், பாண்டியன் தாழ்வு
2 ஆம் பரிசி : என். இராமச்சந்திரன், விநோதா சலூன் உரிமையாளர்
3 ஆம் பரிசு : க. சோமசேகரம், "நியூஸ் லாண்ட்" யாழ்நகர்
4 ஆம் பரிசு : கே. சோமசுந்தரம், கொழும்புத்துறை
5 ஆம் பரிசு : கோ. விமலாதேவி, பூம்புகார் ஆலயம், அரியாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிக் கிண்ணங்கள் அன்பளிப்புச் செய்தோர்

1. ஏ. கே. எஸ்.
2. லிங்கம் சகோதரர்கள்
3. I. D. M. வாண்டுவெஸ்ட்
4. R. S. சீவரத்தினம்
5. S. திருஞானசுந்தரம்
6. T. குருசாமி
7. S. சதானந்தன்
8. K. குணரத்தினம்
9. P. பஞ்சலிங்கம்
10. S. சிவகுருநாதன்
11. T. சோமசேகரம்
12. S. சத்தியமூர்த்தி
13. S. திருநாவுக்கரசு
14. S. கந்தசாமி
15. J.J. சேக்ஸ்பியர்
16. உருத்திரா சகோதரர்
17. K. கணேஷன்
18. யாழ். உலோகத் தொழில் தாபனம்
19. ஆலாலசுந்தரம் தம்பிப்பிள்ளை
20. திருமதி R. சிவசுந்தரம்
21. N. தனபாலசிங்கம்
22. மில்க்பார்
23. டயறம்ஸ்
24. P. யோகேஸ்வரன்
25. S. T. பத்மநாதன்
26. S. C. அம்பலவாணர்
27. S. ஆலாலசுந்தரம்
28. S. தம்பித்துரை
29. செல்வி K. சியாமளா
30. C. இரங்கநாதன்
31. சிவசோதி
32. P. செல்லத்துரை
33. V. C. மாசிலாமணி
34. ஸ்டார் யுவலேர்ஸ்
35. M. M. அப்துல்காதர் அன் பிரதர்ஸ்
36. திருமதி A. காசிப்பிள்ளை
37. சுபாஸ்கபே
38. A. M. புறாடி
39. ஓட்டோஸ் தாபனம்
40. P. இராசரட்ணம்
41. திருமதி Y. கைலாசபிள்ளை
42. K. T. M. S. அப்துல் காதர்
43. பெற்றம்மா ஞாபகார்த்த வெள்ளிக் கிண்ணம் திரு. S. விஜேயகுலசிங்கம்
44. ரவிச்சந்திரன் யோகராசா ஞாபகார்த்த வெள்ளிக்கிண்ணம் குகதாசன் இல்லம் 1973
45. ரவிச்சந்திரன் யோகராசா ஞாபகார்த்த வெள்ளிக்கேடயம் திருமதி பத்மா யோகராசா
46. குமாரகுலசிங்கம் ஞாபகார்த்த வெள்ளிக் கிண்ணம் திரு / திருமதி S. விமலதாஸ்
47. குமாரகுலசிங்கம் ஞாபகார்த்த வெள்ளிக்கிண்ணம் K. ஜெயேந்திரன், A. T. ஈஸ்வரா
48. குமாரகுலசிங்கம் ஞாபகார்த்த வெள்ளிக்கேடயம் கனகரத்தினம் இல்லம் 1973

## சென்றகால உடற்பயிற்சிப் போட்டியில் வென்ற இல்லங்கள்

1960—கனகரத்தினம்
1961—கந்தையா
1962—கனகரத்தினம்
1963—கனகரத்தினம்
1964—கனகரத்தினம்
1965—கனகரத்தினம்
1966— ——
1967—கந்தையா
1968—கந்தையா
1969—கனகரத்தினம்
1970—கந்தையா
1971———
1972—குகதாசன்
1973—கந்தையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமய வாழ்வும் சனசமூக நிலையமும்

திரு. சு. பாலசுந்தரம்
(நிலையத் தலைவர்)

சூரியன், சந்திரன், பரந்தவானம், அங்கு ஒளிவீசும் எண்ணற்ற விண்மீன்கள்- அலைவீசும் பெருங்கடல் மிதந்தோடும் மேகங்கள்; அதை அருகி நிற்கும் உயர்ந்த மலைகள்—தென்றலாய்... சூறுவளியாய்ச் சுழன்றடிக்கும் காற்று, மற்றும் இயங்கியல் நிலையில் இருக்கும் பொருள்கள் எல்லாம் இறைவனின் மகிமையை எடுத்து எமக்குக் காட்டும் ஏதுக்களாகும்.

உலகப் படைப்பும், உலகியல் இயற்கையும் மனித சக்திக்கு மிஞ்சிய ஒரு சக்தியை எந்நேரமும் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. சக்திக்குள் சக்தியாய் நின்று சரம்—அசரம் என்ற பொருள்களை ஆட்டிப் படைக்கும் அந்த உவமை சொல்லாச் சக்தியைத் ''தெய்வீக சக்தி'' என்று அழைக்கிறோம். அத் தெய்வீக சக்தியே எமக்கு உடல், கருவி, உலகம், நுகர்ச்சிகள் ஆகியவற்றை அருளி நமது நல்வினை தீவினைக் கேற்ப இன்ப துன்பங்களை நல்கி நம்மைக் காத்து, ஆட்டிப்படைத்து ஆட்கொண்டு வருகின்றது. இவ்வுண்மையினை உணர்ந்து நம்பி, நல்லொழுக்க நெறிகளைக் கைக்கொண்டு நல்லவர்களாய் வாழ்வதற்குரிய வழிவகைகளைக் காட்டுவதே சமய வாழ்வாகும்

உலகெங்கும் உள்ள சமயங்கள் யாவும் உலகியல் வாழ்வில் மனித குலத்தை நல்வழியில் இட்டுச் செல்லும் திருப்பணியை செய்து வருகின்றன. சமயவாழ்வு வழுவா நெறி முறையில் வாழ்ந்து மறைந்த எண்ணற்ற பக்தி நெறிச் சான்றோர்களின் வாழ்க்கை நெறி எமக்கு வாழ்வாங்கு வாழும் வழிமுறையைக் காட்டி நிற்கின்றன. பக்தி மார்க்கத்தின் மூலம் பரவசம் கண்டு பாடலுடன் ஆடல் கொண்டு களிப்புற்று வாழ்வில் விழிப்புற்று வாழ்ந்த நம் மூதாதையர் போலன்றி அறிவுக் கொவ்வா முறையில் அழிவுத்துறையின் கரையை நோக்கி எதிர் நீச்சல் போடும் எம் இன்றைய இளம் சந்ததியினரை இரட்சித்து நல்வழி காட்ட வேண்டிய பெரும் பொறுப்பு சனசமூக நிலையங்களையும் சார்ந்ததுவே.

மேலை நாட்டு நாகரீக மோகத்தால் சமுதாயத்துக்கு மட்டுமன்றி, நம் கலை—கலாச்சாரம் அத்தனையும் துறந்து, தனக்குத்தானே அழிவைத் தேடிக்கொள்ளும் இன்றைய இளைஞர்களின் போக்கைத் திருப்பத்—திருத்த சமய அறிவு இன்றியமையாத சாதனமாகும்.

காலத்துக்கு ஏற்றபடி மாற வேண்டுமென்பது மறுக்க முடியாத உண்மை. அந்த மாற்றம் நம் மதமும்-கலாச்சாரமும் ஏற்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். அநாகரீக உடையலங்காரங்களால் நம் கலாசாரத்தை உயிருடன் புதைக்கும் கைங்கரியசத்தில் காளையரும் கன்னியரும் முழு மூச்சுடன் இன்று ஈடுபட்டுள்ளனர். இயற்கை அன்னைக்கு இசைந்து—சமய வழிமாறாப் பெரும் பக்தி நெறியுடன் வாழ்ந்துவந்த நம் குலப் பெண்கள் இன்று சமயாசாரத்துக்கு ஒவ்வாத வழிமுறையில் தன்னை இட்டுச் செல்வது வருந்துதற்குரிய செயலாகும். இன்றைய இளைஞர் பாரம்பரியமற்ற விரக்தி மனப்பாங்குடன் கூடிய அலங்கோல வாழ்வை — அவர்கள் நாகரீகத்தின் பெயரால் மேற்கொண்டிருக்கும் பேய் பிசாசுகள் போன்ற தோற்றத்தை-பொருந்தா வாழ்வு நெறி முறையை மாற்றியமைத்து நல்வழி காட்டப் பக்தியுணர்வை ஊட்டி அழிவுப் பாதையில் நின்று அவர்களைத் தடுத்தாட் கொள்ளும் பெரும்பணி இன்றைய சமூக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவா இயக்கங்களின் இன்றியமையாப் பணியாகும்.

சமய உணர்வும் பக்தி நலனும் இல்லாத ஒருவன் பிற துறைகளில் எவ்வளவுதான் சிறப்புற்று விளங்கிடினும் அது சீர்பெற்ற — சிறப்புப்பெற்ற வாழ்க்கையாகாது. அர்த்தமற்ற பகட்டான கானல் நீர் வாழ்வை மெய்வாழ்வாய் மேற்கொண்டு ஆத்மசாந்தி அடையாது அலைந்து அழிந்தொழிந்த எண்ணற்ற நவயுக மனிதர்களின் பயங்கர வாழ்வுப்பாதை எமக்கு-எம் எதிர்காலத்துக்கு ஏற்றமிகு எச்சரிக்கையாகும்.

பௌதீகத்தின் துணைகொண்டு அண்ட சராசரங்களை ஆட்டிப் படைத்து விஞ்ஞான வெற்றியால் எட்டுத் திக்கும் கொட்டு முரசெழுப்பி முன்னேற்றத்தின் முகட்டிலே நிற்கும் மேலை நாட்டினர் ஆத்மீகத் துறையில் ஆத்மீக இரட்சிப்பு இன்றி—விரக்தி வாழ்வுக்கு இரையாகி ஆத்ம ஈடேற்றம் — ஆத்ம சாந்தி வேண்டி கீழைத்தேச சாதுக்களின் பாதார விந்தங்களை சரணடைந்து அவர்கள் காட்டும் அமைதி பூத்த அருட்ஜோதி வாழ்வில் பேரின்பம் காணும் செய்திகளை நாம் நன்கறிவோம்.

எனவே, மனிதன் அன்பு-அருள்-அறம் இவற்றைச் சார்ந்து! வையத்து வாழ்வாங்கு வாழ்வதே மக்கட் பண்பு. இந்தப் பண்புடைமை இல்லாதோர் ''மரம்போல்வர் மக்கட் பண்பில்லாதவர்'' என்று பொய்யா மொழியார் கூறுகிறார். மக்களாய்ப் பிறந்து மரங்களாய் வாழாது மக்களுக்கு உரிய மக்கட் பண்பைப் பாதுகாத்து வாழ்வில் வாழ்வாங்கு வாழும் நெறியை-ஆத்மீக நிறைவைத் - தார்மீக சாந்தியைப் பெறுவதற்குச் சமய வாழ்வை மேற்கொள்ள வேண்டும். நடுக்கடலில் தத்தளிக்கும் கலங்கரை விளக்கங் காணுக் கப்பலைப் போல் மனங்கலங்கி மையல் வலைப்படுத்திய மருள் நெறியினின்றும் விலகிச் செம்மை சேர்ந்த அருள் நெறியை அடைய சமயப் பற்றை-பக்தியுணர்வை மக்கள் மனங்களில் சனசமூக நிலையங்கள் மூலமும் வளர்க்கலாம்.

இருபத்தைந்து வருட நற்சேவையாத்திரையில் வெள்ளிவிழாக்கண்டு நிற்கும் அரியாலை சனசமூக நிலையமான எமது நிலையம் சமயத்துறையிலும் தனது பங்கைச் செவ்வனே செய்து வருகின்றது. சமய விழாக்கள்—சமய குரவர்களின் விழாக்கள்-கலாசார விழாக்கள் முதலியவற்றைக் காலத்துக்குக்காலம் நடாத்தி மக்கள் மனங்களில் பக்தியுணர்வை-ஆத்மீக அறிவைத்... தார்மீகப் பண்பை பரப்பி வருகின்றது. அரியாலை பிரப்பங்குளம் மாகாமாரி அம்மன் ஆலயத்தில் நிலையத்தின் அனுசரணையுடன் வெள்ளிதோறும் ''கூட்டுப் பிரார்த்தனை'' நடைபெறுகின்றது. எதிர் காலத்தில் மென்மேலும் எமது சனசமூக நிலையம் சமய வாழ்வில் மக்களுக்குத் தொடர்ந்து தொண்டாற்ற ஊக்கமிகு ஆக்க வழிவகைகளை அமைத்துப் பண்பமைந்த பக்திமார்க்க சமயநெறி எங்கும் தழைத்தோங்க உழைத்திட உறுதி பூண வேண்டும்.

**வீரர்குல முழக்கம்**

**ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே;**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;**
**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;**
**தண்ணடை நல்கல் வேந்தற்குக் கடனே —**
**ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கி;**
**களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே!**

— புறநானூறு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சனசமூக நிலையமும் – அரசியலும்

திரு. சி. சதாசிவம்
(நிலைய உதவிப் பொதுச் செயலாளர்)

ஒரு கிராமத்தின் நிலைக்களனாகவும்; அதன் பிரதிபலிப்பாகவும்; கலை — விளையாட்டு—பொதுநலத்துறை இவற்றில் கிராம மக்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தின் அளவு கோலாகவும் விளங்குவது சனசமூக நிலையமாகும். சாதிமத, வர்க்க வேறுபாடுகளால் சிதைந்து நிற்கும் கிராம மக்களை ''கிராமப்பற்று'' என்ற அணியில் ஒருங்கு திரட்டிச் செயல்படுத்துவதும் சனசமூக நிலையமே!

இன்றையச் சமுதாய அமைப்பில் ஒவ்வொரு தனி மனிதனும் அரசியற் தாக்கத்தால் தனித்தனி அரசியற் சித்தாந்தம்— கோட்பாடுகளுக்கு அடிமையாகித் தான் கண்ட கொள்கையில் புனிதத் தன்மையும் முற்போக்கும் கண்டு ஒவ்வொரு கட்சியின் கீழ் செயல்படுகிறுன். அரசியல் கொள்கையில் தர்க்க ரீதியான கருத்து பேதம் கொண்ட மனிதர்கள் ''கிராமப்பற்று'' என்ற உணர்ச்சியால் உந்தப்பட்டு ஒருங்கு திரண்ட சந்திப்பை உருவாக்கி உருவகப் படுத்தும் நிலையம் சனசமூக நிலையம்.

இத்தகைய பலரக மக்கள் செயற்படும் சனசமூக நிலையத்தில் அரசியல் ஊடுருவல்கள் வலுப் பெருது பராமரிப்பதுவே அந்த நிலையத்தின் முன்னேற்றத்துக்கும் - கிராமத்தின் ஈடேற்றத்துக்கும் இன்றியமையாத செயலாகும். பலதரப்பட்ட அரசியல் கட்சிகள் நிலவும் கிராமத்தில் மக்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகளும்-மோதல்களும் ஏற்படுவது இயல்பு. இந்த அரசியல் வர்க்க பேதம் சனசமூக நிலையத்தில் தலை தூக்காது. அதன் புனிதத்துவத்தைப் பாதுகாப்பது பொது மக்களின் முழுமுதற் கடமையாகும். அரசியல் கருத்துக்கள் சனசமூக நிலையத்தில் ஊடுருவுமானல் அந்த நிலையம் நீடித்த ஆயுளையும் - வலுப்பெற்ற வளர்ச்சியையும் பெற்று வாழ்வது கடினம். அரசியல் ஊடுருவலால் இன்று பிளவுபட்டு அழிந்து - சின்னபின்னமாகி மங்கி மறைந்து போன எத்தனையோ சனசமூக நிலையங்களின் சரித்திரம் சரியான உதாரணமாக நின்று நிலவுகின்றன. களங்கமற்ற புனிதமான சமுதாய சேவை என்ற தளத்தில் எழுப்பப்படும் சனசமூக நிலையத்தில் தர்க்கவாத அரசியல் பேதங்கள் எக்காலத்திலும் எழாது நிர்வகிப்பது நிர்வாகத்தினரின் தலையாய கடமையும் இலட்சியமும் ஆகும்.

சாதி. சமய, வர்க்க பேதங்களால் ஆட்டிப்படைக்கப்படும் மனிதகுலம் எப்படி இறைவழிபாட்டில் ஒரு முகப்பட்டு ''ஒருவனே தேவன்'' என்ற உணர்வுடன் சில சந்தர்ப்பங்களில் செயல்படுவதுபோல் சனசமூக நிலையத்தையும் இறைவனின் ஆலயமாகப் பாவித்து அரசியல் வேறுபாட்டை ஒரு ஓரமாக ஒதுக்கி ''கிராமப் பற்றுடன்'' நிர்வகித்து வழி நடத்தினல் அதன் வளர்ச்சிக்கு எத்தகைய இடையூறும்- எத்தகைய தங்கு தடையும் என்றும் ஏற்படாது.

குறிப்பிடச்கூடிய பெரு வளர்ச்சியைப் பெற்று வட இலங்கைக்கோர் முன்னேடியான சனசமூக நிலையமாக விளங்கிவரும் அரியாலை சனசமூக நிலையம் தன் புகழ் பெற்ற சேவை வரலாற்றின் இருபத்தைந்தாவது வருஷத்தை மாபெரும் ''வெள்ளி விழா'' வெடுத்துக் கொண்டாடும் இவ்வேளையில், இந்த நிலையத்தின் நேரான வளர்ச்சிக்கு அரசியல் ஊடுருவல் அற்ற நிருவாகம்தான் முழு முதற்காரணம் என்று துணிந்து கூறலாம்.

அரசியலும் சனசமூக நிலையமும் இரு துருவங்கள். இவை இரண்டும் ஒருபோதும் ஒருங்குசேர முடியாதவை. இந்த வேறுபட்ட இரு சேவையையும் ஒருங்கிணைத்து நிருவகிக்க நினைப்பவர்... சிந்திப்பவர்... செயற்படுத்த முனைபவர் முதற்தரமான சனசமூக விரோதிகளாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை வளர்ச்சியில் நிலையத்தின் பங்கு

திரு.ச. பாலசிங்கம்
(நிலையக் கலைத்துறைத் தலைவர்)

கொடிகட்டிப் பறந்த தமிழ்மொழி, தமிழ்மரபு, தமிழ்ப்பண்பாடு, தமிழ்க்கலைகள் இவை யாவையும் இடைக்காலத்தில் சமயப்போர்களும் - அன்னியர் ஆட்சியும் வீழ்ச்சியுற வைத்ததை சமுதாய வரலாறு கூறுகிறது. முத்தமிழ் வளர்ச்சியில் வந்த தளர்ச்சியைத் தமிழ்க்கலை இயக்கங்களும், சமூகசேவா சங்கங்களும் நீக்கித் தடம் புரண்ட தமிழ்க்கலையைத் தூக்கிநிறுத்தி நேர்செய்து சீர்செய்து வளர்ச்சிப்பாதைக்கு வழிகாட்டின.

இந்த அரும்பணியில் அரியாலை சனசமூக நிலையமும் தனது திறமான பங்கைத் தரமாகச் செய்து வருகிறது. நிலையத்தின் இலட்சியங்களில் இயல், இசை, நாடகம் முதலிடத்தை வகிக்கின்றன. சேவையாத்திரையின் இருபத்தைந்தாவது வருடத்தைக் கடந்துவந்து 'வெள்ளி விழா'க்கண்டு களிப்புடன்நிற்கும் நிலையத்தை வியப்புடன் நோக்கும் நாம் நிலையம் முத்தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றிய அரும்பணிகுறித்து ஆராய்ச்சி ஆற்றவேண்டியது அவசியம்.

இயல் - இசை இரண்டையும் தன்னகத் தடக்கிய நாடகத் தமிழுக்கு நமது நிலையம் ஆற்றிய தொண்டு அளவிடற்கரியது. நிலையத்தின் ஆரம்ப காலத்தில் ஈழத்தமிழகத்தில் நாடகத்தின் நிலை பாமரத்தனம் நிழலாடும் ஒரு கலையாக இருந்தது. ''கூத்தாடுதலும் குண்டிநெளித்தலும் ஆற்றுதவன் செயல்'' என வரட்டு வேதாந்தம் பேசுவோர் மலிந்துகிடந்தனர். நாடக நடிகர்களை நாடிப்பிடிப்பது பிரயத்தனமான பிரச்சினையாக இருந்தது. இந்தநிலையில் எமது நிலையத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா பிரபல அண்ணாவியார் ''சபாபதி'' அவர்களின் பிரமாண்டமான தயாரிப்பான 'நள தமயந்தி'யை மேடையேற்றியது. கண்கவர் காட்சி சோடனைகளுடனும், மரபுவழுவா இசையுடனும், முத்தமிழின் இலக்கணமாய் இம்முதல் நாடகம் அமைந்தது.

இந்த இருபத்தைந்தாண்டு இடைக்காலத்தில் நாடகத்தமிழ்வளர்ச்சியில் நமது நிலையம் துரித நடைபோட்டு முன்னேறியுள்ளது. வெற்றிவிருதுபெற்ற ''பாதுகை பட்டாபிஷேக''மும்; பிரமாண்ட தயாரிப்பான ''இராசஇராச சோழ''னும்; வானொலிப் புகழ் ''சாணக்கிய சபத''மும்; முற்றும் பெண்களே தோன்றி நடித்த கண்கவர் 'கற்புக்கன'லும்; உலகத்தமிழ் ஆராய்ச்சி மகா நாட்டில் நம் பெண்கள் நடித்த 'பரத'னும் அண்மையில் எமது மாதர்கள் அரங்கேற்றிய 'கர்ண'னும் நமது நிலையம் அளித்த எண்ணற்ற நாடகங்களுள் புகழ்பெற்ற சில;

நாடக வளர்ச்சியில் வருடாவருடம் நிலையத்தில் நடைபெறும் இல்லப்போட்டியும் குறிப்பிடத்தக்க பெரும்பங்கைப் பெறுகிறது. தங்கள் இல்லத்தின் வெற்றியென்ற இலட்சியத்துடன் பாடாதவர் பாடினர்; ஆடாதவர் ஆடினர்; நடித்தறியாதோர் நடித்தனர். ''திக்கெட்டும் சென்று கலைச் செல்வம் கொணர்ந்து சேர்ப்பீர்!'' என்ற பேரறிஞர் வாக்கிற்கேற்ப மூலைமுடுக்கெல்லாம் பாதை அறியாது பதுங்கிக் கிடந்த பைந்தமிழ்க் கலைஞர்க்கெல்லாம் பாதை காட்டி நமது நிலையத்தின் உறுப்பினர்என்ற பட்டயத்தைச் சூட்டி, கலைத்தீபத்தை உயரத்தூக்கித் தங்கள் இல்லத்தின் வெற்றியில் இறும்பூதி நின்றனர். உறுப்பினர் மத்தியில் போட்டி மனப்பான்மையுடன் பெருகிப் பாய்ந்த கலையார்வம் காலத்துக்குக் காலம், வருடத்துக்கு வருடம் வற்றாத நதியென வளர்ந்தது. யாழ் குடாநாட்டில் ''விளையாட்டுக்கு அரியாலை'' என்ற புகழ் பூத்த பெயர் நிலவுவதுபோல் கலைத்துறையில் ''நாடகத்துக்கு அரியாலை'' என்ற அழிக்கமுடியாத பெரும் புகழ் நிலைபெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது, நாடகம் நடாத்திட நடிகர்களை வெளியூரில் தேடியலைந்த நிலைமாறி இன்று எம்மவர் மத்தியில் யாரை நடித்திட வைப்பது? என்ற திண்டாட்டமான தேக்கநிலை உருவாகியுள்ளது. எவ்விடம் நோக்கினும் யாரைப் பார்த்தாலும் நடிகர்களாகவே காண்கின்ரும். "அரியாலையில் உள்ள ஒரு பேத்தையைத்தானும் தூக்கி மேடையில் விட்டால் மேன்மையுற நடித்துவிடும்" என்று எமது நாடகம் ஒன்றுக்குத் தலைமை தாங்கிய அறிஞர் கலையரசு சொர்ணலிங்கம் குறிப்பிட்டார். இந்த வியத்தகு வெற்றிக்கு எம்மை இட்டுச்சென்ற இல்லப்போட்டியை மென்மேலும் மேன்மையுற வளர்ப்போமாக.

கலைவளர்ச்சியில் நிலையத்தின் புகழ் வளர்த்த நிலைய மாதரணியை நினைவுகூராமல் இக்கட்டுரை நிறைவுபெருது. மாதர் பகுதி ஆரம்பமாகிய அன்று எம்மவர் மத்தியில் எழுந்திட்ட எதிர்ப்பு எழுதிடற்கரியது ஏச்சுக்கும் ஏளனத்துக்கும் ஈடுகொடுத்து, தூற்றல் மழையில் ஏற்றமுடன் கலைவளர்த்துப் புகழ்பூத்த பெரும் விளைவை நிலையத்துக்குச் சுமந்தளித்த மாதர்அணியின் கலைச் சேவை மகத்தானது. சனசமூக நிலையங்களுக்கு மத்தியில் நிகழும் சமாச விழாவின் போதெல்லாம் - கலையார்வத்துடன் ஈடுபட்ட போட்டிகளிலெல்லாம் வெற்றிவிருது பெற்று நிலையத்தை முன்னணியில் திகழ வைத்த பெருமை மாதரணிக்கே உரியது. எத்துறையிலும் வித்தகராய்த் திகழும் எம் மாதரணி அரங்கேற்றிய "கற்புக்கனல்" என்ற காவிய நாடகம் மேடைகள் பலவற்றில் வெற்றிமுழக்கம் செய்து நிலையத்தின் புகழ்பூத்த வரலாற்றில் புதியதொரு அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்தது. வானொலிப் புகழ்படைத்த எமது மாதரணி ஆடல், பாடல் அனைத்திலும் வெற்றிமேல் வெற்றி பெற்று கலைவளர்ச்சியில் நிலையத்தின் பங்கைச் செவ்வனே செலுத்தி வருகின்றது.

ஆண்டுதோறும் நிலையம் வெகுவிமரிசையாகக் கொண்டாடிவரும் ஆண்டுவிழாவில் நிலையக் கலைப்பகுதி உறுப்பினர் மத்தியில் கலைப்போட்டிகளைச் சிறப்புற நடாத்திவருகிறது. பேச்சு, கிராமிய சம்பாஷணை, கட்டுரை, சிறுகதை, சித்திரம், கைப்பணி, தனிப்பாடல், கூட்டுப்பாடல், நாட்டுப்பாடல், நடனம், நாடகம் அத்தனைபோட்டிகளிலும் உறுப்பினர் ஆண் - பெண் சரிநிகர் சமானமாக வீறுபெற்ற கலையார்வத்துடன் பங்குகொண்டு வருகின்றனர்.

வருடாவருடம் நிலையத்தின் ஆண்டு நிறைவுவிழாக்கள் மாபெரும் திருவிழாவாக — ஒப்பற்ற கலைவிழாவாகத் தொடர்ந்து இரண்டு மூன்று தினங்கள் கொண்டாடப்பட்டு வருகின்றது. கலைக் கண்காட்சியும், கைப்பணிப் பொருட்களின் விற்பனையும் சிறப்பாக இந்நாட்களில் நிகழ்வதுண்டு. இரவு நிகழ்ச்சியில் புகழ்பெற்ற வித்தகரின் 'நாதசுர இசை'யும், கர்னாடக சங்கீதமும்... நவயுக மெல்லிசையும், நடனமும், நாடகங்களும் நடைபெறுகின்றன. மக்கள்வெள்ளம் அலைஅலையாகத் திரண்டுவந்து கலைகண்டு— இசையுண்டு மகிழ்வார்கள். மேடையலங்காரம்... மின்விளக்கு வரிசை... அலங்கார வளைவுகள்... கண்கவர் சோடனைகள் .. கடலென மக்கள் வெள்ளம் .. ஏறெடுத்த இடமெங்கும் இளங்கோ கண்ட பூம்புகார்தான்! இவை ஆண்டாண்டுதோறும் நிலையத்தின் நிறைவுவிழாவில் நாம் கண்டு களிப்பவை.

தைப்பொங்கல் விழா, சரஸ்வதிபூஜை முதலிய சமய சம்பந்தமான விழாக்களையும் கலைநிகழ்ச்சிகளுடன் நிலையம் நடாத்திவருகிறது. சமயப் பெரியார்களுக்கும் — தேசியப் பேரறிஞர்களுக்கும் — தாய்த்தமிழ் வல்லுநர்க்கும் நிலையம் விழாவெடுத்துக் கௌரவிக்கத் தவறுவதில்லை.

உறுப்பினர்களின் கலைஞானத்தை வளர்க்க மிருதங்க வகுப்பும் — சங்கீதவகுப்பும் நிலையத்தில் நிகழ்ந்தன. தையலரின் தையற்கலை நளினம்பெறத் தையல்வகுப்பு நடைபெறுகிறது.

நிலையத்தில் நினைத்த மாத்திரத்தில் திடீர் நாடகங்களையும், கலைநிகழ்ச்சிகளையும் வெற்றிகரமாக நடத்திமுடிப்பதற்கு நிலையத் திறந்தவெளியரங்கு முழுமுதற் காரணமாக இருக்கிறது. இந்த அரங்கு பொதுமக்களின் நிதியுதவி — உடலுழைப்பு இவற்ருல் ஆரம்பமாகியது. நம்மூர் பெரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரும் - முன்னாள் யாழ்நகர முதல்வரும் - நிலையத்தின் போஷகராக இருந்தவருமான காலஞ்சென்ற திரு. காசிப்பிள்ளை அவர்களின் பெயரால் கிடைத்த நிதியுதவியினால் அரங்க நிர்மாணம் முற்றுப்பெற்றது. அன்னாரின் பெயரால் இவ்வரங்கு "காசிப்பிள்ளை அரங்கு" என்ற பெயருடன் அழகுக் கலையம்சத்துடன் நிலையத்தின் புகழ்பரப்பி நிற்கிறது. மேல்நாட்டில் வசிக்கும் எமது நிலையத்தின் நெடுநாள்உறுப்பினர் திரு. இராசா இரகுநாதன் அவர்கள் கொடுத்த நிதியுதவியால் நிலையத் திறந்தவெளியரங்கம் மென்மேலும் கலையழகு பெற்றது. நிலையத்தின் கலைவளர்ச்சிக்குப் பொதுமக்கள் மனங்கோணாது ஒத்துழைப்பு நல்கிவருகின்றனர். காலத்துக்குக்காலம் நிலையத்தை நிர்வகித்த நிர்வாகிகள் அத்தனைபேரும் நிலையத்தின் கலைத்துறை வளர்ச்சிக்கு ஊக்கமுடன் உழைத்தனர் - உழைத்துவருகின்றனர்.

இன்று ஈழத் தமிழகத்தில் இலக்கியத் துறையிலும் - நாடகத்துறையிலும்...... நடனக் கலையிலும் வேகமான மறுமலர்ச்சி நிகழ்ந்து வருவதை அவதானிக்கின்றோம். தமிழ்மக்கள் மத்தியில் எழுந்துள்ள இந்த வீறுபெற்ற கலையார்வம் விருத்தியுற தமிழ் மன்றங்களும் - நாடக மன்றங்களும் - சனசமூக நிலையங்களும் பெரும் பணியாற்றி வருகின்றன. கலைத்துறையில் எழுச்சி பெற்ற ஒரு விழிப்புணர்ச்சியை எம் மத்தியில் ஊட்டி நாளும் பொழுதும் நல்ல கலைஞர்களை ஈழத்தமிழகத்துக்கு ஈந்துவரும் அரியாலை சனசமூக நிலையம் கலைவளர்ச்சியில் தனது பங்கைச் செவ்வனே செய்து வருகின்றது.


அரியாலை சனசமூக நிலையத்தின் வெள்ளிவிழாவுக்கு

எனது நல்வாழ்த்துக்கள்

வே. கணபதிப்பிள்ளை மாசிலாமணி, ச. நீ.

தலைவர்,

மக்கள் குழு - வட்டாரம் 8, கொழும்புத்துறை,

யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாலை சனசமூக நிலையத்தால்
# இற்றைவரை அரங்கேற்றப்பட்ட
# நாடகங்கள்

1. தமயந்தி
2. யயாதி
3. அமுதவல்லி
4. மனேகரா
5. தலைநகரம்
6. ஸ்ரீ வள்ளி
7. பக்த நந்தனர்
8. அண்ணு
9. குமாரி
10. உண்மையின் வெற்றி
11. தளபதி
12. மதுவும் மங்கையும்
13. துளி விஷம்
14. பிரிதிவிராஜன்
15. கன்னிக்கோட்டை
16. இலங்கேஸ்வரன்
17. பூம்புகார்
18. வீரபத்தினி
19. ஆலமரம்
20. சாணக்கிய சபதம்
21. பாதுகா பட்டாபிஷேகம்
22. போலிஸ்காரன் மகள்
23. ராஜராஜசோழன்
24. சறுக்கிய சாஸ்திரம்
25. கந்தன் கருணை
26. கற்புக்கனல் (பெண்கள்)
27. சாந்தி
28. பொற்சிலை
29. கண்டி ராசன்
30. முடி துறந்த மன்னன்
31. அன்று செய்த தவறு
32. உயிரோவியம்
33. வெற்றித் திருநகர்
34. மனக்கோவில்
35. வெற்றி முழக்கம்
36. வெற்றிச் சின்னம்
37. கங்கைக்கரைக் காவலன்
38. வாழ்க்கை வாழ்வதற்கே
39. வெற்றி மகள்
40. சத்தியவான் சாவித்திரி
41. ஞான ஒளி
42. வெண்கட்டி
43. கண்ணீர்
44. வெற்றி மாளிகை
45. சங்கிலியன்
46. வீதி விளக்கு
47. காசியப்பன்
48. சாம்ராட் அசோகன்
49. சகுந்தலை
50. வில்லியம் தெல்
51. புளியடிச் சகாயச் சங்கம்
52. வாய்க்காரி வள்ளி
53. பட்டிக்காட்டுப் பரமர்
54. அதிலே வேலையில்லை
55. அவுட்டுவிடடி நாயை
56. மலையமான்
57. யாழ்ப்பாணம் கொழும்பிலே
58. நவீன யமலோகம்
59. டில்லி மன்னன்
60. வீரசௌந்தரம்
61. மலிவான மாப்பிள்ளை
62. யமுனு
63. சமூகத்தொண்டன்
64. சுத்தம் சுகம் தரும்
65. பாவ மன்னிப்பு
66. மனக்கோயில் உனக்காக
67. புன்னகையின் புயல்
68. போர்க்களம்
69. ராதா
70. பாவத்தின் பரிசு
71. தேனும் பாலும்
72. கைதிகள்
73. சேற்றில் செந்தாமரை
74. சோக்கல்லோ சம்பந்தி
75. கர்ணன் (பெண்கள்)
76. துட்ட கைமுனு
77. தியாகி
78. மனேன்மணி
79. சித்தூர் ராணி
80. யூலியசீசர்
81. தேசிங்கு
82. அன்பே அகிலா
83. முல்லை மகுடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத்துறையில் தொடர்ந்து இருபத்தைந்து வருடங்கள்
நிலையத்திற் பணியாற்றி நிலையப் புகழ்வளர்த்த
கலைஞர்கள் வரிசையில்.........



நடிகப் பெருந்தகை திரு. இ. க. குமரையா
தமது புகழ்பெற்ற "திருவிளையாடல்" நாடகத்தில்
சிவன் வேடத்தில் தோன்றும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரியாலை சனசமூக நிலைய
''காசிப்பிள்ளை அரங்கம்''



அரியாலை சனசமூக நிலைய மாதர் பகுதியினர்
அரங்கேற்றிய ''கர்ணன்'' நாடகத்தில் ஒரு காட்சி



அரியாலை சனசமூக நிலையத்தினர் நடாத்தும்
ஒவ்வொரு கலை நிகழ்ச்சிகளுக்கும்
கடல்போலத் திரளும் மக்கள் கூட்டம்



அரியாலை சனசமூக நிலைய
விளையாட்டு மைதானத்தில் திரண்டு நிற்கும்
இரசிகர்கள் மத்தியில் விளையாட்டுப் போட்டி
நடைபெறும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையும் மனிதனும்

**திருமதி சிவா - தியாகராசா**
(கலாச்சார உத்தியோகஸ்தர் யாழ்ப்பாணம்.)

"துன்பம் சேர்கையில் யாழெடுத்து நீ
இன்பம் சேர்க்க மாட்டாயா?..."

எனும் கவிஞனின் கூற்றுக்கமைய இன்பத்தில் திளைக்கும்போது மட்டுமன்றித் துன்பத்தில் மூழ்கும் போதும் மனிதன் நாடுவது தூய கலையினையே. பண்டைக்காலம் தொட்டு இற்றைவரை மனித வாழ்க்கையுடன் கலையும் பின்னிப் பிணைந்துளதை நாம் உணரக்கூடியதாக உளது. உடலும் உயிரும்போல் மனித வாழ்க்கையும், கலையும் ஒன்றுடன் ஒன்று இணைந்துளது. மனிதன் மகிழ்ச்சியுற்ற பொழுதோ அன்றித் துன்பமுற்ற பொழுதோ மட்டுமன்றிப் பகைவரோடு வெகுண்டு அவர்களை அழிக்கும் போர்க்காலங்களிற் கூட கலையினை நாடுவது வெள்ளிடைமலை. இதனைப் போர்க்காலங்களில் போர்ப் பாசறைகளில் பகலில் போரில் ஈடுபட்டுக் களைப்புற்ற போர் வீரர்கள் இரவில் கலைகளில் ஈடுபட்டுக் களியாட்டம் ஆடுவதினின்றும் அறிய முடிகின்றது.

நாள் முழுவதும் யந்திரத்தோடு யந்திரமாகப் போராடி உடல் களைப்புற்று, உளச் சோர்வுற்ற மனிதனுக்கு புத்துயிர் அளித்து, ஆத்ம திருப்தி அளிப்பது தூய கலையே. மேலும் மனிதன் இறைவன் மேலுள்ள பக்தியினை வெளிப்படுத்தும் பொழுதெல்லாம் அவற்றைக் கவிதை வடிவிலே இசையும் சேர்த்து வெளிப்படுத்துகின்றான். தூய இசைமூலம் தனது பக்தியினைத் தெளிவாகவும், உருக்கமாகவும் வெளிப்படுத்தும்பொழுது, அதனால் கவரப்படாதார் எவரும் உளரோ? நாயன்மார்களின் பக்திப்பாடல்கள் இதனைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. மேலும் பக்தி பரவசமாகும்பொழுது தனைமறந்து ஆடுவான், பாடுவான், கூத்து ஆடுவான்.

மனிதன் பிறப்பு, திருமணம் ஆகிய முக்கிய மகிழ்ச்சிதரும் சமயங்களில் கலையிலும், களியாட்டங்களிலும் ஈடுபடுவது போல் துன்பத்தில் மூழ்கும் சமயமும் தன் மன ஆறுதலிற்காகக் கலையினை நாடுகின்றான். அவனது மனக்கவலைகள் பாடல்கள் மூலமும் வெளிப்படுகின்றது. இறந்த வீட்டில் பாடும் "ஒப்பாரியும்" இத்தகையதே. அத்துடன் கலையில் ஈடுபடும் மனிதன் "கலைமகளை"க் கலைக்குத் தெய்வமாக வழிபடுகின்றான். அவ் நடராஜப் பெருமானின் திருவுருவும் கலைவடிவே. இறைவன் பிரளய காலத்தில் உலகை அழித்தபின் ஊழி நடனமாடுகின்றான்.

பண்டைய தமிழ் மன்னர்கள் போரிற்குச் செல்லுமுன் கொற்றவையை வழிபட்டு கொற்றவைக்கு விழா எடுத்தனர். போர் முடிந்த பின்னும் வெற்றியினை விழாவாகக் கொண்டாடினர். பண்டைய மன்னர்கள் கலைக்கும், கலைஞர்கட்கும் எத்தகைய முக்கியத்துவம் அளித்தனர் என்பதைக் கவிஞர்களையும், பாணர்கள், பாடினிகள், கூத்தர்கள், கூத்தியர், சிற்பிகள், ஓவியர் ஆகியோரையும் வரவேற்றதினின்றும், அவர்கட்கும் பரிசில்களை அள்ளி, அள்ளி வழங்கியதினின்றும் புலப்படுகின்றது. ஓர் சமுதாயத்தின் நிலையினைக் கலை பிரதிபலிப்பதாகும். ஓர் சமுதாயம் உன்னத நிலையில் இருக்கும்பொழுது, அச் சமுதாயத்தின் கலையும், கலைஞர்களும் உன்னத நிலையில் இருந்தனர் எனவும், சிறந்த உயர்ந்த கவிஞரும் கலைஞரும் தோன்றினர் எனவும் நாம் சரித்திர வாயிலாக அறிய முடிகின்றது.

கலையினை இயல், இசை, நாடகம் எனும் முக்கிய கலைகளாகப் பிரிக்கலாம். இவை உயிர்த்துடிப்புள்ள கலைகளாகும். இதைவிட உயிர்த்துடிப்பற்ற ஆனால் மனுதனின் உணர்ச்சியைப் பிரதிபலிக்கும் சிற்பம், ஓவியம் முதலிய கலைகளும் உள்ளன.

முக்கலைகளில் இயற்கலையானது மனிதனது செவிக்கும், அறிவிற்கும் விருந்தளிப்பதுடன் மனிதனது மன உணர்ச்சியைப் பிரதிபலிக்கும் பிம்பமாகும் வெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைநடை மூலம் எடுத்துக் கூறமுடியாத பல விடயங்களைக் கவிதை மூலம் தெளிவாகவும் சிறப்பாகவும் எடுத்துக் கூற முடியும். மக்களைக் கவர்வதற்கு உரை நடையிலும் கவிதையே சிறந்த சாதனம்.

இசைக்கலையினை நோக்குங்கால், இசை மனிதனது உணர்ச்சியை வெகுவாகத் தூண்டக்கூடியது. தூய இசை, அதாவது தூய்மையான இராகத்துடனும், அதற்கு ஆதாரமான சுருதியுடனும் கூடிய இசை மனிதனைத் தனை மறக்கச் செய்து, தன் சுற்றுடலை மறக்கச்செய்து, இசையுடனே ஒன்றச் செய்து இசையின் இனிய ரீங்காரத்துடன் இதயத்தைப் பின்னிப் பிணையச் செய்து, ஆத்ம உணர்ச்சியைத் தூண்ட வல்லது. மனிதனை மட்டுமன்றி மிருகங்களைக் கூடக் கவரவல்லது தூய இசை. அவ் இசையின் வடிவத்தினை இயற்கையில் கூட நாம் கண்டுகளிக்கலாம். மலையின் அருவியிலே, கடலின் ஓசையிலே, தென்றலின் நாதத்திலே எங்கும் இசைவடிவினைக் காணலாம்.

அடுத்து நாடகக் கலையினை எடுத்து நோக்கின் இது மனிதனுக்குக் கேள்வி இன்பத்துடன் காட்சியின்பத்தினையும் ஒருங்களிப்பது. இராகம், தாளம், பாவம் மூன்றும் ஒன்றிணைந்து விளங்கும் நடனக்கலை நாடகக்கலையின் ஓர் அம்சமேயாகும். நடனத்தின் உயிர்நாடியாம் தாளலயத்துடனும், ராக அமைப்புடனும், பாவ வேறுபாட்டுடனும் விளங்கும் பரதக்கலை தெய்வீகத்தன்மை பொருந்தியது. மனிதனை மெய்மறக்கச் செய்கின்றது.

சிற்பம், ஓவியம் ஆகியன காட்சியின்பத்தை அளிப்பதுடன் காலாதி காலமாக அழியாது விளங்கி, அக்கலைஞனின் கைவண்ணத்தை எடுத்தியம்புவதாம் கலைஞன் இறப்பெய்தினாலும் அவனால் படைக்கப்பட்ட இப்படைப்புகள் அழிவதில்லை.

கலையின்றி மனிதனில்லை, மனிதனின்றிக் கலை இல்லை என்று கூறும் அளவிற்கு மனிதனுக்கும் கலைக்கும் நெருங்கிய தொடர்புளதால், கலையின் முக்கியத்துவத்தினைச் சிந்திக்கும் ஆற்றல் படைத்த மனிதர் எவரும் மறுக்கமாட்டார். ஆதலால்,

"கலைக்கோயில் கட்டிட வாரீர்"

*பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்*
*தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்;*
*இறவாத புகழுடைய புதுநூல்கள்*
*தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்!*

— பாரதி

*வெளியுலகில் சிந்தனையில் புதிது புதிதாக*
*விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெல்லாம் கண்டு,*
*தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து*
*செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்!*

— பாரதிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து இலக்கியங்கள்

வி. ரி. ஏ. விஸ்வா

எங்கள் தமிழ் இலக்கியங்கள் சங்க காலத்திலிருந்து இன்றுவரை தாய்த் தமிழகத்தில் நாளுக்குநாள் வளர்ச்சியடைந்து வருகிறது. ஆனல் இலக்கிய வளர்ச்சியை அடிப்படையாகக்கொண்டு பார்க்குமிடத்து நாம் வருந்தத்தக்க தோல்வியையே காண்கிறோம்.

இதற்குக் கணக்கற்ற காரணங்கள் இருந்தும் முக்கிய காரணங்களான இலக்கியம் படைத்தோர், இலக்கியம் படிப்போர், இலக்கியம் பரப்புவோர் என்ற மூன்று காரணங்களேயும் எடுத்து ஈழத்து நிலேயில் ஆராய்வோமானல், ஈழத்து இலக்கிய வளர்ச்சியின் தோல்விக்குக் காரணமென்ன என்ற கேள்விக்குப் பதில் கிடைக்கும்.

**இலக்கியம் படைப்போர்:**

முதலாவது காரணமான இலக்கியம் படைப்பவர்களே எடுத்து ஆராயுமிடத்து, இலக்கியப் படைப்பாளர்கள் தெளிந்த நூலறிவும், பரந்த மனிதாபிமானமும், விரிந்த மனோபாவமும், கட்டுப்பாடற்ற மனமும், அடிமையற்ற நிலேயுங் கொண்டவர்களாகவும், சமூக, பொருளாதார சிந்தனைகள் நிறைந்தவர்களாகவும் இருக்க வேண்டும்.

மேற்கூறப்பட்ட திறமைமிக்க பலர் நம் ஈழத்தில் இருந்தும் சந்தர்ப்பங் கிடைக்காத காரணத்தால் அடர்ந்த காட்டில் கனியும் நற்கனிபோல் கண்ணுக்குத் தெரியாமல் கைக்ககப்படாமல் இருக்கிறார்கள். சிலர் உண்மையான இலக்கியங்களேப் படைக்க முயல்கிறார்கள். இன்னும் சிலர் இலக்கியம் என்ற போர்வையில் ஆபாச இலக்கியங்களேப் படைத்துப் பணமாக்குகிறார்கள்.

ஆதலால், இந்நிலே மாறிச் சிறந்த இலக்கியம் படைப்போர்களான இயற்கைவாதம், கற்பனவாதம், யதார்த்தவாதம் ஆகியவற்றை அறவே ஆராய்ந்து பாரபட்சமின்றி சொற்சுவை பொருட்சுவை நிறைந்த இலக்கிய நயங்கலந்த மக்களுக்கேற்ற இலக்கியங்களேப் படைப்போர் நம்மத்தியில் தோன்றுவதன்மூலம்தான் ஈழத்திற் சிறந்த இலக்கியங்கள் உருவாகும்.

**இலக்கியம் படிப்போர்:**

இரண்டாவது காரணமான இலக்கியம் படிப்போரை எடுத்து ஆராயுமிடத்து ஈழத்து மக்களிற்பலர் இலக்கிய ரசனேயற்றவர்களாக இருக்கிறார்கள். இன்னும் பலர் ஆபாச இலக்கியங்களே விரும்பிப் படித்து மனத்தையும், பணத்தையும், நேரத்தையும் கெடுத்துக்கொள்கிறார்கள். இலக்கிய ரசனேயுடையவர்களிற் சிலர் பாகுபாடான முறையிற் தாய்த்தமிழகத்திலிருந்து வெளியாகும் குறிப்பிட்ட ஒருசிலரின் இலக்கியங்களே ரசனேயுடன் படிக்கிறார்கள். ஒருசிலர் தான் ஈழத்து இலக்கியங்களே உண்மை ரசனேயுடன் படிக்கிறார்கள்.

எனவே, ஈழத்து இலக்கியங்களே விரும்பிப் படிப்போர் ஈழத்தில் அதிகரித்தால் தான், ஈழத்தில் இலக்கியங்கள் படைப்போர் அதிகரிப்பார்கள். இதன்மூலந்தான் ஈழத்திற் சிறந்த இலக்கியங்கள் தோன்றும்.

**இலக்கியம் பரப்புவோர்:**

மூன்றாவது காரணமான இலக்கியம் பரப்புவோரை எடுத்து ஆராயுமிடத்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தில் வெளியாகும் சஞ்சிகைகளின் நிலை புலனாகும். காலையில் மலர்ந்து மாலையில் உலர்ந்துபோகும் மலர்களைப்போல் தோன்றித் தோன்றி மறைந்துகொண்டிருக்கும் நிலையற்ற ஈழத்துச் சஞ்சிகைகள் எப்படி ஈழத்து இலக்கியங்களைப் பரப்பி வளர்க்கமுடியும்? ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு அதி முக்கிய சாசனமாக விளங்குவது இலக்கியம் பரப்பும் ஈழத்துச் சஞ்சிகைகள் தான்.

ஈழத்துச் சஞ்சிகைகள் நிலையான இடத்தைப் பெற்று மக்கள் மனதில் அழியாத இடத்தைப் பெறவேண்டுமானால் தமிழகத்திலிருந்து வெளிவரும் புகழ்பெற்ற இறக்குமதிச் சஞ்சிகைகள் தடைசெய்யப்படுவதுடன் ஈழத்து மக்களின் இதயங்களில் இலக்கிய ரசனையும் உண்டாகவேண்டும். இலக்கியம் பரப்பும் ஈழத்துச் சஞ்சிகைகள் பெருகுவதின்மூலம்தான் ஈழத்தில் இலக்கியம் படைப்போரும், படிப்போரும் பெருகிச் சிறந்த இலக்கியங்கள் தோன்றும்.

எனவே ஈழத்தில் சிறந்த இலக்கியம் படைப்போர் தோன்றி, இலக்கியம் படிப்போர் பெருகி, இலக்கியம் பரப்புவோர் அதிகரித்தால்தான் ஈழத்திற் சிறந்த இலக்கியங்கள் உருவாகி வளர்ச்சியடையும் என்பது கண்கூடான உண்மை.

அரியாலை சனசமூக நிலையப் படிப்பகம் ஈழத்து இலக்கியம் வளர — ஈழத்து இலக்கியப் படைப்புகள் வாசகர் உள்ளங்களில் உரிய இடத்தைப்பெற, ஈழத்துச் சஞ்சிகைகளுக்குத் தனிப்பெரும் இடத்தைக் கொடுத்து, வாசகர்களுக்கு ஈழத்துச் சஞ்சிகைகளை நிறைய வழங்குகின்றது. இந்த அரும்பெரும் இலக்கியத் தொண்டைத் தேசிய உணர்ச்சியுள்ள ஒவ்வொரு இலக்கிய இரசிகனும் பாராட்டாதிருக்க முடியாது.

வளர்க ஈழத்து இலக்கியம்!
வாழ்க தேசிய உணர்ச்சி!!


# வெள்ளிவிழாவுக்கு

## எமது நல்லாசி!

# ஸ்ரீ பார்வதி அச்சகம்

288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். போன்: 689


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# கசந்த அனுபவம்

திரு. ந. கிருஷ்ணசிங்கம்

சூதாட்டத்தால் அரசிழந்த பாண்டவர்கள்; அதேமுறையில் நாடு நகர் இழந்த நளமகாராசன்... அரிச்சந்திர மகாராசன் இப்படி மகாராசாக்களின் நினைவுகளும்... அவர்களைச் சூது சூறையாடிய சம்பவங்களும் மீண்டும் மீண்டும் சிற்றம்பலத்தாரின் சிந்தனையில் எழுந்துநின்று கூத்தாடின. கடந்த இரவு முழுதும் இதே சிந்தனையுடன் புரண்டுவிட்டு இதேசிந்தனையுடன் எழுந்து நிற்கிறார். நவயுகத்தில் எதிலும் புதுமைகளை விரும்பும் சமுதாயம், தான் பேசப்போகும் பேச்சிலும் புதுமைகளை எதிர்பார்க்கும் என்று தயங்கிய சிற்றம்பலத்தார் சூதெனும் சூறைக் காற்றின் பாதிப்புக்கு நவயுகத்தில் நல்லதொரு உதாரணத்தைத் தேடியலைந்தார். இரவு நித்திரையும், காலை நிம்மதியும் இழந்து வருந்தும் அவருக்கு நடைமுறைவாழ்வில் இன்னும் நல்ல உதாரணம் கிடைக்கவில்லை. அவரின் முறுக்கிவிடப்பட்ட சிந்தனையில் மீண்டும் மீண்டும் புராணகால - சரித்திரகால சூதாடிகளான மகாராசாக்கள்தான் எட்டி எட்டிப் பார்த்தார்கள். விடுபட முடியாத சிந்தனைச்சிக்கல்களுடன் சிற்றம்பலத்தார் நாலு வாளி நீரை உடலிலே ஊற்றிவிட்டுப் பூசை அறைக்குள் புகுந்து கதவை மூடிக்கொண்டார்.

கூட்டம் கொஞ்சலி; பேச்சு... உபந்நியாசம் இவற்றுக்கெல்லாம் மிகவும் பயந்தவர் சிற்றம்பலத்தார். அந்தத் தெருவிலே இருக்கும் சனசமூக நிலையத்தில் ஏதோ கொண்டாட்டமாம். அதில் சிற்றம்பலத்தாரைச் ''சூதும்-வாதும்'' என்ற பொருள் குறித்துப் பேசவேண்டும் என்று நிலையத்தினர் கேட்டுக்கொண்டனர். சூதுவாது தெரியாத சிற்றம்பலத்தார் இந்தப் பேச்சை நிகழ்த்துவது பொருத்தமெனினும் அவருக்குப் பேச்சு வர மறுக்கிறதே!... இத்தனை சங்கடத்துக்கு மத்தியிலும் தன் பேச்சுக் கவர்ச்சியாக — காலத்துக்கேற்றதாக அமையவேண்டுமென்பதும் அவருக்கொரு ஆசை!

சாம்பிராணியும் - கர்ப்பூரமும் கலந்து எழுப்பிய புகைமண்டலத்துள், மான்தோல் ஆசனத்தில்... மெய்மறந்த நிலையில் அமர்ந்திருந்த சிற்றம்பலத்தாரின் வாயிலிருந்து முருக நாமங்கள் உருவாகிக் கொண்டிருந்தன.

அரையிலே தூய வெண்ணிற நாலுமுழமும், உடலிலே பட்டை பட்டையாகத் திருநீறும் — நெற்றியில் சுடர்விடும் சந்தனப் பொட்டும், தசைமடிப்புக்களில் மறைந்து மார்பிலே தவழும் உருத்திராக்கமாலையும், கூப்பிய பொருமிய கைகளும் குத்துவிளக்கின் ஒளியில் மின்னின. செல்வத்தில் செழித்த சிற்றம்பலத்தாரின் உடலிலிருந்து வியர்வை வெள்ளமாக வடிந்துகொண்டிருந்தது.

காட்டிலாகாவில் உத்தியோகம்பார்த்த சிற்றம்பலத்தார் சைவ போசனக்காரர் என்றால் சிறிது வியப்பாகத்தான் இருக்கும்; மாமிசத்தில் கொழுத்துச் செழித்த அந்தக் குடும்பத்தில் இவர் ஒரு நூதனப்பிறவி என்றே சொல்லவேண்டும். இவர் பாவ புண்ணிய விசாரணையில் ஈடுபடுபவராக இருந்தாலும் பார்த்த உத்தியோகம் இவரைப் 'பகா' அடிக்காமல் இருக்கவிடவில்லை; பாவம் பழியை அந்த 'உலாந்தா' உத்தியோகத்தின்மேல் போட்டுவிட்டு, சமயம் வரும்போதெல்லாம் அப்படியே கண்ணை மூடிக்கொண்டு பின்புறத்தால் வாங்கிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பொக்கற்றை' நிரப்பி விடுவார்.

சேர்த்த பணத்தைப்போல் செலவுக்குப் பெண்களாகவே மனிதன் பெற்றுக் குவித்தார். அடுத்தடுத்துப் பட்டணத்திலே ஐந்து வீடுகள் புதிதாக எழுந்தன. அது போல் அடுத்தடுத்து ஐந்து திருமணங்களும் நிகழ்ந்து முடிந்தன. எதற்கும் சிற்றம்பலத்தார் கலக்கமடையவில்லை. உலாந்தா உத்தியோகமும், எல்லையற்று வளர்ந்து கிடந்த காடும் அவருக்கு ஈடுகொடுத்தன.

அறுபது வயதிலே எல்லாச் சுமைகளையும் இறக்கி வைத்துவிட்டு, மாளிகை போன்ற பழைய நாலுசார் வீட்டில் உலக பந்தபாசங்கள் — உலாந்தா வேலை எல்லாவற்றிலுமிருந்து இளைப்பாறிச் சிற்றம்பலத்தார் அமைதியாக வாழத்தொடங்கினார். அவரின் அமைதியை இடைக்கிடை இடித்து விழுத்தும் அவரின் வாயாடி மனைவியும், அரைகுறைத் தமிழ்பேசும் சிங்கள வேலைக் காரனையும் தவிர அந்தப் பெரிய வீட்டில் மனித நடமாட்டமே இருக்காது.

இப்பொழுதெல்லாம் அவரின் வாழ்வில் பெரும்பகுதி அந்தப் பூசையறையில் - பழனி அப்பரின் பக்கத்தில் கழிந்துகொண்டிருந்தது. காசைப் பொறுத்தமட்டில் சிற்றம்பலத்தாரின் கை கொஞ்சம் கட்டைதான். பல வருடங்கள் உடலுடன் ஊறிவிட்ட கஞ்சத்தனம் அவரைக் கொஞ்சமும் விடவில்லை. மற்றப்படி மனிதன் தங்கமென்றால் தங்கம் தான்.

பலமணிநேரம்... பூட்டிய அறையில் — புகைமண்டலத்தில். பக்தி வெள்ளத்தில் உலக நினைவுகளை உதறி, ஞானப்பழனியின் சுவையிலே ஆழ்ந்து கிடந்த சிற்றம்பலத்தார் கதவுகளைத் திறந்து வெளியேவரவும், அயலில் நடைபெற்றுக்கொண்டிருந்த 'காணிவல்' களியாட்டுவிழாவின் விளம்பர ஒலிபெருக்கி முழங்கவும் சரியாக இருந்தது.

''இன்றைய விசேட நிகழ்ச்சியாகக் கரக ஆட்டம் இடம்பெறும். அற்புதமான ஆட்டம்; பார்க்கத் தவறாதீர்கள்...!'' — அறிவிப்பு மீண்டும் மீண்டும் அலறியது. சிற்றம்பலத்தாரின் கைகள் காதுகளைப் பொத்திக்கொண்டன; வாயோ 'முருகா!' எனக் குளறியது. கரக ஆட்டத்தின் மறைவில் நடைபெறும் ''சூதாட்டத்தை'' அவர் எண்ணியிருக்கவேண்டும்.

''ஐயா .. உங்களைத்தான் பார்த்துக் கொண்டு நிக்கிறன்.. !'' தூண் மறைவிலே அனுங்கிய அந்த ஈனக்குரலைக் கேட்டுச் சிற்றம்பலத்தார் எட்டிப்பார்த்தார்.

தூணோடுதூணாகக் குட்டைநாய்போல் ஒட்டிக்கொண்டுநின்ற கணேசு தட்டுத் தடுமாறித் திண்ணையிலே ஏறி இருந்தான்.

''முருகா ...! உதென்ன கோலம் மோனை... உன்ரை கொப்பு இருந்த நிலை... உன்னை வளர்த்த வளர்ப்பு...'' சிற்றம்பலத்தார் கதையை முடிக்காமல் கணேசுவை ஏற இறங்க ஒருமுறை பார்வையால் அளந்தார். அவரின் அந்தப் பரந்த முகத்தில் பிதுங்கிநிற்கும் கன்னச் சதைகளின் இடுக்கில், அனுதாப உணர்ச்சி எட்டிப் பார்த்தது.

''ஐயா .. நீங்கள் இப்ப ஒரு பெரிய உதவி செய்யவேணும். இல்லையெண்ண மாட்டியள் எண்டுதான் வந்தனான்.'' அவனின் காய்ந்து வரண்ட தொண்டையைக் கீறிக் கிளித்தபடி வார்த்தைகள் கோவையற்றுச் சிதறின.

